செந்தமிழே கொடுமலையாளம்

எஸ். எம். ஜெகநாதம்.
நாகர்கோவில்.

உ

செந்தமிழே கொடுமலையாளம்

க. ச. சங்கரராமன்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

எஸ். எம். ஜெகநாதம்,
புத்தகவியாபாரம், நாகர்கோவில்.
சர்வதாரி ௵.

1938

முன்னுரை

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை" யும்,

"பிறவுந் தம்போற் செய" லும்,

மொழிநூல் வல்லுநர் அனைவர்க்கும் ஒருங்கே அமைய வேண்டும் பண்புகளாவன.

மலையாள மொழியின் தோற்றுவாய் பற்றிய சர்ச்சை, இத்துணை வழியே நேர் சென்று, கோடா முடிபு அடைந்திலது எனல், பொய்யுரையாகாது. மாமி ஒட்டினும் மட்கலம் ஒட்டாக் கதைபோன்று, அறிவு, மெய்ப்பொருள் கண்டவிடத்தும், மனம் மருளுதல் இயல்பே.

இக்கட்டுரைத் தலைப்பை நோக்குழி உண்டாகும் திகைப்பு, பேரளவில் மாத்திரமே உளது, இதனை உற்று நோக்குவார்க்கு, எளிதிற் புலனாகும்.

தமிழும் மலையாளமும் உடன் பிறந்த மொழிகளாகக் கொள்வர் பல்லோர்; தமிழ் உதிரத்தில் மலையாளம் கருவுற்றதெனக் கருதுவர் ஏனையோர். தனித்தும் சேர்ந்தும், மெய்க்கூற்று, இதுவும் அன்று, அதுவும் அன்று. பழந்தமிழே இன்றைய கொடுமலையாளம். விளங்கக் கூறின், செந்தமிழே கொடுமலையாளம். இன்றைய தமிழ் மொழிச் சொற்களிற், பெரிதும் தூய்மையும் சீர்மையும், தொன்மையும், நேர்மையும், படைத்த நறுமணங் கமழ்ச் செந்தமிழ்ச் சொற்கள், மலையாள மொழியில் மல்கிக் கிடப்பதே தனிச் சான்றாகும். பிற முறையே,

பொதுவாக, இந்திய மொழிகள் எல்லாம் ஆரியத்திற்குத் தலை சாய்த்தன; மலையாளமோ, அடி பணிந்து,

தன்னையும் மறந்து, தன் உரிமையையும் இழந்தது. இது கிடக்க. ஆரியத்தைப் போல் உரம் பெற்றதும், மேம்பட்ட வாழ்வு படைத்ததும், தமிழ். ஆகவே, மலையாள மொழியின் வருங்கால உயர்ச்சி, அம்மொழியின் பண்டைய தமிழ்வேரில் ஊன்றப் பெறின், நன்றாகும். இது மலையாள மொழியாளனுடைய குறிக்கோளாக அமைதல், தலை.

நடையும் கிடையும், தலைப்புக்கு ஏற்ப, அதனை விளக்குவதாய் சிற்சில இடங்களில் வாய்ந்துள்ளன. மேற்கோள்களும், விளக்கக் குறிப்புக்களும் வியாசத்தின் போக்கிலேயே, குற்றம் பொருந்தா முறையில், அந்தந்த இடங்களில் இடம் பெறுகின்றன. எளிமை கருதி, உறுப்பிசைக்குறி (,) அநுவாதக் குறி (“ ”) இவை சற்று மிகுதியாகக் கையாளப் பட்டிருக்கின்றன.

தமிழ் மலையாள இலக்கிய இலக்கண நூற் பரப்பிற் சிதறுண்டு கிடக்கும் மணிகளிற் சில, மக்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளிற் சில, ஏனைய பிற, அப்படி அப்படியே, இதில் பொருத்தப் பட்டிருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, ஓவியம் ஒன்றும் தீட்டப்படவில்லை, கொள்கை ஒன்றும் உருவாக்கப் படவில்லை. இவை, அறிவின் மிக்கார் கடன்களாம்.

பிழைகளையும் குறைகளையும் பொறுத்தருளுமாறு அறிவுடைய உலகம் வேண்டப் படுகின்றது.

துணைபல புரிந்து, இதனை வெளிப்படுத்தும் திரு எஸ். எம். ஜெகநாதபிள்ளை அவர்கட்கு உரித்தாகும் பரிவு ஆழமுடைத்து.

“திருச்சிற்றம்பலம்” திருமலை;
திருவனந்தபுரம்.
௲௱௨௰௪-ம் ௵, ஆவணி ௴
௧—ம் ௳.

க. ச. சங்கரராமன்.

செந்தமிழே கொடுமலையாளம்.

"மலையாளம்" என்னும் சொல் இரு பொருளைக் குறிக்கும். ஒன்று ஒரு மொழியின் பெயர். அம்மொழி வழங்கும் நாட்டின் பேர் மற்றது. இச்சொல்லின் தோற்றுவாயைப் பற்றிய கூற்றுக்கள் பலவுள. அவை, பெரும்பாலும் நகைப்பிற்கு இடம் தருவனவே தவிர, உண்மை உரைப்பன அல்ல. தத்தம் கொள்கையை நிலைநிறுத்த கட்டிச் சமைத்துக் கூறுவது எழுத்தாளர்க்கு வழக்கம். எதுவும் காரணத்தோடு இருக்க வேண்டும். எதிர் வழக்காடலுக்கு இடம் தரா திருத்தல் நலம். இது பொது நியமம்.

நிற்க. மலையாள நாட்டு மக்களால் பெரிதும் ஒப்புக் கொள்ளப்பட்ட சொல் வரலாறு இது. மலையாளம் என்னும் சொல்லை, மலை–ஆளம் (ஆழம்) என்று பதம் பிரித்து, மலையும் ஆழமும், குன்றும் குழியும், கொண்ட நாடு என்று பொருள் கொள்வதே. இச்சொல்லும், இது வந்த வழியும், அந்நாட்டு இயற்கை அமைப்பிற்குப் பெரிதும் பொருத்தமானவையே. ஆனல், சொல்லிலக்கணம் இத்தகைய தனிச் சிறப்பிற்கு இடந் தருவ தில்லை.

மலையாள நாட்டு வாசியைக் குறிக்கும் மலையாளன் அல்லது மலையாளி என்ற சொல்லை ஆராயவே, மலையாளம் என்னும் வார்த்தையின் உண்மைப் பொருள் விளங்கும். மலையாளன் அல்லது மலையாளி என்னும் சொற்றொடர் இரு கூறு கொண்டது. மலை + ஆளன் = மலையாளன்; மலை + ஆளி = மலையாளி; ஒவ்வொன்றும், மலையும் ஆழமும், குன்றும் குழியும், கொண்ட நாட்டை ஆள்பவன், அல்லது அந்நாட்டில் வாழ்பவன், என்ற பொருளைத் தரும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில உதாரணங்கள் வழி புதைந்து கிடக்கும் பொருளை விளக்குவது உதவியா யிருக்கும்.

பிணியாளன் (பிணி + ஆளன்) = வியாதி உடையவன்; மணவாளன் (மணம் + ஆளன்) = மணக்கோலம் பூண்டவன்; கரையாளன் (கரை + ஆளன்) = கரை, (தாலுகாவின் ஒரு பகுதிக்கு)த் தலைவன்; வேளாளன் (வேள் + ஆளன்) = பயிர்த்தொழில் செய்பவன்;

"மராமரம் ஏழ் எய்த வென்றிச் சிலையாளன்" = ஏழு மராமரங்களை ஒரே அம்பால் வீழ்த்திய வெற்றி வில்லை ஏந்தியவன், (ஸ்ரீ இராமன்); 'மெய்ய மலையாளன்' = மெய்ய மலைக்கு அதிபன்.

"கலையாளா வகல்குல் கள்வனையும் கையாளா வென்செய்கேன் [கேள் நான்
விலையாளா வடியேனை வேண்டுதியோ வேண்டாயோ வென்று [மெய்ய
மலையாளன் வானவர்தம் தலையாளன் மராமரமே ழெய்த [வென்றிச்
சிலையாளன் என்மகளைச் செய்தனக் கெங்ஙனம் நான் சிந்திக் [கேனே"

பெரிய திருமொழி, 5-ம், 5தி

நோயாளி (நோய் + ஆளி) = நோய் உடையவன்; இரப்பாளி (இரப்பு + ஆளி) = இரக்கும் தொழில் உடையன்; முதலாளி, (முதல் + ஆளி) = முதலை உடையவன்;

கொற்கையாளி (கொற்கை + ஆளி) = கொற்கைத் துறைக்கொற்றவன்:-

"வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றங் களைவோர் குறைவி லாதவரே"

வெற்றிவேற்கை—காப்பு.

நாவலூராளி (நாவலூர் + ஆளி) நாவலூர் பதியில் வாழ்பவன்:-

"நாவலூராளி நம்பி வன்றொண்டன்"

தேவாரம்—942—10.

இந்த உதாரணங்களின் ஈற்றுப் பிரிவாகிய "ஆளன்", "ஆளி" என்னும் பதங்கள், ஏறக்குறைய உடைமைப் பொருளில் வருகின்றன. ஆளன் என்ற சொல், ஆள் + அன், என்று பிரியும். ஆள் என்பது ஆள்வதற்கு-ஆள, என்ற பொருளை உணர்த்தும்; அன், ஆண்பால் விகுதி. ஆகவே, மலையாளன் என்ற சொல், மலை + ஆள் + அன், என்னும் பதங்களின் புணர்ச்சியால் ஏற்படுகிறது. மலையாளன் என்னும் தொடர் மொழி, முன்னர் குறிப்பிட்டவாறு, மலைநாட்டு மன்னன், அல்லது, மலைநாட்டில் வாழ்பவன், என்பவனைக் குறிக்கும்: மலையாளி என்பதற்கும் இதுவே பொருள். மலையாளன் அல்லது மலையாளி, வாழும் நாடு, மலையாளம் ஆகும். அம் இடப் பெயர் விகுதி.

"ஆள்" உள்ளிட்ட பெண்டாட்டி, மணவாட்டி போன்ற வழக்கி லிருக்கும் பெண்பாற் சொற்கள் வழியாலும், பொருள் இனிது விளங்கும்.

சில நூல் உதாரணங்களும் தரப் பெறுகின்றன:-

"பொருள்விலையாட்டி"—மணிமேகலை

"கடவுட் பொறையாட்டி; தேவராட்டி."

—பெரியபுராணம்

"ஆர் அஞராட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், புறஞ்சேரியிறுத்தகாதை; வரி 80.

"அருவி முல்லை யணிநகை யாட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், புறஞ்சேரியிறுத்தகாதை; வரி 165.

"மாதவத்தாட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அடைக்கலக்காதை; வரி 10.

"மூதறிவாட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், [வேட்டுவவரி; வரி 51.

"அரியின் உரிவை மேகலை யாட்டி."—சிலப்பதிகாரம், [மதுரைக்காண்டம், வேட்டுவவரி; வரி 62.

"கள்விலையாட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக்காண் [டம், வேட்டுவவரி; செய்யுள் 13.

"குடமலையாட்டி"—சிலப்பதிகாரம், மதுரைக்காண் [டம், வேட்டுவவரி; வரி 47.

[குடமலையாள நாட்டினை யாளும் செல்வி என்று பொருள் கூறிப் போந்தார் உரையாசிரியர்]

மலையாட்டி-மலைநாட்டில் வாழ்பவளைக் குறிக்கும். கலையாளத்தி என்பது காளியின் திருநாமம். காளி கலைமானை ஊர்தியாக விரும்புபவள்-பெருங்கதை, உஞ்சை, பாலை நிலங் கடந்தது; வரி 24.

இந்நாட்டின் பழைய பெயர் மலைநாடு. இம்மொழி வழக்கு பண்டை இலக்கிய நூல்கள் வழியாகவும், கல்வெட்டுக்கள் வாயிலாகவும், வரும் எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளங்கும்.

கண்ணகி, (பத்தினித்தெய்வம்) மேற்றிசை நோக்கிச் சென்ற செய்தியை சிலப்பதிகாரம் தெரிக்கின்றது.

"கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென"

சிலப்: மதுரைக்காண்டம், கட்டுரைகாதை; வரி 182, 183.

"பின்பு கண்ணகி மதுரையை நீங்கி, வையைக் கரை வழியே மேற்றிசை நோக்கிச் சென்று, மலைநாடடைந்து, அதிலுள்ள திருச்செங்குன்றென்னும் மலைமேலேறி, ஒரு வேங்கை மரத்தினீழலினின்று, பதினாலாவது தினத்தின் பகல் சென்றபின்பு, அங்கே தெய்வ வடிவத்தோடு வந்த

கோவலனைக் கண்டு களித்து, அவனுடன் விமானத்தின் மேலேறித் தேவர்கள் போற்றும் படி சுவர்க்க மடைந் தாள்'':

(உ. வே. சா. சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம். பக். 55)

தேவாரம்-மலைநாட்டைப் பற்றிக் கூறுவதாவது:-

சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத் தொண் டர் புராணம் என்னும் பெரியபுராணம்—விறன்மிண்ட நாயனார் புராணம் முதலாவது பாடல் பின் வருமாறு:-

"விரைசெய்நறும்பூந்தொடையிதழி வேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமாதவமுனிவன் பரசிராமன்பெறுநாடு
திரைசெய்கடலின் பெருவளனுந் திருந்துநிலனின்செழுவளனும்
வரையின்வளனுமுடன்பெருகி மல்குநாடுமலைநாடு"

அந்தப் புராணத்தில் ஆறாவது பாடல் முதல் வரி கீழ்க் காணுமாறு:-

"பொன்றாழருவி மலைநாடுகடந்து கடல்சூழ்புவி"

பெரியபுராணம் கழறிற்றறிவார் புராணம்—தாழே தருமாறு:-

"சங்கப்புலவர் திருமுகந்தந் தலைமேற்கொண்டு பத்திரனு
ரங்கப் பொழுதே புறப்பட்டு மலைநாடணைய வந்தெய்தித்
துங்கப்புரிசைக் கொடுங்கோளூர் தன்னிற்புகுந்து துன்னுகொடி
மங்குற்றொடக்க மாளிகைமுன் வந்துமன்னர்க் கறிவித்தார்"

திருநெல்வேலி ஜில்லா, மன்னூர் கோவில் கல்வெட்டு ஒன்றில் மலைநாட்டு நம்பூரி ஒருவர், (மலை நாட்டிலிருந்து வந்த நம்பூதிரி) மலை நாட்டு மன்னர் குலசேகராழ்வாரின் படிவம் சமைத்த செய்தி, கூறப்பட்டிருக்கின்றது.

திருவாங்கூர் அரசாங்கத்தார் ஆணைப்படி., திருவாளர் டி. ஏ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள் வழி வெளிவந்த "புதை பொருள் புலர்த்துத் தொகுதி'', இலக்கம் I. 4-5 பக்

கங்களில், விவரித்துக் காணப்படும் மாரஞ்சடையனது கழுகுமலைக் கல்வெட்டில், (855 கி. பி.) ஒரு அரசனுடைய பெயர், "மலைநாட்டுக்கருநந்தன்" என்று காணப்படுகின்றது.

"தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்" தொகுதி I பக்கம் 90-ல் காணப்படும் இவ்வெண்பா, "ஆதிராமன் கேரளன்" என்னும் மலைநாட்டுப் பெருவணிகனின் வள்ளன்மையை வெளிப்படுத்துகிறது.

"பொய்கை யருளாளரைப் புனைந்து புத்தூரும்
ஐயமறக் கொண்டவர்க் கூருக்கினான்—செய்யமலர்
மாதுயரா நின்றமலை நாட்டுவாழ் வணிகன்
ஆதிரா மன்கே ரளன்"

மேலும் பல ஆதாரங்களும் காணக் கிடக்கும்.

"மலைமண்டிலம்" என்ற வேறொரு பெயரும் இந்நாட்டிற்குப் பழைய காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது.

"பொய்கைப் பொறிப்புக்களில்" (தென்னிந்தியக் கற்பொறிகள் தொகுதி I. பக்கம் 86) "மலை மண்டிலத்து வியாபாரி" என்ற சொற்கூட்டம் காணப்படுகின்றது. வேறு சில கல்வெட்டுக்களும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன.

தென் திருவாங்கூர் "பறக்கை" கல்வெட்டொன்றில் "மலை மண்டிலத்து திருவாட்டாற்று தேசம்" என்று குறிக்கப் பட்டிருக்கின்றது.

"எபிகிராபியா இந்திகா" தொகுதி III பக்கம் 198-ல் கீழ்க் காணும் குறிப்பு உளது.

"மலை மண்டிலத்து மஹோதையர் பட்டிணத்து ஈராபிரன் செறியாறன சிகுலசேகர நம்பியேன்.... இது ஸ்ரீ இதர்மம் மலை மண்டிலத்தான்....முதலியன".

"தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்" தொகுதி I பக்கம் 89 ல் காணப்படுவது இது:-

"அனைத்து நெல்லாயங்களும் உட்பட திருவிளையாட்டமாக மலைமண்டிலத்து ஆயனூர் சிராமன் கேரளன் பக்கல் கொண்டு" முதலியன.

மலைநாட்டு மன்னனை "மலை நாடன்" என்று கூறுவர்.

"மலை நாடன்" என்னும் சொல், சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம், குன்றக் குரவையில் இடம் பெறுகிறது. (ந. மு. வெங்கடசாமி நாட்டார் அவர்கள் பதிப்பு பக்கம் 491.)

"நேரிழை நல்லாய் நகையா மலைநாடன்
மார்பு தருவெந்நோய் தீர்க்க வரும்வேலன்
தீர்க்க வரும்வேலன் தன்னினுந் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்"

செய்யுள் 13

"என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங் கண்ணி மலைநாடன் போவான்முன்
சென்றேன் அவன்றன் திருவடி கைதொழுது
நின்றேன் உரைத்தது கேள்வாழி தோழி"

செய்யுள் 18

மலைநாட்டு மன்னனுக்கு சிறுபான்மையாக "மலையான்" என்னும் பெயருமுண்டு.

"மலையான்" என்ற சொல், புறப்பொருள் வெண்பா மாலை, பொதுவியற்படலம், முதல் பாட்டின் உரை யிடை வருகின்றது:-

"குடையோன் மலரும் கோடலை யுடைய தன் கொல்லிமலைச் சுனையிடத்துக் கட்டலரும் குளிர்ந்த செங்கழு நீர்ப் பூவை மலையான், பக்கம் விளங்கும் பகைவர் தேர்த் தானைநடுங்க........சேரன்......"

"மலையுத்தமன்" என்ற அரிய வழக்கும் உண்டு.

''அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
விரமலிவாணன் வந்துவழிதந்தெனக்கேறுவதோர்
சிரமலியானைதந்தானொடித்தான்மலையுத்தமனே''

தேவாரம்—சுந்தரமூர்த்தி ஸ்ரீ கயிலாயம்

மலை நாட்டின் பண்டை எல்லைகள் தெளிவாகத் தெரிந்த பாடில்லை.

கிழக்கே, மலை, மேற்கே, கடல், தெற்கே, குமரி, வடக்கே, கோகர்ணம். (மலையாள இலக்கிய வரலாறு—பக்கம் 13. ஆசிரியர் திரு. கோவிந்தப்பிள்ளை அவர்கள்; "கேரளோல்பத்தி"; இவை பார்க்க.) இவ் வெல்லைக்குள் மலையாள நாடு இருந்ததாக மக்கள் சாதாரணமாக நம்புகின்றார்கள். இந்த எல்லையை உண்மையென்று கொண்டால் துளு, குடகு, என்னும் வெவ்வேறு பாடைகள் பேசப்படும் துளு நாட்டிற்கும், குடகு தேசத்திற்கும், இதனுள் இடம் கொடுக்க வேண்டும். இந் நாடுகளும் மலையாள நாட்டைப் போன்று பழமை வாய்ந்தவை என்னும் உண்மையை தொல்காப்பிய உரையாசிரியர்கள், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், சேனவரையர், உறுதிப் படுத்துவார்கள். இந்த அடிப்படையில் மலைநாடு, மேலே கூறப்பட்ட கிழக்கு மேற்கு எல்லை யிடைப் பட்டு, தெற்கே குளச்சல் (குளச்செய்)முதல் வடக்கே தலைச்சேரி வரை, நீண்டு கிடந்திருக்க வேண்டு மென்பது, வெளிப்படை.

[தலைச்சேரி என்பதை பினிஷியர்கள் "டார்ஷிஷ்" எனக் கொண்டனரோ? "தலைச்சேரி" போலியாக 'சேரித் தலை' 'சேர்த்தலை' யாயிற்றோ..........?]

இப்பொழுது மலையாளம் என்று அழைக்கப்படும் நாடு, பண்டைச் சேர நாட்டின் ஒரு பாகமாக இருந்தது. கம்பர் இயற்றியதாகக் கருதப்படும் இப் பாவில் சேர நாட்டு எல்லைகள் குறிக்கப் பட்டிருக்கின்றன.

"வடக்குத்தலம்பழனிவாழ்கீழ்ச்செங்கோடு
குடக்குத்திசைகோழிக்கூடாம்-கடற்கரையின்
ஓரமதுதெற்காகும் ஓரெண்பதின்காதம்
சேரநாட்டெல்லையெனச்சிறப்பு"

அந்த எல்லைகளாவன:-

வடக்கே: பழனி, (திருவாவி நன்குடி)

கிழக்கே: திருச்செங்கோடு, (தேவாரம் கூறும் மலை நாட்டு வைப்பு ஸ்தலங்ளில் ஒன்றுன "கொடிமாடச் செங்குன்றூரும்", சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், கட்டுரை காதை; 188-190 வரிகளில்,

"கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம் அடிவைத் தேறி..........."

குறிப்பிட்டிருக்கும் "நெடுவேள் குன்றமும்",

மேற்கே:- கோழிக்கோடு. (கள்ளிக்கோட்டை)

தெற்கே:- கடல்.

இந்நாடு எண்ணூறு சதுர மைல் பரப் புடையது.

தமிழ்ப்பேரகராதி(1899) 475-பக்கத்தில் இச் செய்தி வெளிப்படுகிறது.

புறநானூறு, இரண்டாம் செய்யுளில், முரிஞ்சியூர் முடிநாகராயர், சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைச் சிறப்பித்துக் கூறும் இவ் வரிகளில்:-

"நின் கடற் பிறந்த ஞாயிறு
பெயர்த்து நின்
வெண்டலைப் புணரி
குடகடற்குளிக்கும்
யாணர் வைப்பின்
நன்னாட்டுப் பொருந....."

சேர நாட்டின் பரப்பு இரு கடலுக்கு மிடையில் உட்பட்டுக் கிடந்தது, என்பதை வலியுறுத்துகின்றார்.

கால்டுவெல் பாதிரியார், தமது "ஒப்புடை இலக்கணத்தின்" (Comparative Grammar) முகவுரை 22-ம் பக்கத்தில், பழய சேர நாடு, சகிய மலைக்கு மேற்கிலும் கிழக்கிலும் பரந்து கிடந்தது என்றும், பின் காலத்தில், அது இரண்டாகப் பிரிந்து, மலையாளம் என்று வழங்கும் மேற்கு நாடும், கொங்கு நாடு என்றும், சேர நாடு என்றும், இரு பெயர் கொண்ட கிழக்கு நாடும், ஆக உரு வெடுத்தது என்றும் உரைக்கின்றார். இந்துக்கூஷ் பர்வதத்தின் கிழக்கிலும் மேற்கிலும் கனிஷ்கனுடைய நாடு நீண்டு கிடந்தது. பின்னாட்களில், ஜெங்கிஸ்கானுடைய அரசாட்சி, இந்துக்கூஷ் மலையின் மேற்கிலும் கிழக்கிலும் நடைபெற்றது. மலைகள், நாடுகளை சிறுபான்மையிற் பொருத்தும். பொதுவாக, மலைகள், நாடுகளுக்கு எல்லைகளாகவே அமைகின்றன.

சர்: வால்டர் எலியட், தமது "நூமிஸ் மாட்டிகா ஓரியண்டாலா" (Numis Matica Orientala-*1886*, பக்கம், 4-ல், இக் கருத்தை வெளியிடுகிறார்.

கடலோர மேற்றிசை உள் நாடுகள் முழுதும் சேர நாடு. நெல்லூருக்கும் கீழைக் கடலுக்கும் இடையில் தான் திராவிட தேசம். கி. பி. முதல் நான்கு நூற்றாண்டுகளில் தமிழ் நாடுகள் மூன்றனுள்ளும் மிகவும் உயரிய பதவியி லிருந்த சேர நாடு, நான்காம் நூற்றாண்டின் இறுதியில் வலிமை குன்றி உடைந்தது. கீழ்ப் பாகங்கள் சேரலமென்றும், கொங்கு நாடென்றும், இரண்டு சிறு நாடுகளாகப் பிரிந்தன. தளவாய் புரம் சேரலத்திற்குத் தலை நகர மாயிற்று. கொங்கு நாட்டிற்கு கருவூர் தலை நகரமானது. சேர நாட்டின் கடலை யடுத்த, திருவாங்கூரை உள்ளடக்கிய, மேற்குப் பாகம் கேரள மாயிற்று.

இப் பெரியார் கூற்றுப் படி சேரலமும் கேரளமும் வெவ் வேறு நாடுக ளாகின்றன. இது பொருந்தாப் பேச்சு. சேரலமும் கேரளமும் ஒன்று தான் என்பது பின்னர் தெளிவாகும்.

சேர நாட்டு மன்னனுக்கு சேரலன் அல்லது சேரலாதன் என்ற பட்டப் பெயர் உள்ளது. சேரலாதன் சிறப்புப் பெயருமாம். சேரன் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகட்கும் தந்தை சேரலாதன் என்னும் மன்னன்.

அசோகரின் பாறை வெட்டு எண் மூன்றில் "கேதலபுத்ரம்" என்று குறிப்பிடப் பட்டிருக்கும் நாடு கேரளமே. இந்தப் பாறை வெட்டில் செதுக்கப் பட்டிருப்பது கீழ் வருமாறு:—

"மகிமை மலிந்த மன்னரின் நிலமெங்கும்—சோழர், பாண்டியர் சத்திய புத்ரம், கேதல புத்ரம், ஈழ நாடு, அரசர் அண்டியோகஸ் ஆளும் கிரேக்க நாடு, முதலிய அயல் நாடுகள் எங்கும்—எங்கும்" (19)

"சத்திய புத்ர நாடு", "கொங்கிளங் கோசர் நாடு" என்று திரு மு. இராகவ அய்யங்கார் அவர்கள் தமது "சேரன் செங்குட்டுவன்" நூலில் விளக்கி யிருக்கின்றார்கள்.

இந்திய சர்க்கார் நிதி மந்திரி திரு: ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் எழுதிய புகார்க் காண்டம் நூலிற்கு மதிப்புரை வரைந்த திரு: வி. ஆர். ஆர். தீக்ஷிதர் அவர்கள் கூறி யிருப்பதும் இதுவே:—

"அவரும் கொங்கிளங் கோசர் அல்லது கோசர் என்பார் துளு நாட்டை ஆண்டாராதல் வேண்டும். அக்கோசரே அசோகர் கல் வெட்டுக்களிற் கண்ட சத்திய புத்ரர்கள்" பக்கம். 49

"கேதலபுத்ர நாடு" தென் கன்னட தேசத்து சந்திரகிரி ஆற்றிற்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் இருந்தது என்பது, பேராசிரியர் வின்சென்று, ஏ. ஸ்மித் அவர்கள் கொள்கை. அந் நிலப் பிரிவு, சில சமயங்களில் கொங்கு நாட்டையும் தன்னகத்துக் கொண்டிருந்தது. கொங்கு நாடென்பது, ஏறக் குறைய தற்காலத்துக் கோயம்புத்தூ

ரும், சேலத்தின் தென் பாகமும், சேர்ந்த தாகும். (மேற் சுட்டிய பேராசிரியரின், "இந்தியா சரித்திரம்"; பக்கம் 49.)

'ப்ளினி'யின் 'செலிப்ரோத்ரமும்', (Celebrothras), 'டாலமி'யின் (கி. பி. 139) 'கெரோப்ரோத்ரமும்', (Kerobrothras), தமிழ்ச் சேர நாட்டையே குறிக்கின்றன.

சேர நாட்டின் இந்த எல்கையும் பரப்பும், நீண்ட காலத்திற்குப் பொருத்த முடையன வல்ல; ஏதேனும் ஒரு கால வட்டத்திற்கு ஏற்புடைத் தாகலாம் என்று கோடலே, நெறி யாகும் மேற் கூறிய ஆசிரியர்கள், எவ்வக் காலத்திற்கு அவரவர்கள் கூற்றுக்கள் பொருந்தும் என்று புகன்றிலர். ஆகவே, வேறு ஆதாரங்கள் வழியே அவர் கூற்றுக்கள் நிலை பெற வேண்டுவது.

"கேரளம்" என்னும் சொல், ஆரியத் தோற்றுவாய் உடையது, என்று சொல்வது சரியல்ல. இதன் கரு ஆரியத்தில் காணப்பட மாட்டாது.

"சேரள"த்தை, சேர்-அளம் என்று பிரித்து, சேர் நிறைந்த நிலம், அல்லது, சேர் நிறைந்த சதுப்பு நிலம், என்று பொருள் கண்டு, பொருளிற்குத் தகுந்தவாறு, நாட்டின் நில நிலையைப் பொருத்தி, அது வழி நாட்டிற்குப் பெயர் உண்டானதாக, மிகத் திறமை யுடன், "மலபார் குவார்டர்லீ ரிவியூ" மூன்றும் தொகுதி, 57-தொடங்கிய பக்கங்களில் திரு. கிருஷ்ணப் புதுவாள் அவர்கள் ஒரு கட்டுரை வரைந் துள்ளார்கள். இலக்கியச் சான்றுகளும் தகுந்தவாறு எழுந்தா லன்றி கொள்கை வலியுறுவது இயலு வதன்று.

தேங்காய் என்று பொருள் கொண்ட "நாளிகேரம்" என்ற வடமொழிச் சொல்லை யொட்டி, "கேரளம்" என்னும் சொல்லிற்குப் பிறப்புக் காணுதல், பொருந்தா முயற்சி யாம். சரித்திரச் சான்றுகள் இல. ஈழ நாட்டி லிருந்து

மலையாள நாட்டிற்கு ஈழவர் தேங்காயைக் கொண்டு போனார்கள் என்ற செய்தியும், வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள தெற்குக் கடல் தீவுகளி லிருந்து தேங்காய் சமுத்திரத் திரை வழி ஈழ நாட்டிற்கு அடித்துக் கொண்டு வரப்பட்டது என்ற செய்தியும், சரித்திர உண்மைகள்.

"முசிறி"யி(கொடுங்கோளூர்?)லிருந்து பிற நாடுகளுக்கு "கடத்த நாடு" வழி ஏற்றுமதி செய்யப் பட்ட பொருட்களில் தேங்காயின் பெயர் காணப் படவில்லை. எனவே, கி. பி. 100–வது ஆண்டு வரை தென்னை மரம் அந்தப் பிரதேசங்களில் புகுத்தப் படவில்லை என்பது தெரிய வரும்.

திரு: எம். கிரிண்டில் அவர்களின் "பெரிப்பிளஸ் மாரிஸ் எரித்ரோசி" (Periplus Maris Erythroci) மொழி பெயர்ப்பைப் பார்க்க. பெரிப்பிளஸ் புத்தகத்தின் ஆசிரியர் அசோக காலத்திற்கு முற்பட் டவரு மல்லர்; அக் காலத்தவரு மல்லர். அசோகர் கல் வெட்டில், "கேதலபுத்ரம்" என்று பொறிக்கப் பட்டிருப்பதால், இப் பெயர் நாளிகேரம் (தேங்காய்) என்னும் பதத்தி லிருந்து பிறந்த தல்ல என்பது போதரும். அசோகரது காலம் கி. மு. 274 முதல் கி. மு. 237—வரை.

நாளிகேரம் மலையாள நாட்டிற்கு வருவதற்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே, "கேதல புத்ரம்" என்ற சொல் இந் நாட்டில் நிலைத் திருந்தது. தெற்குத் திசையை யொட்டியது தேங்காய் (தெற்குக் காய்; தென் காய்) என்னும் சொல், என்பது, சிலர் கோட்பாடு. தூரத் தென் திசைப் "பாலினிஷியன்" தீவுகளின் சுதேசி தேங்காய். தேங்காய் இந்திய நாட்டிற்கு விதேசி.

சேர அரசன் சேரலன், சேரலாதன். சேரலன் சேரலாதன். ஆளும் நாடு சேரலம். இது, கேரலமாகி, பின்னர் நாளடைவில்; கேரளமாயிற்று. இச் சொற்கள் எல்லாம், தனித் தமிழ்ச் சொற்களே. தக்க எடுத்துக் காட்டுக்கள்

வழியும், இலக்கண விதிகளை யொட்டியும், இம் மெய்ம்மை விளங்கும்.

திருவாலவாயுடையார், சேரமான் பெருமாள் நாயனாருக்கு விடுத்த திருமுகப்பாசுரம், கீழ்க் காணும் பாடலை நோக்குமிடத்து, சேரலனைக் குறித் துள்ள செய்தி தெரியலாகும்.

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பாணிற வரிச்சிறை
யன்னம் பயில்மொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்வல பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

குலசேகரப்பெருமாள் அருளிச் செய்த பெருமாள் திருமொழி, (உடையவர் அருளிச் செய்தது), கீழ்க் காணும் செய்யுள், சேரலன்........கேரளம் உருமாற்றத்தை விளக்குகின்றது:-

"இன்னமுத மூட்டுகேனிங் கேவாராய் பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்லசீர்ப்பெருமாள்—பொன்னின்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோனெங்கள்
குலசேகரனென்றே கூறு".

கீழ்க் காணும் முத்தொள்ளாயிரச் செய்யுளும் இதனை விளக்கும்:-

"இவனென்னலங்கவர்ந்தகள்வனிவனென்னது
நெஞ்சங்நிறையழித்தகள்வனென்—றஞ்சொலாய்
செல்லுநெறியெலாஞ்சேரலர்கோக்கோதைக்குச்
சொல்லும்பழியோபெரிது" பா: 102.

கீழ் வரும் திருவாசகச் செய்யுளும் இச் செய்தியை நிலை நாட்டும்:—

"உன்னை உகப்பன் குயிலே! உன் துணைத் தோழியும் ஆவன்;
பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழும் அழகன்,
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்!"

சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம், வாழ்த்துக் காதை, உரைப் பாட்டு மடை, முதலிரண்டு வரிகள் இவ் வுண்மையை உறுதிப் படுத்தும்:-

"குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மக ளீன்ற............"

வீர ராஜேந்திர னுடைய இந்தக் கல் வெட்டுக் குறிப்பும், கவனிக்கத் தக்கது:-

"தென்னனைத்த(லை)கொ(ண்)டுசேரலனைத்
திறைகொண்டுசிங்களதேசம்வடிப்படுத்து"

கீரையை—'சீரை' என்பதும், ஏணியை—'கோணி' என்பதும், ஊசியை-'தூசி' என்பதும், சாதாரணமாகக் காணப்படும் சொல் வேறுபாடுகள்.

'ஓச்சைப்பிடாரியம்' என்பது ஓச்சன் பூசை புரியும் பிடாரி கோயிற் றலம்; நாகர்கோவிலுக்கு தென் கிழக்குப் புறத்தில் இருப்பது. இதனை "கோர்ச்சப்பிடாரம்" என்று வழங்குகின்றார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் 'ஒட்டைப்பிடாரம்' என்று பெயர் படைத்த இடமும் இது பொருளுடைத்தே. அவ்வூர்க் கிராம தேவதை உலக நாயகி. ஒரு கோவிலும் உண்டு இத் தேவிக்கு.

வீரசோழியம், கிரியாபதப்படலம், 12-ம் சூத்திரத்தில் பல உதாரணங்களும், இவ் வினைச் சொல் வேறுபாடுகளும் தென்படும்.

எம்பளத்தொண்ணு, உசிர், ஒசரே, கோளி, இங்காக்க எங்கிட்டு, இப்படிக்கொற்ற, சேத்துநிலம், வாயைப்பயம், கோயி முட்டை, விழக்கு, கச்சை, உற்றியம் போது, பிற்றை வாங்கி விற்றுன், எனவும், "தோவாயக் கோட்டயிலே மூவுயக்கு ஆயாக்கு நெல்லுக்கு நாலு வாயக்காய்", போன்ற பிறவாற்றுனும், அறிவில்லாதவர் தழிழைப் பிழைக்க வழங்குவர்.

மலையாள நாட்டின் கிழக்குப் பாகம், இயற்கையிலே நெருங்கிய மலைத் தொடராலும், நெடுங் காடுகளாலும், நிறையப் பட்டிருக்கின்றது. சில இடங்களில், நிலத்தின் நிலை எவ்வாறு நிலவுகின்றது என்று, வரை யறுத்துக் கூற இயலாது. அந் நாட்டின் குன்றுகளிலும், குழிகளிலும், அடர்ந்த காடுகள் படர்ந்திருப்பது, இயற்கைத் தனிச் சிறப்பு. திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களின் சுங்க வருவாய்க்கு, விலை யேறிய வேறு வேறு மரங்கள் மலிந்த இந்தக் காடுகளே, காரணம். இரப்பர், காப்பி, தேயிலை, பயிர்களுக்கு அம்மண் மிக மேலானது. பெருத்த அளவில், காடுகள் வெட்டித் தெளிக்கப் பட்டு, புதிய புதிய பயிர்க் களங்கள் திறக்கப் படுகின்றன. 'மலை வாரத்துச் செல்வம்' எனப் படும் நல்ல மிளகு பண்டை நாள் கொண்டே பெரு வாரியாகப் பயிர் செய்யப் பட்டு வருகின்றது. காணு மிடமெங்கும், 'கற்பக தரு' என்னப் படும் தென்னை, நிறைந்த தென்னந் தோப்புக்கள், எளிய மக்களின் தனித் தலைமை உடைமை என்று இயம்பலாம் இவற்றை. குடிசைக் கைத் தொழிலுக்கு தென்னையின் ஒவ்வொரு உறுப்பும் உதவு கின்றது. கயிறு, கொப்பரை, எண்ணெய்-பெரிய அளவில் ஏற்றுமதி யாகின்றன. இலவங்க வகைகளும் நிரம்பப் பயிரிடப் படுகின்றன.

பேராசிரியர். ரஸ்கினின் அல்லது ஸ்காட்டின் இயற்கை வருணனைப் பேறு முனைக்கு இலக்காகும் இளமை வாய்ந்த, அழகு அமைந்த இயற்கைத் தோற்றம், நெடு

நாளாக அயலாரை அறைகூவி அழைத்துக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பாவின் சிங்காரப் பூங்காவனமாகிய 'லம்பார்டி'யின் வனப்பு, மலையாள மனோகரத்திற்கு இணையாகாது. ஆயிரம் தீவுக் கூட்டங்களின் அழகில் மூழ்கிய 'வெனிஸ்' நகரம், பண்டைய முசிறி, வஞ்சி, தொண்டி, அல்லது, இன்றைய கள்ளிக்கோட்டை, கொச்சி, கொல்லம் இவற்றோடு பேரழகுப் போட்டியில் ஈடு பட்டால், தானாகவே, தன் பொலிவின் பெரும் பாகத்தைப் பறிகொடுக்க நேரும்,

இந்த நாட்டை இடையுருவிப் பாயும் நதிகள் பல அவை, பெரும்பாலும் உயர்ந்த மட்டத்திலிருந்து உற்பத்தியாவன. தண்ணீர் விழும் வேகத்தால், அவை தாமாகவே ஆழம் மிகுந்த கால்வாய்கள் வகுத்துக் கொண்டிருக்கின்றன. பெரியாறு, நெய்யாறு, வள்ளியாறு, கல்லடையாறு போன்ற சிலவற்றின் கரைகள், முப்பது அடிவரை உயரம் உள்ளன. நீர்ப் பெருக்குக் காரணமாக, நெற் பயிர் பெருவாரியாக, வெற்றிகரமாக நடைபெறுவதில்லை. அப் பிரதேசத்து மக்கள், உணவுக்காக அண்டை நாடுகளைச் சார்ந்து நிற்க வேண்டுவது கடனாகின்றது. மாண்பு மிகுந்த திருவாங்கூர் மன்னர், ஸர். ராம வர்ம மகா ராஜா அவர்களால் ஊக்கப்பட்ட மரச்சீனி (ஏழிலைக் கிழங்கு) நடுகை, இன்று, அந் நாட்டு மக்களின் முக்கிய தொழில். மரச்சீனிக் கிழங்கு, அவருடைய முந்திய உணவுப் பொருள்.

நாட்டைப் பிளந்து, ஊடுருவி, விரைந்து செல்லும் ஆறுகளில், அவ்வப்போது உண்டாகும் பெருவெள்ளத்தின் இழுப்பில், நிலத்தின் வளம் கொள்ளையடித்துக் கொண்டு போகப்படுகின்றது; மாத்திரமல்ல, வளம் பாழாய் கடல் நீரில் கரைக்கப்படுகின்றது. நெற் சாகுபடி இந் நாட்டில் தழைக்காததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். என்றால், பூமியின் அடி வயிற்றில் தங்கியிருக்கும் சில அருமையான, மிகவும் அரிய உலோகங்களின்

மணிகள் ஆற்றுப் பெருக்கால் அடித்துக் கொண்டு போகப் பட்டு – ஆனால், கடல் நீரில் கரைக்கப் பெறாது, கடலில் மூழ்கிக் கிடக்கும் பாறைக் கூட்டம் தடைவதால், கடல் மணலில் அங்கு மிங்கும் புதை யுண்டு கிடக்கின் றன. மணவாளக்குறிச்சி (மணல்வாரக்குறிச்சி) 'மாஞே சைட்'டும், நீண்டகரை 'இல்மனை'ட்டும் உலகக் கைத் தொழில் திராசைக் குலுக்கிவிட்டன. மலை நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தென்னந் தும்புக் கயிறுகள் அடுக்கி வைத்திருந்த, ஜெர்மன் கிட்டங்கிகளின் தரையில் படிந்து கிடந்த புழுதியில் மாஞேசைட்டு மணிக ளைக் கண்டு எடுத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. (Science and Culture, Vol III, No I, July 1946, Beach Minerals in Travencore என்னும் கட்டுரையில் இக் குறிபுகள் கையாளப் பட்டிருக்கின்றன.)

பரமாணுக்குண்டு உற்பத்திக்குப் பயன்படும் 'தோரிய' மும் மலைநாட்டில் உள்ளதே.

மலைநாட்டின் நிரந்தரமான காலநிலை களைப்பைத் தரும். நாட்டின் அழகிற் கேற்றவாறு, நாட்டு மக்களின் உடல் வனப்பும், வன்மையும் அமைந்தில. சிற்ப அரசு கள், மைக்கேல் ஆஞ்சிலோ, ரபைல், முதலாயினோர், கண்ட அழியா அழகு அமைந்த மக்கள் பலர் இங்கு இலர். இளைப்பை விளைக்கும் காலநிலைக்காரணம் பற்றி யோ, ஒட்டிய வேறு காரணம் குறித்தோ, மக்கள், பொ துவாக மெத்தனமா யிருக்க வாய்ப்பு நேர்தல் இயல்பே.

ஆகவே, அவர் பேச்சிலும், செய்கையிலும், ஏனைய வற்றிலும், பொதுப்படையாக, மடி, குடி கொள்ள இடம் நேர்ப்பட்டது. வயல் வேலைக்காரன் போலும், முதுகு வளைய வேலை செய்யமாட்டான். ஆறடி நீள முள்ள பிடி கொண்ட மண் வெட்டியால் நிமிர்ந்து நின்ற வண்ணம் நிலம் வெட்டுவதைப் பார்க்கலாம். குட்ட நாடு, (அம்பலப் புழை, கருநாகப் பள்ளி, தாலுகாக்கள்), ஓணாடு, (மாவே லிக்கரை, செங்கன்னூர், கார்த்திகைப்பள்ளி தாலுகாக்

கள்) முதலிய மணல் பாய்ந்த இடங்களில், மண்ணைப் புரட்ட, இலேசாக மண் வெட்டியால் மண்ணை மறித்தால் போதும். பெண்பாலார் முதுகு வளையாமல், நெட்டைக் குத்தாக நின்றபடியே, நீண்ட துடைப்பங்களால் தரையைப் பெருக்குகிறார்கள் பேச்சிலும், எழுத்திலும் மலையாளிகள் முனையை மழுக்கிவிடுகிறார்கள், உதாரணமாக, "கோவிலகம்" 'கோயிலகம்" என்பது "கோலம்" என்றாகி விடும், "இருந்து கொள்ளுக" "இருந்நோளு" என்றாகும். கீழ் வரும் மலையாளப் பாட்டு இதனை விளக்கும்:-

"മോറങ്ങേറെ വിയർക്കണോ വിശറിണോ
വീശാളണോ വീയണോ
ഏന്നോരായി വിശക്ക ണില്ലയൊ വൃഥാ
കുത്തുക്കണൊ ന്തേഭവാൻ
നാർണോ ഞൂണിന്ന ചോറണോഥ കറിണോ
കണ്യാങ്ങണോ കവ്ളണോ
നേരെ ചൊല്ക മടിച്ചിടാതതു മുഴൽ
മാഴ്കാതെ നല്കീടുവൻ."

இருநூறு ஆண்டுகட்கு முன்பு, மேற்குக் கரைமக்கள் தங்கள் உபயோகத்திற்கென்று கைக் கொண்ட கிரந்த நெடுங்கணக்கில் உள்ள கூரிய முனைகளும், கூர் கோணங்களும் மழுங்கவே, எழுத்துக்கள் உருண்டு, வட்ட வடிவில் அமைந்தன. 'த' என்ற கிரந்த எழுத்து காலப் போக்கில் பலப்பல உருவம் படைத்து ஈற்றில் 'ത' என்னும் வரி வடிவில் இன்று தென்படுகின்றது. 'ந', 'க', என்பன, வளைந்து, வளைந்து முறையே, 'ന' 'ക' என்ற உருவங்களை அடைந்திருக்கின்றன.

ஓரசை கொண்ட ஒரே சொல்லின் ஒலி பேதங்கள், பல பொருட்களை உணர்த்துவன அல்லாமல், ஒருகால் உடன்பாடாகும். மறுகால் எதிர்மறையாகும். 'இராமனுட்டம்', 'கதைகளி', 'ஆட்டக்கதை', முதலியன மலையாள நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த கலைகள், இவை அந்நாட்டு

மக்களின் உள்ளத் தெழுச்சியிற் கருவுற்றவை. "ஊமை ஆட்டம்" பொது மக்களின் மனதைப் பெரிதும் பறிக்கின்றது. இராமாயண மகாபாரதக் கதைகளை, வாய் திறவாமலே, கைக் குறிகள் வழி மிகவும் தெளிவாக விளக்கும் மலையாளியின் திறத்தை மெச்சாமலிருக்க வழியில்லை.

"மலையாளக் கதைகளி" மகாகவி "வள்ளத்தோள்" போன்ற பேரறிஞர்கள் அரும் பாட்டுவழி, முன்னணிக்கு வந்துகொண்டிருப்பது நன்றுளின் அறிகுறியாகும்,

முகக் குறிப்புடன் கூடிய அபிநயத்தால், உள்ளத் துணர்வுகளை வெளிப்படுத்தும் வன்மை, மலைநாட்டில் வேரூன்றி நிற்கின்றது. மலையாளி தனது கீழ் நாட்டுச் சகோதரனிடமிருந்து வேறுபடுகிருன் கீழ்வரும் வழிகளில். சூழ்நிலை பற்றியே மனிதனின் வாழ்க்கை வட்டம் வகுக்கப் படுவது உண்மை. இவ் விதி மலையாளத்தானுக்கு முற்றும் பொருந்தும். பல் தேய்ப்பதிலும், நீரில் முழுகுவதிலும், உடலைத் தூய்மையாய் வைத்துக் கொள்வதிலும் மலையாளி மிகுந்த பொழுது போக்குவான். அவனது அன்றுட வாழ்வில் மெத்தனம் மலிந்து காணப்படும். நாடோடி மலையாளிகூட, ஓலை வேய்தல், செடி கொடி நடுதல் முதலிய வேலைகளில் கை தேர்ந்தவனு யிருப்பான். இத் தொழில்கள் அதிகத் தொந்தரவு கொடுக்கமாட்டா. மேனியினுக்காகச் செய்யக் கூடியவையே. சுரங்கம் தோண்டுதல், பாறை உடைத்தல், விறகு வெட்டுதல், தோட்டக் காடுகளில் இலை பறித்தல் போன்ற கடின வேலைகளைத் தன்னுடன் வாழும் கிழக்குத் திசைச் சோதரனுக்கு விட்டு விடுகிருன். பரம ஏழையும், 'குழம்பு' தேய்த்துத் தான் குளிப்பான். கட்டிலில் தான் படுப்பான். தன் வேலையை ஒட்டி, அடுத்த நிமிடம் வயல் சேற்றில் தாண்டவம் ஆட வேண்டி யிருக்கும். இருந்தாலும், மலையாளி தன் தோட்டத்தில் மிதியடி இல்லாமல் நடக்கமாட்டான். பிறர்க்கு இவை புதுமைகள்.

மலையாளியின், உடல் சுத்தம்—வீடு அமைப்பு—வீட்டுப் பாதுகாப்பு—இவை புகழ்ந்து பேசப்பட வேண்டியன; காரணம் இயற்கைத் தாயின் இணை யில்லாக் கருணையே. மலையாளிக்கு வேறு கவலைக்கு இட மில்லை. வேண்டிய நேரம் இருப்பி லுண்டு; நேரக் கட்டுப்பாடில்லை. எப்பொழுதும் சுத்தமாக இருப்பதற்கு என்ன தடை? வேண்டிய மட்டும் வீடு கட்டி அழகு பார்ப்பதற்கு என்ன இடையூறு? மலையாளக் குடும்பத்துக் "காரணவரி"ன் ("மலையாளத் தரைபாட்டின்" தலைவன்) வாழ்க்கை நிரம்ப நிம்மதியானது; இரசகரமானதும் கூட. தென்னையிலிருந்து உலர்ந்த மடல் ஒன்று விழ வேண்டியது தான் தாமதம். அதை ஆய்ந்து, ஓலை வேறு, பல் குத்த ஈர்க்கு வேறு, அடுப் பெரிக்க மட்டை வேறு, ஆக அடுக்குவது தான் அவர் வேலை. இப்படிச் செய்யும் போது தாம் ஒரு பெரிய இயந்திரச் சாலையில் நுணுக்கமான ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பதாகத் தான் நினைப்பு. இது, தமது தொழில் பற்றிய இவரது உள்ளக் கிடக்கை! செட்டான வாழ்க்கைக்கு மலையாளியின் வாழ்வு ஒரு மாதிரி பாடம். செட்டு சும்மா வருமா? மடல் ஆய்தல் போன்ற சில்லறை வேலைகளில் முழு நேரமும் ஈடுபட்டிருந்தால் தான் இயலும். ஆனால் அவற்றை விட அவசர வேலைகள் குறுக்கிடும் பொழுது அவ் வேலைகள் தடை படுகின்றன. மலையாளி, தனது உடல் உரக் குறைவாலும், சூழ் நிலை தரும் மெத்தனத்தாலும், எழுந்த சோம்பல் வாழ்வால், கீழ் கரைத் தமிழனைப் போல, உடல் நலத்திலும், உழைப்பிலும், இயந்திர உற்பத்தித் துறையிலும் அத்துணை முன்னேற்றம் பெறாது நிற்க வேண்டி யிருந்தது. இ-ரு-க்-கி-ற-து. இக் கூற்று இறந்த காலக் கூற்றாகும் வண்ணம்—முன்னறி வின்றி உலகத்துப் பெரு நிகழ்ச்சிகள் உரு வெடுத்துக் கொண்டிருக்கின்றன. அவை காரணமாக நினைவில் இல்லாத பலப்பல காரியங்களும், நிகழ்ச்சிகளும் மலை நாட்டிலும் நிலை பெறுகின்றன. என்றால் இயக்கும் சக்திகள் வெளியில் இருந்து வருவன; வெளியிலேயே நிலைத்து நீடிப்பன.

மலையாளியின் அம்மட்டு சுறுசுறுப் பின்மைக்குக் காரணம் எளிதில் கண்டறியக் கூடியதே. இயற்கை அன்னை மேற்குக் கரை மக்களுக்கு மிகுந்த கருணை காட்டுகிறாள். அவர்கள், வாழ்க்கையின் பொருட்டு வருந்தி உழைக்க வேண்டியதில்லை. மண் வெட்டியால் ஒரு கிளறுதல் ஒரு அணு கூலி கொடுக்கும். அன்றையச் செலவு அது கொண்டு நடந்தேறும். ஒவ்வொருவனுக்கும் தனித் தனிச் சிறு தோட்டங்கள் உண்டு. அவற்றில் வாழை, பலா, கமுகு முதலியன பயிர் செய்கிறான். மரச்சீனி, வெற்றிலை, மிளகுக் கொடி....நட்டு வளர்க்கிறான். தென்னையிலிருந்து தேங்காய், விளக்கு எரிக்க "வெளிச்செண்ணெய்", கூரை வேய ஓலை, வீடு கட்ட கைமரம் முதலியவை கிடைக்கின்றன. வாழைக்குலை, பலாக்காய், மரக்கறி........மிகுதியாக அகப்படும்.

ஆவசியங்கள் அவன் வாழ்வில் மிகக் குறைவு. வாழ்க்கையோ மிகவும் எளிது. காலையில் கஞ்சி; மதியம் மித உணவு; இரவு சாதாரணச் சாப்பாடு. அவன் குடும்பத்திற்கு வேண்டிய துணி மணிகள் சில ரூபாய்களே பெறுவன. கீழைக் கரை மக்கள் அணியும் ஆபரணங்களைப் பார்க்கும் பொழுது மலையாள நாட்டு அணிகலன்கள் ஒரு பொருட்டெனப் படுவதற் கில்லை. பொதுவாக நோக்குமிடத்து, மலையாளியின் எளிய, இனிய வாழ்க்கை, அவனுடைய இயற்கையான, மெதுவான, போக்கிற்குப் பெரிதும் பொருத்த முடையது என்பது பெறப் படும். இது காரணமோ? விளைவோ? கூறுவது எளிதல்ல. ஆனால் அது ஒழிக்க வொண்ணா உண்மைச் செய்தியே.

இயற்கையான, மெதுவான அம்சமே மலையாள வாழ்க்கையின் ஆணித் தூண் என்பது விளக்கமாக உணரப் படும். தெரிந்தோ, தெரியாமலோ இந்த மெது அவர்கள் வாழ்க்கையின் ஓரோர் உறுப்பிலும் புகுந்து விட்டது. பழக்க வழக்கங்கள்-ஒழுக்க முறைகள்-சுபாவங்கள்-கலைக் கழகங்கள்-நம்பிக்கைகள்—வழிபாடுகள்-மட்டுமல்ல, ஓட்

டிய நாகரிக முறைகள் எல்லாம், துறைகள் எல்லாம், இதனுல் பாதிக்கப் பட்டிருக்கின்றன. நெடுங் காலமாகவே வாழ்க்கை முறையில் மாற்ற மொன்றும் காணப்படவே யில்லை இதனை விளக்குவதே இக் கட்டுரையின் குறிக்கோள். அண்மையில் ஏற்பட்டு வரும் திடீர் வேறுபாடுகளுக்குக் காரணம் முன்னர் காட்டியவாறு வெளி யுலகிலிருந்து வருவனவே. பண்டைப் பழக்க வழக்கங்கள், காலச் சுழலில் சிக்காது அன்று இருந்தவாறே இன்றும் இருந்து வருகின்றன.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்கப்பியம், மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் அருளிய இறையனுர் அகப் பொருள், அதற்கு மதுரை கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் கண்ட உரை, சரித்திரக் குறிப்புக்கள் பலவும் கமழும் புறநனூறு, "நெஞ்சை யள்ளும்" சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூற்கள் விரித் துரைக்கும் பழக்க வழக்கங்கள் யாவும் முழு நடப்பி லிருந்த நாட்டின் வரம்புகளை அந் நூற்களே குறிக்கின்றன; சற்றும் மாறுபா டின்றி ஒரே விதத்தில் குறிக்கின்றன.

அவ் வரம்புக ளாவன:—

வடக்கே: வேங்கட மலை
தெற்கே: குமரி
கிழக்கிலும் } கடல்.
மேற்கிலும் }

இப் பண்டைய நூற்கள் தரும் சான்றுகளையும், அந் நூற்களினின்று வெளி வரும் நுணுக்கங்களையும், முறையே விரிவாகச் சீர்தூக்கிப் பார்த்தல் நேர்மை யுடைத்து.

"வடவேங்கடந்தென்குமரி
யாயிடைத்தமிழ்கூறுநல்லுலகத்து
வழக்குச்செய்யுளுமாயிருமுதலி
னெழுத்தும்சொல்லும்பொருளுநாடிச்
செந்தமிழியற்கைச்சிவணியநிலத்தோடு
முந்துநூல்கண்டுமுறைப்படவெண்ணிப்

புலங்தொகுத்தோனேபோர்க்கனுபனுவ
லந்திருதிருவிற்பாண்டியனவைத்
தறங்கரைநாவினன்மறைமுற்றிய
வதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து
மயங்காமரபினெழுத்துமுறைகாட்டி
மல்குநீர்வரைப்பினைந்திரநிறைந்த
தொல்காப்பியனெனத்தன்பெயர்தோற்றிப்
பல்புகழ்நிறுத்தபடிமையோனே''

இங்ஙனம் தொல்காப்பியத்திற்கு பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் பாடி யிருக்கின்றார்.

இப் பாயிரம் உட் கருத்தி லிருந்து சில சங்கதிகள் வெளியாகின்றன.-

பண்டைய வடமொழி வியாகர்ணங்கள் ஐந்திரம், பாணினீயம் ஆவன. தொல்காப்பியனாரை ''ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்'' எனவே பனம்பாரனார் பகர்கின்றார். அவர்க்குப் பாணினீயத்தில் பயிற்சி உண்டு என, இப் பாயிரம் கூறாத விடத்து, தொல்காப்பியர் காலம் பாணினீயர் காலத்திற்கு முற்பட்டிருக்க வேண்டும். கி. மு. 7-வது நூற்றாண்டு பாணினீயர் காலம் என்று, ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது.

''பாண்டியன் அவைக் களத்து அதங்கோட்டாசாற் கரிறபத் தெரிந்து'' எனப் பனம்பாரனார் புகன்றமையில் தொல்காப்பியத்தின் தோல் உற்பத்தியும், பின், தலைச் சங்கத்தில் அரங்கேற்றமும் அறியப் படுகின்றன.

தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம் பூரணர் கண்ட உரை இது வாகும்:-

''மங்கலத்திசை யாதலின் வடக்கு முற் கூறப்பட்டது. கடல் கொள்ளுவதன் முன்பு பிற நாடு முண்மையிற் றெற்கும் எல்லை கூறப் பட்டது. கிழக்கும் மேற்கும் பிற நாடின்மையின் கூறப் படா வாயின. பிற விரண் டெல்லை

கூறுது, இம் மலையு மாறுங் கூறிடது அவை நீர்த்த மாகலா னும் கேடில்லாதலானும், எல்லாரானு மறியப் படுதலானு மென்பது"

இறையனுரகப்பொருள், முதல் சூத்திரம், உரையில், சிறப்புப் பாயிரம் எட்டு வகைப் படுவதை, நக்கீரர் விளக் கப் புகுவது இவ்வாறு:-

"எல்லை யென்பது இந்நூல் இன்ன எல்லையுள் நடக்கு மென்பது. இந்நூல் எவ் வெல்லையுள் நடக்குமோ வெனின், வடக்கு வேங்கடங், தெற்குக் குமரி, கிழக்கு மேற்குங் கடல் எல்லையாக நடக்கு மென்பது. என்னை?"

'வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்"

எனவும்,

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து,"

எனவுங், காக்கைப்பாடினியாருந் தொல்காப்பியனுருஞ் சொன்னுராகலின் என்பது".

இவ் விரு வுரை யாசிரியர்கட்கும் குமரி யாறு இருந்த நாட்டின் கடல் கோள் உடன்பாடே. சிறப்பித்தும், இந் நிகழ்ச்சியை நக்கீரர், "தலைச் சங்க மிருந்தார் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப் பட்ட மதுரை யென்ப" என்றும், "இடைச் சங்க மிருந்தார் சங்கமிருந்து தமிழா ராய்ந்தது கபாட புரத் தென்ப. அக் காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது" என்றும், "இனி கடைச் சங்க மிருந்தார்.... சங்க மிருந்து தமிழா ராய்ந்தது உத்தர மதுரை யென்ப" என்றும் விளக்கி விளம்புகின்றுர்.

"புறநானூறு" நூலி லிருந்து மேலே காட்டப் பட்ட கடல் கோளிற்குப் புறமே கீழைக் கடலையும் மேலைக்

கடலையும் ஒட்டிய சில நுட்பங்களும் காணக் கிடக்கின்றன. மாத்திர மல்ல.

வட இமயத்திலும் கூட தமிழர்க் குள்ள உரிமை வெளிப் படுகின்றது. இமயம் நிலைவரமான வட வெல்லை ஆகா தென்று வரினும், இமயம் வரையிலும், அக் காலத்தில் தமிழ் வழக்கி லிருந்த உண்மை மறுக்க வொண்ணது. உரிமை கொண்டாடுவதில் தக்க தெளிவுகளை எடுத்துக் கையாளுதல், தலை யாகும். அதுதான் முதல் வேலையுமாம். வெறும் பேச்சு உரிமை அல்ல இது; ஆணி வேரில் ஆழ ஊன்றிய உரிமை யாகும். உரிமை உறைத்தா லன்றி கீழ் வருவன போன்ற இனிய மொழிகள், செந்நாப் புலவர் தம் நாவி லின்று, "சுதந்தரம் கொடு தோன்றி" யிருக்கவே மாட்டா. இவ் வுரிமைச் சுவை, ஒரு நூலின் தனி உடைமை என்றென்னது, பண்டைத் தமிழ் நூற்களின் பொது வுடைமை யாகும்.

"வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட் டிமயம்"
புறப்: 39. வரி. 14-15.

"பொன்னுடை நெடுங்கோட் டிமயம்"
புறப்: 369. வரி. 24.

"பொற்கோட் டிமயம்"
புறப்: 2. வரி. 24.

"குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதர்"

சிலப்: வஞ்சிக் காண்டம் 29. வாழ்த்துக் காதை; உரைப் பாட்டு மடை. வரி 1—2,

[ஒரு மொழிக்கு-ஆணை என்பது பொருளாயினும், ஒரு மொழி-தனி மொழி யாகிய தமிழ் மொழி யாகாதோ?]
"பொன்னிமயக் கோட்டு"

சிலப்: மதுரைக் காண்டம், 17. ஆய்ச்சியர் குரவை, உள்வரி வாழ்த்து; பா.2. வரி. 1.

"முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ வடபே ரிமய மலை"

சிலப்: வஞ்சிக் காண்டம், 29 வாழ்த்துக் காதை, தேவந்தி செ ல்; 2. வரி. 1.

"இளர்சே ணிமயம்"

பெருங் கதை. நரவாண காண்டம், வயாத் திர்ந்தது வரி. 122.

"குடபுலங் காவலர் மருமா னென்னோ
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்"

சிறு பாணாற்றுப்படை. வரி. 47-49

"கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்"
சிலப்: மதுரைக் காண்டம், 23. கட்டுரை காதை; வரி.11-12.

"விடர்ச்சிலை பொறித்த வேந்தன்."
சிலப்: மதுரைக் காண்டம், 23. கட்டுரை காதை; வரி. 82.

மேலும் இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன், செங் குட்டுவன், சோழன் கரிகால் திருமா வளவன், பாண் டியன் மலையத் துவசன், இவர்களது ஆற்றலருஞ் செயல் களும் நூற்களில் இடம் பெற்றிருக்கவும் மாட்டா.

"புறப்பாட்டு" செய்யுள் 7-ல்

"வடா அது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனா அ துருகெழு குமரியின் றெற்குங்
குணா அது கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடா அது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"

என்று காரிகிழார் கூறியிருத்தற்கு, நச்சினார்க்கினியர்:-

"வடக்கின் கண்ணது பனி தங்கிய நெடிய இமயமலை யின் வடக்கும், தெற்கின் கண்ணது உட்குந் திறம் பொருந் திய கன்னி யாற்றின் தெற்கும், கீழ்க் கண்ணது கரை

பொருகின்ற சகரரால் தோண்டப் பட்ட சாகரத்தின் கிழக்கும், மேல் கண்ணது பழைதாய் முதிர்ந்த கடலின் மேற்கும்.........." என்று பொருள் கண்டுள்ளார்.

தெற்கு எல்லை கன்னியாறு; கிழக்குக் கடல் தோண்டப் பட்டது; மேற்குக் கடல் பண்டு பண்டே உள்ளது

புறம், 17-ம் பாட்டில் குறுங் கோழியூர் கிழார் யானைக் கட் சேய் மாந்தரஞ் சேர லிரும் பொறையைப் பற்றி

"தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழிய"

எனக் கூறி யிருத்தற்கு "தென்றிசைக் கட் கன்னியும், வடதிசைக் கண் இமயமும், கீழ்த்திசைக் கண்ணும் மேற் றிசைக் கண்ணும் கடலும் எல்லையாக நடுவு பட்ட நிலத்துக் குன்றும் மலையும் நாடும் காடும் என இவற்றை யுடையோர் ஒரு பெற்றிப் பட்டு வழிபாடு கூற ...." என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை தருகின்றார்.

மாங்குடி மருதனார், தலையானங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு, வீடு பேறு நிமித்தம், பாடிய மதுரைக் காஞ்சியின், 70, 71 வரிகள், மேற்கூறிய புறநானூற்று முதல் இரு வரிகளை அவ்வாறே ஒத்தும், 72, 73 வரிகள் பின் இரண்டு அடிகளினின்று சற்றே பிறழ்ந்தும், காணப்படுகின்றன. மதுரைக் காஞ்சி வரிகட்கு, நச்சினார்க்கினியர் நவின்றுள்ள உரையும், ஏறத் தாழ புறநானூற்று உரையை ஒத்தே உள்ளது.

நெட்டிமையார் பாடல்களும் இத் தருணத்தில் நோக்கற் பாற்று.

புறநானூறு, செய்யுள் 9-ல், பஃறுளி யாற்றின் மணல் குறிக்கப் பட்டிருக்கின்றது.

கலிங்கத்துப்பரணி—இராச பாரம்பரியம், முதற் செய்யுள், கரி காற் பெரு வளத்தான், தன்னுடைய பகைவர் மேற் செலவைத் தடுத்த, இமய மலையைத் திரித்து, அதன் கண், தன் புலிக் குறியைப் பொறித்த, கதையைப் புலர்த்துகின்றது:-

"செண்டுகொண்டுகரி-காலனொரு காலினிமயச்
சிமயமால்வரை திருத்தருளி மீளவதனைப்
பண்டுநின்றபடி நிற்கவிது வென்றுமுதுகிற்
பாய்புலிக்குறி பொறித்தது மறித்தபொழுதே"

புகழேந்திப் புலவர், நள வெண்பா சுயம்வர காண்டம், பா. 135-ல்

'பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால்
திரித்தகோ"...

என்று பாடி இந்தக் கதையைக் குறிப்பிடுகின்றார்.

இச் செய்தியை இளங்கோ வடிகள், புகார்க் காண்டம் - இந்திரவிழவூரெடுத்த காதையில்,

"அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலை
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"
வரி: 95-98.

எனக் குறிப்பிடுகிறார், திருமா வளவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்து.

பெரிய புராணத்தில் சேக்கிழார் இவனை,

"இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன், வன்றிறற்புலி
யிமைய மால் வரைமேல் வைக்க வேகுவோன்"

என வியந்து கூறியுள்ளார்.

இளங்கோ வடிகள், புகாரி லுள்ள முத்துப் பந்தர், பட்டி மண்டபம், தோரண வாயில், முதலியன வட நாட்டினின்று கொண்டு வரப் பட்டன வென்று, உரைத்துப் போந்தார்.

தனித் தமிழரசு, வட நாட்டிடத்தும் நிலவி யிருந்தது என்பதற்கு, மிகவும் அரிய, ஏற்றவும் விலை யேறிய எடுத்துக் காட்டு, சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், கானல் வரியிலிருந்து, கிடைக்கப் பெறுகின்றது.

"மாதவி தன் மன மகிழக்" கோவலன் வாசித்த, ஆற்று வரிச் செய்யுட்கள் முத லிரண்டில், கரிகாலன் ஆண்ட தமிழ் நாட்டின் எல்லை காட்டப் பட்டிருக்கின்றது. கங்கை முதலாகக் குமரி ஈறாக, உள்ள இந்தியா, அது வாகும்.

அச் செய்யுட்கள் கீழே வருவன:—

'திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி''

செய்யுள்: 1.

''மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி''

செய்யுள்: 2

இமய மலை, பண்டைத் தமிழர்க்கு மட்டு மல்ல, இக் கால அறிவியல் கலை உலகத்தினர்க்குக் கூட, பெருந்-தடை யாகத் தானிருந்து வருகின்றது. அதன் கொடுமுடி இன்னும் மனிதனின் காலடிக்குப் பணிய வில்லை.

தமிழ் நாட்டின் பல பாகங்களும் சிறுகச் சிறுக கடலாக மாறி விட்டன வென்பது வெளிப்படை.

பாணினீ சூத்திரங்களைப் போன்று,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"—

போன்று, சுருக்கத்தில் மேற் கூறப் பட்ட நுண் மாண் நுழை புலன் நுணுக்கங்களுக்கு, ஹெக்கல், ஹக்ஸ்லீ, கால்டுவெல் முதலிய மேலுநட்டு மேதாவிகள் நுண்ணிய ஆராய்ச்சிகளின் பயனுய், விருத்தி யுரை கண்டிருப்பது சாலச் சிறந்தது என்றே கோடல் வேண்டும். ஒட்டிய சில குறிப்புக்கள் இங்குக் காணலாம்.

இமயம் இருந்த இடம், ஆழக் கடலிடம். பின்னரே, இமயம் தோன்றியது. கடல் கொள்ளப் பட்ட நாடுகளின் உயர்ந்த பாகங்களே, கிழக் கிந்தியத் தீவுகள். வங்காளக் குடாக் கடலிற்கு முன்னரே, அரபிக் கடல் நிலைத்து நின்றது. "லிமோரியா, அல்லது, "மறைந்து பட்ட மண் பரப்பு" பண்டைத் தண்டமிழ் நாட்டின் ஒரு பகுதியே. ஆசியா கரைக்கும் ஆப்பிரிக்கா கரைக்கும் நடு விடம் தான், மனித மரபின் ஆதித் தோற்றுவாய் இடம். இலங்கைத் தீவுக்கு சுமார் ஆயிரம் மைலுக்குத் தெற்காக, நடுக் கடலில், கருங் கல் மதில் உடைய சுத்த நீர் ஏரியும், பாழ் பட்ட கட்டடச் சின்னங்களும், காணப் படுகின்றன. "ஆர்கலி" என்னும் சொல், "ஆர்க்காலிஸ்" ஜலசந்தியின் அடியாகப் பிறந்தது. (இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடைப் பட்டது......) இந்து மகா சமுத்திரம், முன்பு ஒரு நிலப் பகுதி. ஆபிரிக்காவும் ஆஸ்டிரேலியாவும் சேர்ந்து கிடந்தன, அந் நாளில்.

ஆசிய நாடுகள் மகா நாட்டில், புது டில்லியில், 1947–மார்ச்சு, 23-ந் தேதி பாரத நாட்டின் பெருந் தவப் புதல்வர் பண்டித. ஜவஹர்லால் நேருஜீ முழக்கிய சங்க நாதத்தின் எதிரொலி இது:-

"நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் திடீரென உலக விஷயங்களில் ஆசியா முக்கியத்வம் வகிக்கிறது.

பழைய சரித்திரத்தைக் கவனித்தால் மனித வளர்ச்சி வரலாற்றில் எகிப்து தேசத்தோடு நெருங்கிய கலைத் தொடர்பு கொண்ட ஆசியா முக்கிய பங்கு எடுத்து வந்திருப்பது தெரியும். இங்குத் தான் நாகரிகம் தொடங்கிற்று எல்லை இல்லாத மனித வாழ்க்கை ஆரம்பித்த இடமும் இது தான், இங்குத் தான் மனிதன் உள்ளம் இடை யீடின்றி உண்மையைத் தேட முற்பட்டது. உலகத்திற்கே வழி காட்டும் ஒளி யாக மனிதனுடைய ஆத்மா பிரகாசித்ததும் இங்குத் தான்"

தினமணி. 24-3-47.

சிலப்பதிகாரமும் அதன் உரையும், மேற் கூறிய தொல்காப்பியம், புறநானூறு முதலிய நூற்கள் மறைமுகமாகக் கூறுவது போலல்லாமல், தெற்குக் கடலில் நிகழ்ந்துள்ள, கடல் கோளின் தன்மையையும்—காரணத்தையும், கடல் கொண்ட நாட்டின் பெயரையும்—விரிவையும், பட்டவர்த்தனமாக, உரைக்கின்றன.

கோளின் தன்மையும்—காரணமும், இவ்வரிகளில் காணலாகும்:-

"அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

சிலப்: மதுரைக் காண்டம், காடு காண் காதை; வரி 17–22.

இதன் பொருள்:-

வடிம்பலம்ப (வடிம்பு=கால்)நின்ற பாண்டியன் என்பான், முன்னொரு காலத்துத், தனது ஆற்றலை உலகில் அரசர் எல்லார்க்கும் உணர்த்த வேண்டிக், கடலை வேலெறிந்து தன் அடியைக் கழுவப் பணித்தான். அந்தப் பெரும் பழம் பகையினை, வளைந்த கடல், பொறுது, பின்னொரு காலத்

தில், அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே, பலமலைகளையுடைய குமரிக் கோட்டையும், கொண்டதனால், வடதிசைக் கண்ணதாகிய கங்கையாற்றினையும், இமய மலையினையும், கைக்கொண்டு, ஆண்ட தென்னவன், வாழ்வானாக.

மேற் போந்ததில், அடங்கிய கதைக் குறிப்பு கீழ் வருமாறு:-

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்பான், (உக்கிர குமார பாண்டியன்) முன்னொரு காலத்துத், தன் ஆற்றலை உலகில் அரசர் எல்லார்க்கும் உணர்த்த வேண்டி, கடலைத் தன் காலின் விளிம்பைக் கழுவ, வேல் விட்டுப் பணித்தான்.

இது, பாண்டியன் "கடல் சுவற வேலெறிந்த (வேல் விட்ட) கதை" எனப்படும்.

பரஞ்சோதி மாமுனிவரது திருவிளையாடற் புராணம், கடல் சுவற வேல் விட்ட படலம், 14-ம் செய்யுள், உக்கிர பாண்டியன் வேல் விட்டதையும், அது பற்றி நிகழ்ந்ததையும், விளக்குகின்றது:-

"எடுத்த வேல்வ லந்திரித்
தெறிந்த வேலை வேன்முனை
மடுத்த வேலை சுஃறெண
வறந்து மான வலிகெட
வடுத்து வேரி வாகையின்றி
யடிவ ணங்கு தெவ்வரைக்
கடுத்த வேல்வ லான்கணைக்
காலின் மட்ட தானதே"

புகழேந்திப் புலவர், தமது நளவெண்பா, சுயம்வர காண்டம், 137-ம் செய்யுளில், பாண்டியர் மரபில் கீர்த்தி வாய்ந்த மன்னர் வரிசைக்கண் "ஆழி வடிம்பலம்ப நின்ற" னுக்கே, முதலிடம் தருகின்றார்.

தலையானங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை, மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில், "பொலந்தார் மார்பன் நெடியோன் உம்பல்" என வியந்து கூறியிருத்தற்கு நச்சினார்க்கினியர், "பொன்னாற் செய்த தாரை அணிந்த மார்பினை(யும்), உடைய, வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வழியில் வந்தோனே" என்று உரை வரைந்திருக்கின்றார்.

சோழன் பெருமை தோன்ற ஒட்டக்கூத்தர் பாடியதை வெட்டி, பாண்டியனது பராக்கிரமம் பரந்திட, புகழேந்தி,

> "பரவை பணிந்ததுஞ் சோழன்
> பதந்தனையோ வம்மானே,
> பாண்டியனார் பராக்கிரமம்
> பகர்வரிதே யம்மானே"

என்றதூஉம், பரவையின் பணிவை புலப்படுத் துவதற்கே.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 21—"கடல் சுவற வேலெறிந்த திருவிளையாடல்", 6-7-ம் பாக்களில், "வேலை வடிம்பலம்ப நின்ற" னென்ற பெயர்க் காரணம் விளக்கப்பட்டிருத்தல், காணப்படும்.

> "வென்றிபடச் சிவந்தெறியக்
> கருங்கடல்வெவ் வலிதொலைந்து
> மூன்றெறுமம் புடைந்துபங்கப்
> பட்டலறி மோதிவிழா
> நின்றவடி வடிம்பலம்ப
> நின்றதுகண் டேனொரு
> மின்றிதுகண் டனம்புதுமை
> யெனப்பயம்விட் டெழுத்துதித்தார்"

> "மாலைமுடி யோன்வேலை
> வடிம்பலம்ப நின்றதனால்
> வேலைவடிம் பலம்பநின்ற
> னென்றெங்கும் விளங்கியதா

லாலவாய் நகரான்போ
லருளுடைய கடவுளர்யார்
ஞாலமிசை வானமிசை
யெனத்துதித்தார் நாவலர்கள்"

கல்லாடத்திலும் இச் செய்தி கூறப் பட்டிருக்கின்றது.

"மற்றவன் றன்னால் வடவையின் கொழுந்துசுட்
டாற்று துடலமு மமைக்குறு முத்தமும்,
வளர்த்துநின் றணங்கி வளைக்குல முழங்கும்,
கருங்கடல் பொரிய லொருங்கு வேல்விடுத்
தவற்கருள் கொடுத்த முதற்பெரு நாயகன்."
கல்: 78.

உக்கிர குமார பாண்டியருக்கு, வடிம்பலம்ப நின்ற பாண்டியர் என்பது, பெயரான வரலாறு, கடம்பவன புராணம், 10-வது இலீலா சங்கிரக வத்தியாயம், 21—வது செய்யுளால் வெளிப்படும்:-

"சீலமது ரையையாழி கொள்வான்
மேலச் சிவனருண்ஞா னக்கண்ணுற்
கண்ட போதே,
யேலவருங் கனவினிலுக் கிரமா
றன்பா லெய்தியரும் புதல்வகே
றெதிர்சென் றேநின்,
றேலமொடுங் கழியவருங் கடலை
யாமுன் னுதவியவே லெறிந்துசுவற்
றென்னப் போதும்,
வேலைசுவ றிடவேலை யெறிந்தா
ணமம் வேலைவடிம் பலம்நின்று
னென்று ரன்றே".

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் பஃறுளி யாற்றை உண்டாக்கியவன்,

கனியூட் அரசனுக்குச் சற்றும் வணங்காத கடல், தமிழரசன் ஆணைக்கு உடனே பணிந்து, வெருண்டு, அவன் கணைக் காலின் மட்ட மாயிற்று. ஆழி, அன்று அழிக்க எழுந்தது, நிகழா தாயிற்று.

"கடல் வடிம்பலம்ப நின்ற கைதவன்", என்றார் வில்லிப்புத்தூராழ்வார் (வில்லி பாரதம், 15-ம் போர், 18.)

கடல்கொண்ட நாடுகளின் பெயரும்—விரிவும், மற்றும், அடியார்க்கு நல்லார் வாக்கில், இதோ தரப்பெறுகின்றன. சிலப்பதிகாரம் வேனிற் காதை உரைக்கு முகவுரை இதுவாகும்:-

"நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்றது பௌவமு மென்றது என்னை யெனின், முதலூழியிறுதிக் கண் தென் மதுரை யகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாக ராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார் காய்சின வழுதி முதற் கடுங்கோனீறா யுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொகாப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கும் குமரி யென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவத வாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ் குன்ற நாடும் ஏழ் குணகாரை நாடும் ஏழ் குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றாரென்றுணர்க. இஃது என்னைபெறு மாறெனின்,.........கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும் உரையாசிரிய

ராகிய இளம்பூரண வடிகள் முகவுரையானும் பிறவாற்று னும் பெறுதும்''.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், வேனிற் காதை தொடக்கத்தில் தமிழ் நாட்டெல்லையை இவ்வாறு வரை யறுக்கின்றார்:-

''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு''

இவ்வரிகட்கு, அடியார்க்கு நல்லார், இவ்வாறு பொருள் எழுதுகிறார்

''வடக்கின் கண் வேங்கட மலையும் தெற்கின் கட் குமரிக் கடலும் கிழக்கின் கண்ணும் மேற்கின் கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ் நாட்டிற்கு எல்லை யென்று கூறுபடுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலை யுடைய நல்ல நாடு''.

மேலும், அவர், இசை நுணுக்கம் ஆசிரியர் சிகண்டியார்,

''வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்,
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே''.

என்று கூறியிருப்பதை, மேற்கோள் தந்து, ''வடக்கின் கண் வேங்கட மலை தெற்கின் கண் குமரிக் கடலெனக் குறியாற் கூறினவர் கீழ்பால் மேற்பாற்கு எல்லை கூறாதது என்னையோ வெனின், நெடுந்திசை யாகிய வடபாற் கெல்லை குன்ற மென்றும் தென்பாற் கெல்லை குமரிப் பௌவ மென்றுங் கூறினமையான் ஒழிந்த திசைகட்கு ஒழிந்த பௌவம் எல்லை யென்ப தாயிற்று,'' என்று கூறி மேற்கும் கிழக்கும் எல்லை கட்டுகிறார்.

இறுதியில், தமிழ் நாடு ஒழிந்த பிற நாடோ, தமிழ் மொழி யலாத வேறு மொழியோ, வேங்கட மலைக்குத் தெற்கே, சிலப்பதிகாரம் உருவான முன் காலத்திலோ,

அதற்கு உரை எழுந்த பின் காலத்திலோ, நிலை பெற வில்லை என்பது பெற, இது கூறுகின்றார்:-

"வடதிசைக்கண் வடுகொழிந்த திரிபுடை மொழி பல வுளவாகலான் மலையெல்லை கூறி, ஒழிந்த திசை மூன்றிற்கும் திரிபின்மையாற் கடலெல்லை கூறினா ரெனினு மமையும்".

சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், அரங்கேற்று காதை, "இமிழ் கடல் வரைப்பிற் றமிழகம்", என்ற 37-வது வரியில் வரும் "தமிழக"த்திற்கு, அரும்பத வுரை யாசிரியர், "வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடம் குமரி தீம்புனற் பௌவம் எனத் தமிழோரால் எல்லை கூறப் படா நின்ற தமிழ்த் தேச" மென்றும், அடியார்க்கு நல்லார், "வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடங் குமரி தீம்புனற் பௌவ மெனத் தமிழ் நாட்டிற்கு எல்லை கூறப்பட்ட தமிழ்த் தேச" மென்றும், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "வேங்கடம் குமரி தீம்புனற் பௌவ மென்பன, வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் எல்லையாக வுடைய வண் புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" என்றும், உரை கண்டுள்ளார்கள்.

"கோடு" என்ற பதத்திற்கு, அடியார்க்கு நல்லார் "மலை" என்றும், அருபத வுரை யாசிரியர் "கரை" என்றும் பொருள் புகன்றிருக்கிறார்கள்.

கரை, காடு, கோடு, முறி, வேலி, புலம், வயல், நிலம், மலை, மண், கண்டம், தரு, சேரி, ஓடி, தொடங்கிய இன்னோரன்ன பதங்கள், பொது-சிறப்பு இடப் பெயர்களின், ஈற்று உறுப்புக்களாக, அமைகின்றன. இக்கருத்தைக் கொண்டு, "குமரிக் கோடு" (சிலப், மதுரைக் காண்டம், காடு காண் காதை-வரி 20; புகார்க் காண்டம், வேனிற் காதை, முதற் கண் விருத்தியுரை, "தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும்") என்

பதற்கு, "குமரி முனை", அல்லது, "குமரி வரம்பு", என்று பொருள் கண்டு, முடிவு எய்துதல் எளிதே யாயினும், அது ஒரு தலைக் கூற்றாகும்; உண்மைக்கு மாறான கூற்று மாகும்.

பண்டைத் தமிழ் நாட்டெல்லையை யொட்டி, ஒன்றிரண்டு பிற்கால நூற்களின் வழி, துலங்கும் சான்றையும், துருவி, கோர்வைப் படுத்தல், முடிவு கருதி, வேண்டப் படுவ தாகின்றது.

சேற்றூர் சிற்றம்பலக் கவிராயர் வீட்டு ஏட்டுச் சுவடியிலிருந்து, மகாமகோபத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் கண்ட செய்யுளின் முதற் கண் தமிழகத்தின் எல்லை, பண்டைத் தமிழ் நூற்களில் வகுத்த வாறே, கூறப் பட்டிருக்கின்றது.

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத்,
தின்றான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற
செந்நாப் புலவர் செய்தி........"

[இச் செய்யுள் முழுதும், அய்யர் அவர்கள், சிலப் பதிகாரம், 1892-ம் வருடம் பதிப்பு 2-3-ம் பக்கங்களில், தரப் பெற்றிருக்கின்றது தமிழ் முச்சங்கங்களையும் பற்றிய விரிந்த குறிப்புக்கள் பல இவ் வாசிரியப்பாவில், அடங்கி யிருக்கின்றன.]

காலத்தாற் பிந்திய நூலாசிரியராகிய, பவணந்தி முனிவர், தமது நன்னூல் சிறப்புப் பாயிரத்தில், கூறி யிருப்பதும், இதுவே.

குணகடல் குமரி குடகம் வேங்கடம்,
எனுநான் கெல்லையி னிருந்தமிழ் கடலுள்'

இதன் பொருள்:- "கிழக்கே கீழ்கடலுந் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே குடகநாடும் வடக்கே திரு வேங்கடமும் என்று சொல்லப்படும் நான்கெல்லையினை யுடைய நிலத்து மொழியாகிய பெரிய தமிழென்னுங் கடலுள்."

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL

ஆகவே, பண்டையத் தமிழ் நூற்களும், பிற்காலத் தமிழ் நூற்களும், தமிழகம் எல்லையை, சற்றும் வேறுபாடின்றி, ஒரே விதத்தில், ஒன்று போல, அறுதியிட்டுக் கூறுவது, நிலை நாட்டப் பட்டது.

இந்நிலப் பகுதியில், மொழியாலும், மதத்தாலும், வழக்கத்தாலும், தெய்வக் கொள்கையாலும், சட்டத்தாலும், சடங்காலும், ஏற்பாட்டாலும், வழிபாட்டாலும், ஒரு சிறிதும் வேறு பாடில்லாது, பொது உரிமை யுடைய ஒரே தரத்து மக்கள், வாழ்ந்து வந்தனர். தமிழர் அனைவரும் ஒரே குலத்தினர், சமயத்தினர், தரத்தினர், வகுப்பினர். இந்நிலப் பகுதி தான் தமிழுலகம், தமிழ் உலவு அகம், தமிழர் உலகம், தமிழகம், தமிழர் தாயகம், தமிழ்த் தரைபாடு, தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த தமிழ்நாடு, தமிழ் மொழி தனித்து வாழ்ந்து வந்த தனித் தமிழ் நாடு.

இச் செய்திகளே, பண்டைய நூற்களில் மலிந்து கிடக்கின்றன; அவற்றைப் பொலிவுறச் செய்கின்றன.

செந்தமிழ், கொடுந்தமிழ், என இரு பிரிவின் பாற்படும், பண்டைத் தமிழ் மக்கள் வழங்கிய தமிழ்மொழி. செந்தமிழ் நாட்டு மொழி செந்தமிழ். "செந்தமிழ் நாடாவது, பாண்டி வளநாடு. தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும், தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும், சங்கப் புலவர்களுக்கும், உறைவிடம் அதுவாதலால்". வைகையாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், மருவூரின் மேற்கும், கருவூரின் கிழக்கும், உள்ளிட்ட நிலம், செந்தமிழ் நாடு. அதைச் சேர்ந்து கிடந்த, கொடுந் தமிழ் நிலங்கள் பன்னிரண்டிலும், கொடுந் தமிழ் வழக்கிலிருந்தது. "கொடுந் தமிழ் நாடு பன்னிரண்டையும்,

"பன்றியருவாவதன் வடக்கு—நன்றாய
சீதமலாடுபுனனாடுசெந்தமிழ்சே
ரேதமில்பன்னிருநாட்டெண்."

என்னும் வெண்பாவாலறிக.

மேற் கூறிய வெண்பாவில் காணப்படும், கொடுந் தமிழ் நாடுகளின் பண்டைய நிலைகள், ஏறத் தாழ, அறியற் பாலனவே.

செந்தமிழ்ப் பாண்டி வள நாட்டிற்குத் தென் திசை யிலுள்ளது, தென் பாண்டி நாடு. பூழி, வட மலையாளம்; குடம், தென் மலையாளம். குட்டம், கொச்சி; வேணாடு, திருவாங்கூர். கற்கா, பாலக்காடு. பன்றி நாடு, பழனி மலையைச் சுற்றிலு முள்ள நாடு. அருவா என்பது, தென் ஆற்காடு; அருவா வடதலை, செங்கற்பட்டு. சீத நாடு, கோயம்புத்தூரும், நீலகிரியும்; மலாடு, திருக்கோயிலூரை யடுத்தது. புனல் நாடு, சோழ நாடு.

குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, நாடுகளின் நிலப்பரப்பில் "மலையாளம்" அடங்கும்.

"அற்புத மூர்த்தி, முனிவு அற அருளிய, மூவேறு மொழி யுளும்", தமிழ் மொழி யொழிந்த, பிற மொழிகள் வழங்கி வந்த நாடுகளை,

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ்
சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந்
தெலுங்கங் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங்
கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி
னேழ் புவி தாழிவையே"

என்னும் கட்டளைக் கலித்துறையால் அறியலாம். இந் நாடு களி னின்றும், செந்தமிழ் நிலத்து வந்து, வழங்கும், சொற் கள், திசைச் சொற்கள் எனப்படும். இந் நிலங்கள், தமிழ் நிலத்தைச் சூழ்ந்து, நாற் றிசையிலும், சில, கடலைக் கடந்தும். கிடந்தன. இப்பொழுது நிலை பெறும், வேறு வேறு, பல பல, நாடுகளி னின்றும் வந்து, தமிழ் நாட்டில் வழங்கும் சொற்கள் எல்லாம், திசைச் சொற்

களாகவே கருதப் பட வேண்டு மெனல் இலக்கண முடை யாருடைய பரந்த நோக்கு. ஒதால் காப்பியனார் காலத்தி லேயே, திசைச் சொற்கள், தமிழில் புகத் தொடங்கி விட்டன. அரசியல் வாழ்விலும், வியாபாரத் துறையிலும், நாடுகள் மிகவும் பிணைந்து கிடக்கும் இந் நாளில், இன் றியமையாத பிற மொழிச் சொற்களை, தமிழில் புகா வண்ணம் தடுத்தல் தகுமோ........? எதிர் காலப் பிரச்னை.

மேற் போந்த கூற்றுக்கள், நன்னூலைச் சார்ந்தன; நன் னூலை அடிப்படையாகக் கொண்டன.

கி. பி. 1178-ஆம் ஆண்டை அடுத்து, சோழ நாட்டை அரசாண்ட, மூன்றாவது குலோத்துங்கனுடைய, ஆணைக் குட்பட்டு, நாடாண்ட, சிற்றரசன், சீயகங்கன் என்பான். அவன் "அருங் கலை விநோதன், அமரா பரணன்". அன் னான், மொழிந்தனனாக", அன்னவன் சபையிலேயே, சன்மதி முனிவன் பெற்ற, பவணந்தி யென்னும் பெயரை யுடைய, பெரிய தவத்தோன், "நன்னூல்" என்னும் நூலைச் செய்தான். இது நன்னூல் சிறப்புப் பாயிர கூற்று. ஆகவே "மலையாளம்" என்னும் சொல், ஒரு மொழிக்குப் பெயராக, பவணந்தியார் காலத்தில் உருப் பெற வில்லை என்பது பெறும்.

தமது நூற் பயனைப் பற்றிப், பாயிரத்தில் கம்பர் இது கூறுகிறார்:—

"வடகலைதென்கலைவடுகுகன்னடம்
இடமுளபாடையாதொன்றினாயினும்
திடமுளரகுகுலத்திராமன்றன்கதை
அடைவுடன்கேட்பவரமராராவரே."

தம் காலத்தில் வழக்கி லிருந்த மொழிகளை, ஒன்றன் பின் ஒன்றாக, குறிப் பிட்டுப் பேரிட்டு, வகுக்கின்றார் இவர். மலையாள மொழியில் இந்நாளில், பலர் இயற்றிய இராமாயண நூற்கள் இருக்கின்றன. இந்நூற்களோ அவற்றில், ஏதேனு மொன்றோ, கம்பர் நாளில், உயிர்

பெற்றிருந்தால், அவர் அச் செய்தியைப் புறக்கணித்திரார் ஆகையினுல், அவர் காலத்தில் மலையாள மொழி நிலவி லது. கம்பர் காலம் கி. பி. 1050-க்கும், 1125-க்கும் இடையில் என்பது, தெரிந்த விடயம். கி. பி. 1300-ஆம் ஆண்டிற்கு முன்பு, மலையாள மொழி என்று ஒரு மொழி, பரவ வில்லை.

மொழியில், மலையாள மகனும் தமிழ் மகனும் ஒன்று பட்டவரே; மாத்திரமல்ல; மலையாள மகனே தமிழ் மகனுவான். சுருங்கக் கூறுமிடத்து, மலையாளம் என்ற பெயருடன் வழங்கும் மொழி, கி. பி. பத்தாம் நூற்றுண் டிற்கு முன்புள்ள தமிழே. மலையாள நெடுங்கணக்கு, தமிழ் நெடுங்கணக்கே. மலையாள அகரவரி புராதனத் தமிழ் அகராதியே. மலையாள இலக்கணம் முழுத் தமிழ் இலக்கணமே. மலையாள இலக்கியம் தனித் தமிழ் இலக்கியமே.

இவ்வரிசையில் ஒவ்வொரு கூற்றையும் ஏற்றவாறு தேர்வு செய்தல் முறைமை.

புராதன காலத்து மலைநாட்டு நெடுங்கணக்கு வட்டெழுத் தாகும். தென்னுட்டுப் பிரதேசங்களைத் தமது உறைவிடமாகக் கொண்ட ஆதிச் சமணர்களால், முதன் முதலாக, அங்குப் புகுத்தப் பட்ட "அசோக பிராஹ்மி" நெடுங்கணக்கே, இதுவா யிருத்தல் வேண்டும். அசோக நெடுங்கணக்குத் தான் வட்டெழுத்திற்கு மூலகாரணம்.

இங்ஙனமிருக்க, டாக்டர் பர்னல் துரைமகனுர், அசோக நெடுங்கணக்கும், வட்டெழுத்து நெடுங்கணக்கும், தம்மில், முழுதும், வேறுபட்டன வென்றும், வெவ் வேறு சமயங்களில், வேறு வேறு வழிகளில், தனிப்பட்ட இயல்பு வாய்ந்தன வாய், புறமே நின்று, இந்திய நாட்டிற்குள், நுழைந்தன, வென்றும், தமது "தென்னிந்திய மொழிக ளின் பண்டைய வரிவடிவு ஆராய்ச்சி நூலி"ன் ("Elements of South Indian Palaegraphy") 13-வது பக்கத்தில் கூறி, சேர்த்திருக்கும் பட்டிகை வாயிலாய் அதனை விளக்குகிறுர்

வட்டெழுத்து ஒழிந்த எனையத் தென்னிந்திய மொழிகளின் நெடுங்கணக்கு உற்பத்திப் பட்டிகை.

அசோக எழுத்துக்கள். கி. மு. 250



திருவாங்கூர், "புதைபொருள் புலர்த்துத் தொகுதி" எண் (XVI), பக்கம், 280-ல், திரு, து. அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள், டாக்டர், பர்னல் துரையின் கொள்கையை வெட்டி, நாகரம், தமிழ்-கிரந்தம், தெலுங்கு-கன்னடம், முதலிய கூட்டங்களின் நெடுங்கணக்கு வகைகளைப் போன்று, வட்டெழுத்தும், அசோக-நெடுங் கணக்கின் பிராஹ்மி உட்பிரிவிலிருந்தே முளைத்து, உற்று நோக்கின், ஏனைய நெடுங்கணக்கு வகைகளுக்குப் பல வழிகளிலும் ஒருமைப் பட்டு, ஆனால், தனிப்பட்ட ஒரு முறையில், வளர்ச்சி பெற்று, வந்திருக்கும், கதையை நன்கு விளக்கியிருக்கின்றார்கள். இக் கொள்கையை யொட்டி, கீழ்க்காணும் பட்டிகை, உற்ற வேறுபாடு களுடன், தயாரிக்கப் பட்டிருக்கின்றது.

தென் இந்திய மொழிகளின் நெடுங்கணக்கு உற்பத்திப் பட்டிகை.



திருவாங்கூர். (உதாரணம், ராம மார்த்தாண்ட வர்மனுடைய நாவாய்க்குளம் கல்வெட்டு, கொல்லம் வருஷம் 614), கொச்சி, (உ–ம், திருச்சிவ பேரூர், வடக்குநாதன் கோவில் கல் வெட்டு), திருநெல்வேலி ஜில்லாவின் தெற்குப் பாகம், (உ-ம், அம்பாசமுத்திரத்திலும், திருச்செந்தூரிலும் உள்ள வரகுண பாண்டியனுடைய கல்வெட்டுக்கள்), மதுரையின் பல பாகங்கள், (உ–ம், திருப்பரங் குன்றம் கோவில் கல் வெட்டு), இவ் விடங்களி லுள்ள பழைய கற் பொறிப்புக்கள் எல்லாம், வட்டெழுத்திலேயே செதுக்கப் பட்டிருக்கின்றன. நாவாய்க்குளம் கல் வெட்டு, இங்குத் தமிழில், மாதிரிக்காக, எடுத்து எழுதப்பட்டிருக்கின்றது.

1, ஹரி (||*) ஸ ஸி ஸ்ரீ (||*) கொல்லம்
வ த
௲௱௰௪ வாமாண்டு இடப ஞாயிறு ௨௰௨ உ சென்ற நாள் வடசேரி இ(ல்)லத்(து)ள் கீழப் பேரூர் சிரி வீர இராம மார்த்தாண்டராய சேதுங்க நாட்டு மூத்த திருவடி–

2. இருந் நருளி யெடம் திரு நாவாய்க் களத்து சங்கர நாராயண (மூ)ர்த்தி.................முன்னுள் ௲௱௰௩ மாண்டு இடப ஞாயிறு ௨௰ திங்களாழ்ச்சயும் புண—

3. ர்தவும் திதியயும் அன்று யிதினம் ராசி கொண்டு தங்கோதிய மச்சு கல்பணியும் செய் விச்சு சிரி கோயிலும் மண்டபவு மைச்சு படிப் பு—

4. ரையும் செம்பு மேவிச்சு ௲௰௪ மாண்டு இடப ஞாயிறு ௨௰௪ சென்ற திங்களாழ்ச்சயும் பூப்பும் பஞ்சமியும் அன்றே இடபம்–

5. ராசி கொண்டு–

6. கலசம் ஆடி அருளிது,

(தி. பு. பொ பு. தொ. (XVI) பக். 299.)

வட்டெழுத்து ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்பு வரையிலும், மலை நாட்டில் நடைமுறையில் கையாளப்பட்டுவந்தது. அதற்குப் பின்பு, தான், ஆரிய எழுத்து என்று வழங்கும் கிரந்த எழுத்து, மலையாள நாட்டில் நிலைக்கத்தலைப்பட்டது. மலையாள மொழி யிலிடத்துப் புகுந்த பெருவாரியான வடசொற்களைத், திறம்பட எழுதுவதற்கென்றே, முதலில், இதை ஏற்கவேண்டியதாயிற்று. இந்த கிரந்த இலபி, தமிழ்ச் சொற்களை எழுதுவதற்கு, உற்ற வாறு துணை புரிந்திலது.

மலையாள நெடுங்கணக்கிலேயே, இப்பொழுது, மலையாள மொழியை, எழுதுகிறார்கள். மலையாள—நெடுங்கணக்கு என்பது, கீழ்கரை கிரந்த-அரிவரி தான். பதினோந்தாம் நூற்றாண்டு முதற் கொண்டு, இந்த இலபி கல்வெட்டுக்களில் இடம் பெறுகின்றது; நாடோடி முறையில், ஆதியாக, திருவிடைக்கோட்டுக் கற்பொறிப்பில் (கொல், 548) தான், காணப்படுகின்றது. (தி. பு. பொ. பு. தொ XI பக்கம் 17—19).

அறிவு படைத்த வகுப்பாரே, சிறப்பித்தும், மலையாளப் பிராமணரே, இந்த மலையாள இலபியைக் கையாண்டார்கள். பெரிய நாயர் 'தரைபாடு' களிலும், நம்பூரி 'இல்லங்' களிலும், எண்பது தொண்ணூறு வருடங்களுக்கு முன்பு வரையும், கணக்குச் சுருணைகள் எல்லாம், சிதைந்த வட்டெழுத்து இலபியிலேயே எழுதப்பட்டு வந்தன. "மலையாழ்ம" என்ற சிதைந்த வட்டெழுத்து, நாஞ்சில் நாட்டில் வழக்கிலிருந்தது. பல கல்வெட்டுக்களும், ஏட்டுச் சுவடிகளும், "மலையாழ்ம"யில் இந் நாட்டில் காணப்படும். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரையும், மேற்குக் கரையில், வட்டெழுத்து, இங்கும் அங்கும், ஒளித்தும் பதுங்கியும், இருந்து, கடைசியாக, மலையாள-கிரந்த இலபிக்கு இடம் கொடுத்து விட்டு, மறைந்தது. (தி-பு-பொ-பு-தொ-XVI. பக். 283-முன்னுரை).

"மலையாள மொழியின் வரலாறு" என்ற தலைப்பின் கீழ், 'மலபார் க்வார்டர்லி ரிவியூ', (Malabar Quarterly Review) தொகுதி VI, 214—தொடங்கிய பக்கங்களில், திரு. சேஷகிரி பிரபு, எம். ஏ. அவர்கள், மலையாள பாஷைக்கு, அ-இ-உ-எ-ஒ என்ற குறிலும், ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்ற நெடிலும், க-ச-ட-த-ப என்ற வல்லினமும், ங-ஞ-ண-ந-ம என்ற மெல்லினமும், ய-ர-ல-வ என்ற இடையினமு(இடை உயிரு)ம், ற-ழ-ள என்ற 'ப்ரதிவர்ம'ங்களும், மாத்திரமே வேண்டப்படுவன, என்று, காரிய காரண விளக்கத்துடன், விவரித்திருக்கின்றுர்கள். குறைந்தது, இரண்டாயிரம் வருடங்கட்கு முன்பே, தமிழ் இலக்கண நூலார் கண்டதும், எழுநூறு வருடங்கட்கு முன்னரே நன்னூலார் கூறியதும், ஆன, 'உயிரு முடம்புமா முப்பது முதலே', என்ற மெய்ம்மையே இது.

'நியூமிஸ் மாட்டிகா ஓரியண்டாலிா'-1886—2-ம் பக்கத்தில், ஸர் வால்டர் ஏலியட் "வடமொழி ஒலிக் குறிப்பு முறை, தெற்கிலிருந்து வந்தது. ஆரிய-நெடுங்கணக்கிலுள்ள இடுக்கண், மக்கள் எல்லாம் நன்கு அமைந்த, சமன் செய்யப்பெற்ற தென்னுட்டு முறையை கைக் கொண்டதனுல்தான், நீங்கிற்று" என்று கூறியிருப்பதைச், சீர்தூக்கிப் பார்க்க இடம் வருகின்றது.

ஆகவே, மலையாள நெடுங்கணக்கில் வேண்டாக்கிளவிகள் உள.

കണ്ടുകൃഷി (Kantu—Krishi) என்று எழுதி Kandu—Krishi, என்று வாசிப்பதும், உண்டு-(Unto) ചങ്ക്-(Chanku) അങ്കമാലി -(Ankamali), അഞ്ചു്-(Anchu), എന്റു്-(Entu)

அம்பலம்-(Ampalam) என்று எழுதி, இவற்றை முறையே, Undo, Changu, Angamali, Anju, Enda, Ambalam, என்று வாசிப்பதும், உதாரணங்களாம்.

மலை நாட்டு மொழியில் காணப்படும் தமிழ் அம்சத்தைக் குறிக்க, கிரந்த அரிவரி மிகை. தமிழ் நெடுங்கணக்கோ, வட்டெழுத்தோ, போதுமானது.

மலையாள நெடுங்கணக்கிலுள்ள எல்லா எழுத்துக்களுக்கும், சரியானவாறு "பிரதி நிதித்துவம்" வரத்தக்க வண்ணம், மொழிப் பரப்பில், சொற்கள் விரவிக் காணப் படவில்லை. "ஙூ" எழுத்திற்கு ஒரே ஒரு சொல்லும், "ஞ" விற்கு மூன்றும், "ம" விற்கு ஒன்றும் மாத்திரமே டாக்டர் குண்டர்ட் (Dr. Gundert) அகராதியில் காணப் படுகின்றன.

எழுத்துப் பெருக்கு ஒரு புறம் இருக்க. எழுத்துக் குறைவும் மறுபுறம் இருக்கத்தான் செய்கின்றது. காலஞ் சென்ற திரு ஏ ஆர். ராஜ ராஜ வர்மா கோயில் தம்பிரான் எம். ஏ. அவர்கள், 'ഩ' என்ற எழுத்தை, தமிழ் னகரத்திற்குப் பதிலாகப் புகுத்தினார்கள்.

வரிவடிவும், ஒலிவடிவும், இனமொத்து வாழவில்லை. உதாரணமாக "஗ஜம்" "ஜனு" என்று எழுதி "கெஜம்", "ஜெனு" என்று உச்சரிக்க வேண்டியிருக்கின்றது.

க-ச-ட-த-ப, என்ற வல்லெழுத்துக்கள், மொழிக்கு முதலில், வல்லோசை உடையன; தனித்தும், தத்தம் இனவெழுத்துடன் சேர்ந்தும், வரின், மெல்லோசை அடைவன. இது தமிழ் நியமம். "எடுத்தல் படுத்தல் நலிதல் லுழப்பின், திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்," என்ற நன்னூல்,

88-ம் சூத்திரத்தின், "முதலெழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை: ஒரு எழுத்தே வெவ்வேறு வழியாக ஒலித்தல்" என்ற உட்கருத்து இங்கு அறியற்பாலது. தற்சமம்' தற்பவம் சொற்களிடத்து, வல்லெழுத்துக்களுக்கு, ஆரிய ஐவருக்க (நன்-சூ, 146, வடமொழி ஆக்கம்) உச்சரிப்பு எல்லாம், உரிமையுள எனவரினும், தமிழன், ஒன்று இரண்டு வித்தியாசப்பட்ட உச்சரிப்புடன் நின்றுவிடுவான்.

கடல், கண்டு, கல், வகை, சால, வசம், நிசம் (நிஜம், வடமொழி), தார் (மாலை), சுதவு, பல், சுங்கம் (வரி), அஞ்சு (ஐந்து), தந்தை, நம்பு; தந்தது; காரணம், சிந்தா சந்தானம்: இவ் வுதாரணங்கள் வழி மேற் கூறிய விதிகள் விளங்கும்.

உடல் உயிரென, வரையறுத்த அக்காலத்துச் சூழ்நிலையையும், அந்நாள் மக்கள் மன எழுச்சியையும் அதன் போக்கையும், மனநூல் முறையில் உய்த்து உணராது, பண்டைத் தமிழ் இலக்கண வல்லுநர்களைக் குறை கூறுவது சிறக்காது. நெடுங்கணக்கு, ஒரு வாற்றானும், குறை உடையதாகாது ஶ-ஷ-ஸ-ஹ-க்ஷ- போன்ற கனத்த ஒலி எழுத்துக்களைப் பேணாது, தமிழன், தனிச் சிறப்பு வாய்ந்த "ழ"கரத்தை, போற்றுவானாயினான். விஷத்தை விழமென்றும், சாக்ஷியை சாக்கி என்றும் கூறத் தலைப்பட்டான். திரு கனகசபைப் பிள்ளையவர்கள் பி. ஏ. பி. எல். உள்ளிட்ட மேதாவிகள், "தமிழ்" என்பதை "இனிமை" என்று பொருள்படக் கொண்டார்கள். வடமொழிச் சொற்கள் விரவி வராவிடத்து, செய்யுள் இனிமை யுடைத்து, என்பதை விளக்க, திருச்செந்தூர், பிள்ளைத் தமிழுக்கும், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழுக்கும் உள்ள, ஒலிவடிவு வேறுபாட்டை, எடுத்துக் காட்டு வார்கள்............... நிற்க.

மொழிகள் ஆராய்ச்சித் துறை, நாளுக்கு நாள் வன்மை யுற்றுச் சீர்மைபெற்று வருகின்றது.

புத்தம் புது நற்செய்திகள் நிலவுகின்றன.
பழங்காலக் கூற்றுக்கள் விலகுகின்றன.

"ழகரம் வந்துள்ள சொல் தனித் தமிழ் என்ற கொள்கை தமிழ் அறிஞர்களுக்குள் இருந்து வரு" வது "பிழையாம் என்ப"தைப்பல எடுத்துக் காட்டுக்கள் வழி, திரு எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள், தமது "திராவிட மொழிகளில் ஆராய்ச்சி" மொழி பெயர்ப்பு (1947) நூலில் (19—20 பக்கம்,) நிரூபித்திருக்கிறார்கள்.

தமிழ் ஆராய்ச்சி வளர்வதாக.

அகராதிச் சொன் மாலை வரிசைக்கு, இந்த அத்தாட்சியே போதும். டாக்டர் குண்டர்ட்டின் அகராதி முதன்மை வாய்ந்தது. இதை, மனம் போல் புரட்டவே, 832-ம் பக்கம் நம் கண்ணில் படுவதாக நினைத்துக் கொள்வோம், "முதல" என்ற சொல்லுடன் தொடங்கி "முதிருக" என்ற சொல்லோடு, அந்தப்பக்கம் முடிவடைகின்றது. இருபத்தாறு சொற்கள் இங்ஙனம் காணப்படுவதில், பதினெட்டாம், பத்தொன்பதாம், சொற்களின் கடை உறுப்புக்களாகிய, "திரவியம்", "நஷ்டம்" என்ற வட சொற்கள் ஒழிய, ஏனைய இருபத்துநான்கு முழுச் சொற்களும், தமிழுக்கும் மலையாளத்திற்கும் பொது. அச் சொற்கள் இன்றும் தமிழ் வழக்கில் இருப்பன; ஓசையிலும், எழுத்துக்கூட்டலிலும், உச்சரிப்பிலும், பொதுவாக, அவ்வ இருமொழிச் சொற்கள், தம்முள் ஒத்து இயங்குகின்றன.

கீழ்க் காணும் சொற் கூட்டங்களை நோக்குழி, இவ் வுண்மையே விளங்கும். குண்டர்ட்டு நிகண்டு, 16-ம் பக்கத்தில் காணப்படும், 'அடுக்கும் வண்ணம்", 31 ல், "வீரர் அரனகம் வர்ய்ந்தார்", 62—ல், "வங்கடலும் வெந்தவீயுந்து வெந்தவித்து வெண்ணீராயீ முடிந்தன", என்று தொடங்கிய, முயற்சி இன்றி கண்ணிற் படும், தொடர் மொழிகள் தமிழில் ஊன்றியவைவயே.

சிறப்புவிதி வழி, பொது விதி வலியுறு கின்றது. பழங்காலத்து—இக்காலத்து, மலையாளப் புலவர் சிலருடைய கூற்றுக்களும், அவ்வவற்றின் கீழ், வேறுபாடு இன்மையை எடுத்துக் காட்டக்; தமிழ் பெயர்ப்புக்களும் தரப்பெறுகின்றன.

രാമചരിതം.

അറുത്തനനരക്കൻ കണ്ടം അങ്കതനെൻറുകേട്ടു
മറുത്തവല്ലറി കുലങ്കൾ തൻ വമ്പിനെയമ്പുകൊണ്ടേ.

ராமசரிதம்

அறுத்தனன் அரக்கன் கண்டம்
அங்கதன் என்று கேட்டு—
மறுத்த வல்லரிக் குலங்கள் தன் (ம்)
வம்பினை அம்பு கொண்டே...............

(രാമകഥപ്പാട്ടു

അരക്കർകുലംവേരറുക്കവേണമെൻറമരർകളും
അലൈകടലിൽചെൻറുമുറയിട്ടതും.
ആഴിവണ്ണനനാരുളിച്ചെയ്തതും
മുനിവരൻെറഹോമകുണ്ഡംതന്നിൽനിന്ന
ദിവ്യനായകനുദയംചെയ്തതും
ദശരഥൻമകിഴ്ന്ത് വാങ്കിക്കൊണ്ടതും
കൊണ്ടുടൻതൻഭാര്യമാർക്കുപായസംകൊടുത്തതും
കുവലയത്തിൽമങ്കമാർഭുജിത്തതും

(അയ്യിപ്പിള്ള ആശാൻ)

இராமகதைப் பாட்டு:—

அரக்கர்குலம்வேர றுக்கவேணு மென் றமரர்களும்
அலைகடலில்சென் று முறையிட்டதும்
ஆழிவர்ண்ணனன் ன(ற)ருளிச்செய்ததும்
முனிவரன்றெ(னுடைய)ஹோமகுண்டம்தன்னில்
நின்னு(ற)

திவ்யநாயகனுதயம்செய்ததும்
தசரதனுமகிழ்ந்துவாங்கி(க்)கொண்டதும்
கொண்டுடன் தன் பார்(ை)யமார்க்குப்பாயஸம்
கொடுத்ததும்

குவலயத்தில்மங்(ை)கமார்பூஜித்ததும்.
(அயிப்பிள்ளி ஆசான்)

ഉണ്ണുനീലിസന്ദേശം.

കണ്ഠംവണ്ടിൻനിറമുടയനെക്കൈകനീരോടുതിങ്കൾ
തുണ്ടംചാർത്തുംവരനെവരമാതിന്നുമൈപാതിയോനെ
മണ്ടുംമാനേൽക്കരനെയരനെകംഭിപാമ്പാക്കിയോനെ
കണ്ടേപോവാൻതരമവിടനീകണ്ടിയൂർത്തമ്പിരാനെ
(പൂർവ്വസന്ദേശം. 99.)

உண்ணு நீலீ சந்தேசம்

கண்டம் வண்டின் நிறமு(ை)டயனே கங்(ை)கநீ
ரோடு திங்கள்
துண்டம் சார்த்தும் பரனே வ(ை)ரமா தின்னுமை
பாதி யோனே
மண்டும் மானேல் கரனே அரனே கம்பி பாம்பா
(பிணையா)க்கி யோனேக்
கண்டே போவான் தரமி விடநீ கண்டியூர்த்
தம்பிரானே
(பூர்வ சந்தேசம். 99)

കുഞ്ചൻനമ്പ്യാർ

ഇന്നുമുനികൾഞങ്ങൾചെന്നങ്ങുണർത്തിച്ചിടും
ഒന്നുമരുൾചെയ്യാഞ്ഞുപോന്നുഞങ്ങളെല്ലാരും
കുന്നിൻമകളെനീതാൻചെന്നങ്ങുണർത്തിച്ചെന്നാൽ
നന്നായ്ഫലിക്കുമെന്നുതോന്നുന്നുഞങ്ങൾക്കെല്ലാം

(കിരാതം ഓട്ടംതുള്ളൽ)

குஞ்ஞன் நம்பியார்

இன்னு(று) முநிகள் ஞ(ந)ங்ங(க)ள்
சென்ன (ற)ங் ஙு(குணர்த்திச் சீ(சி)டும்
ஒன்னு(று) மருள்செய் யாஞ்ஞு (ந்து)
போந்நு (து) ஞ(ந) ங்களெல் லாரும்
குன்னி(றி)ன் மகளே நீதான்
சென்ன(ற)ங் குணர்த்திச் சென்ஞு(று)ல்
நன்ஞு(று)ய் (ப்) பலிக்கு மென்னு(று)
தோன்னு(று)(க)ன்னு(று) ஞ(ந)ங்ங(க)ள்(ட்)
கெல்லாம்

(கிராதம்-ஓட்டம்துள்ளல்)

ഭാരതം

വിടുമാറടിമനിനക്കമൃതിന്നുഞാൻ
വിടക്കൊൾവാനശനന്തരികെന്റാൻ
ഉടനെഗരുഡനുമതുകേട്ടവളിനി
യുപയോഗിക്കനിഷാദരെയെന്റാൾ
തട്ടുമാറെയ്തിയവേടരെവിനതാ
തനയനുമടിയന്റന്തണനൊട്ടും
ചുട്ടുമൊറായിതുകണ്ടുമവനൊരു
ചൂണ്ടൽകണക്കെവിപ്രനെയുണ്ണാൻ.

(ഉപക്രമപർവ്വം)

பாரதம்:-

விடுமா றடிமை நினக்கமு
திநு நான் விடைகொள்
வான் அசனந்தரு கென்றான்
உடனே கருடனு மதுகேட்
டவனினி யுபயோ
சிக்க நிஷாதரை யென்றாள்
தடுமா றெய்திய வேடரை
விநதா தநயனு
யடியன் அந்தணனுடே
சுடுமொ றாயிது கண்டம்
அவனொரு சூண்டல்
கணக்கே விப்ரனை யுண்ணான்

(உபக்கிரமபர்வம்)

തുഞ്ചത്തുഎഴുത്തച്ഛൻ

എങ്കിൽഞാനിരിപ്പതിനടുത്തുവസിക്കനീ
സങ്കടമിനിയൊന്നുകൊണ്ടുമേനിനക്കില്ല
ശങ്കിച്ചേനല്ലോനിന്നെഞാനതുകഷ്ടംകഷ്ടം
കിങ്കരപ്രവരനായ്വാഴ്കമേലിൽഭവാൻ.

(അദ്ധ്യാത്മരാമായണം, ആരണ്യകാണ്ഡം)

துஞ்சத்து எழுத்தச்சன்.

எங்(ன்)கில்நா னிருப்பதி னடுத்து வஸிக்கநீ
ஸங்கட மினியொன்று கொண்மே நினக்கில்லை
சங்கிச்சே னல்லோ நின்னை நானது கஷ்டம் கஷ்டம்
கிங்கரப் ரவரனாய் வாழ்கமே லில் பவான்.

(அத்தியாத்ம ராமாயணம், ஆரண்யகாண்டம்)

കേരളവർമ്മ വലിയകോയിത്തമ്പുരാൻ.

സിദ്ധൻചോദിച്ചു "അതെന്താണ്? അതിനു വിരോധമായി യാതൊരു കാരണവും ഞാൻ കാണുന്നില്ല എന്നു മാത്രമല്ല, നിങ്ങളുടെ മിത്രമിപ്പോഴും താമസിക്കുന്ന രാജ്യത്തെക്കുറിച്ചു നിങ്ങൾക്കറിയാൻ രസമുള്ളതായി പലതും എനിക്കു പറയാനും ഉണ്ടായിരിക്കുമല്ലോ?"

അക്ബർ.

கேரளவர்ம வலிய கோயித்த(ற்ற)ம்பு(பி)ரான்

ஸித்தன் சோதித்தான், "அதென்ன வாகின்றது? அதற்கு விரோதமாய் யாதொரு காரணமும் நான் காணுகின்றில்லை. என்று மாத்திரமல்ல, நுங்களுடைய மித்திரமிப்போழ்து தாமசிக்கின்ற ராஜ்யத்தைக் குறித்து நுங்கட்கறிவான் ரஸமுள்ளத(வ)ாய பலது(வு)ம் எனக்கு(ப்)பற(றை)வானு (சொல்வானு)முண்டாயிரி(ரு)க்குமெல்லோ(மல்லவோ)?"

(அக்பர்)

ഏ. ആർ. രാജരാജവർമ്മ കോയിത്തമ്പുരാൻ.

ഭാഷകൊണ്ടു ആശയങ്ങളെ വെളിവായി പ്രകാശിപ്പിക്കുന്ന കലയ്ക്കു സാഹിത്യവിദ്യ എന്നു പേർ. വായ്മൊഴി എന്നും വരമൊഴി എന്നും ഭാഷയ്ക്കുരണ്ടു പിരിവ് വ്യാകരണത്തിൽ പറഞ്ഞിട്ടുള്ളതിൽ വരമൊഴി എല്ലാം സാഹിത്യത്തിൽ അടങ്ങുന്നു. സാധാരണ നിത്യവൃത്തിയിലെ ആവശ്യങ്ങളിൽ ഒഴികെയുള്ള ഭാഷയുടെ വിനിയോഗമെല്ലാം തന്നെ സാഹിത്യത്തിൽ ഉൾപ്പെട്ടതായി വിചാരിക്കാം. സഭായോഗങ്ങളിലും മററും ചെയ്യുന്ന പ്രസംഗം കോടതികളിൽ വക്കീലന്മാർചെയ്യുന്ന ഉപന്യാസം, ക്ലാസ്സുകളിൽ പ്രൊഫസറന്മാർ നടത്തുന്നവ്യാഖ്യാനം ഇതെല്ലാം വരമൊഴി അല്ലെങ്കിലും സാഹിത്യത്തിൽ അന്തർഭവിക്കുന്നു. നേരെമറിച്ചു വർത്തമാനക്കത്തുകൾ കണക്കുകൾ വരിയോ

ലകം മുതലായവ വരമൊഴികളാണെങ്കിലും സാഹിത്യമെന്നു ഗണിക്കപ്പെടാറില്ല. സാഹിത്യമെന്നശബ്ദം വ്യാപകമായ അൎത്ഥത്തിൽ സൎവ്വവിധമായ ലിഖിതഭാഷയേയും ക്രോഡീകരിക്കുന്നു. വ്യാപ്യമായ അൎത്ഥത്തിലാകട്ടെ ആശബ്ദംകൊണ്ടു വിജ്ഞാനപ്രദങ്ങളും വിനോദകരങ്ങളും ആയഗ്രന്ഥങ്ങളെ മാത്രമെഗ്രഹിക്കാറുള്ളു.

(സാഹിത്യസാഹ്യം പേജ് 35)

ஏ. ஆர். ராஜ ராஜவர்ம்ம கோயித்த(ற்ற)ம்பு(பி)ரான்.

பாஷைகொண்டு ஆசயங்களை வெளியாய் ப்ரகாசிப்பிக்கின்ற கலைக்கு ஸாஹித்ய வித்தை என்று பேர். வாய்மொழியென்றும் வரைமொழியென்றும் பாஷைக்கிரண்டு பிரிவுகள் வ்யாகரணத்தில் பறைந்திட்டுள்ளதில் (சொல்லப்பட்டுள்ளவற்றில்) வரைமொழி யெல்லாம் ஸாஹித்தியத்தில் அடங்குகின்றன. ஸாதாரண நித்யவ்ருத்தியிலே அவச்யங்களில் ஒழிய உள்ள பாஷயுடைய விநியோகமெல்லாம் தாம் ஸாஹித்யத்தில் உட்பட்டவையாய் விசாரிக்கலாம். ஸபாயோகங்களிலும் மற்றிலும் செய்கின்ற பிரசங்கம், கோர்ட்டுகளில் வக்கீல்மார் செய்கின்ற உபந்யாஸம், கிளாஸ்களில் ப்ரொபெஸர்மார் செய்கின்ற வ்யாக்கியாநம் இதெல்லாம் (இவையெல்லாம்) வரைமொழியல்லவென்கிலும் ஸாஹித்யத்தில் அந்தர்ப்பவிக்கின்றன. நேரேமறி(த்து)ச்சு வர்த்தமானகத்து(க்)கள் (நிருபங்கள்), கணக்கு(க்)கள்.. வரியோலைகள் முதலாயவை வரைமொழிகளாகின்றனவென்கிலும் ஸாஹித்யமென்று கணிக்கப்படுமாறில்லை. ஸாஹித்யமென்ற சப்தம் வ்யாபகமாய அர்த்தத்தில் ஸர்வவிதமாய லிகிதபாஷையையும் க்ரோடீகரிக்கின்றது. வ்யாப்யமான அர்த்தத்திலாயின் அச்சப்தம்கொண்டு விஜ்ஞானப்ரதங்களும் விநோதகரங்களும் ஆய க்ரந்தங்களை மாத்திரமே கிரஹிக்குமாறுண்டு.

(பக்கம் 35, ஸாஹித்ய ஸாஹ்யம்)

ചന്തു മേനവൻ

പൂഞ്ചോലക്കരയിടത്തിലെ ആശ്രിതനും തെക്കൻചരക്കവ്യാപാരക്കാരനും ആയിരുന്ന വൈത്തിപ്പട്ടർ കാഴ്ചയിൽ വളരെ വിരൂപനായിരുന്നു.

(ശാരദ)

சந்து மேனவன்.

பூஞ்சோலைக்க(ை)ரயிடத்திலே ஆச்ருதனும் தெக்(ற்) கன் சரக்குவியாபாரக்காரனும் ஆயிருந்ந(த) வைத்திப் பட்டர் காழ்ச்ச(ட்சி)யில் விருபனுயிருந்நு(து) இருந்தான்.

(சார(ை)த)

தமிழ் மொழியின் உடன்பிறந்தாளுமன்று, தமிழ் மொழியின் வயிற்றில் பிறந்த பெண்ணுமன்று, மலையாளம். தமிழே மலையாளம். மலையாளமே தமிழ். திருந்தக் கூறின், செந்தமிழே கொடுமலையாளம். இயற்சொற்களால் யாக்கப்பட்டு கற்றோர் பொருள் உணர வல்லதாய் இருப்பது "செந்தமிழ்". தனித் தமிழ்ச் சொற்களே இந் நடையில் இடம் பெறும். மலையாள நடையில், மலையாளச் சொற்களுக்கு அல்லாது, வேற்றுச் சொற்களுக்குச் சற்றும் இடம் கொடுக்காத மலையாள நடைமொழி, "கொடு மலையாளம்". பொதுவாக, அரிதிற் பொருள்படும் மலையாள மொழி வகைக்கு, கொடுமலையாளம் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுமலையாளம் பேசப்படும் மலைநாட்டுப் பகுதிக்கு, "கொடுமலையாளம்" என்ற பெயர் உண்டு. "கொடு மலையாளக் குடியிருப்புடையேன்" என்று "மனோன்மணீயப்" பேராசிரியர் கூறுவதில், இப் பொருளும் தொங்கி நிற்கின்றது. வடமொழிக்குப் பெரிதும் கடப்பாடு உடையது மலையாளம். வடமொழிச் சொற்களைப் பெரிதும் புகுத்தி, மலையாள மொழியை, அரிதிற்

பொருள் படும் மொழியாக, யாத்தல், சாலும்; என்றால், அது, கொடு மலையாள மொழி ஆகாது. ஆகவே, கொடு மலையாள மொழி என்பது, ஆரியக் கலப்பு ஏற்படுவதற்கு முன்னால் மலையாள மொழியில் மலிந்து கிடந்த தனி இயற் சொற்களால்; யாக்கப்பட்ட நடைமொழியாகும். இப் பொருளிலிலேயே இத் தொடர் ஈண்டு கையாளப் பட்டிருக்கின்றது. "செம்மலையாளம்" என்ற தொடர்மொழி ஒன்று இருக்கு மாயின், அதன் பொருள், செந்தமிழ் என்னும், தொடருக்கு வாய்ந்துள்ளதிலிருந்து உய்த்து உணரப்படும். செந்தமிழ் அல்லாத கொச்சைத் தமிழை "கருந்தமிழ்" என்பர். "கருந்தமிழுஞ் செந்தமிழாங் கோவைத் தினகரா" என்பது, ஆன்றோர் சொல். "கரிந்தமிழ்" மலைநாட்டில் வழக்கிலிருக்கின்றது. மலையாள மொழியின் பூர்வஸ்திதியை, இத் தொடர்வழி குறிப் பிடுகின்றனர், மலைநாட்டு மக்கள் "கொடுமலையாளம்" இறக்கவே, "கரிந்தமிழ்" பிறந்தது எனலாம்.

ஆரியக் கலப்பு, செந்தமிழையும், கொடுமலையாளத் தையும் ஒருங்கே தூய்மை இழக்கச் செய்தது. ஆரியச் சொற்களை நீக்கிவிட்டால், மலையாள நடையில் எஞ்சி நிற்கும் சொற்கள் எல்லாம், தனித் தமிழ்ச் சொற்கள், தூய தமிழ்ச் சொற்கள், தமிழ் நாட்டில் தற்பொழுது வழக்காறு அற்ற அருஞ்சொற்கள், வரலாறு மிகுந்த, பொருள் செறிந்த, பழஞ் சொற்கள்,—என்றுவேண்டா— பலவாற்றாலும், மாண்புமலிந்த செஞ்சொற்கள்—ஆகவே, காணப்படும். மலைநாட்டுத் தமிழ் மாசு, மறு அற்றது, செப்பன செய்யப்பட்டது, நேர் பொருள் படைத்தது. சூழ் நிலையையொட்டி, இங்கும் அங்கும் பொருட் படுத்த வேண்டா ஒன்றோ இரண்டோ சின்னஞ்சிறு வேறுபாடு கள், காணப்படலாம். மலைநாட்டின், தனி, நீர்-மலை- அரண் வலியாலும், மக்களின் முற்கூறிய மெதுவானப் போக்காலும், நாட்டு மொழி சீர்மை குன்றாது, அன்று இருந்தது போன்றே,-அன்று கண்ட மேனிக்கு அழிவில்லா

மல்,—இன்றுகாறும், நின்று வருகின்றது. கீழக்கரையில் மக்கள் வழக்கில் இன்று காணக்கிடையாச் சங்கச் சொற்கள் பல, மலையாள மக்கள் நாடோடிப் பேச்சில் மலிந்து கிடக்கின்றன. உவா, (உவாவு, வாவு,) வழிபாடு, தொழுதல், பலிசை, குப்பாயம். கும்மாயம், செவ்வனே, கழை, வேய் ,காவு, பீடிகை, புழை, சார்ச்சை, படிப்புரை, கடவு, இல்லம். மாணி, காணி, பாணி, கைதை, அங்காடி, குழம்பு, பேடி, பொக்கம், காஞ்சி, (நாதாங்கி, "காஞ்சியும் குற்றியும்"), படி ஞாயிறு, நெருநெல், துருத்தி (ஆற்றிடைக் குறை), என்று தொடங்கிய எண்ணில் அடங்காப் பலப் பல சொற்கள், மலை நாட்டு மக்களால், எளிதில் உணரப் பட்டு பேச்சு வழக்கில் இடம்பெறுகின்றன. மாமூல், ரசீது முதலிய மொழிகள், மலை நாட்டினுள்ளில் நுழைந்த பாடில்லை; ஆனால், இவை, தமிழ் நாட்டில் சர்வ சாதாரணமானவை. உண்மையைப் புறக்கணித்துத், "தமிழ்—மலையாளக்-கூட்டுறவை"க், கண்டித்துச், செய்திகள் வெளியாகின்றன. தந்தை, தள்ளை, செப்பு, உள்ளி முதலிய சொற்கள், தமிழ்ச் சொற்கள் அல்ல என்ற கூற்றிற்கு (நாயர், 1078, இடபம்) சவால் விடுதல் எளிதே. இச் சொற்கள், தமிழ்ச் சொற்களே; ஆந்திரத் தோற்றுவாய் உடையன அல்ல. "தள்ளை" நன்னூலாருக்கு ஒரு திசைச் சொல். மேலும், "நம்பி" என்னும் தமிழ்ச் சொல், ஈற்றசையை ஏற்று, "நம்போ" என உருமாறிற்று. பெருகிக்கொண்டு வரும் வழியில், ஒரு மொழியுடன் கலக்கும், பிற நாட்டுச் சொற்கள், அவ்வ நாடுகள் உறையும் திசைக் கண்ணின்று வந்த, திசைச் சொற்கள்.

பொதுவாக, (1) பெரும் பான்மை இடச்சிறப்புப் பெயர்கள், (2) வீடு, அரமனை, கோயில், முதலியவற்றின், உறுப்புக்களையும், அவற்றை ஒட்டிய தொழில்களையும், தொழிலாளிகளையும், குறிப்பிடும் சொற்கள், (3) நாட்களின் பெயர்களையும், அவற்றின் பாகுபாடுகளையும், உணர்த்தும் சொற்கள் (4) தன்மை, முன்னிலை, படர்க்கை இடப்

பெயர்கள், (5) அரசியல் துறைச் சொற்கள், உள்ளிட்ட சொற்கள் எல்லாம், தனித்தமிழ்ச் சொற்கள், இல்லையேல், சற்று சிதைந்த தமிழ்ச் சொற்கள்

கீழ்க்காணும் சில உதாரணங்கள், முறையே, கூற்றை நிலை நாட்டும்.

(1) ஏற்றமான ஊர், திருவல்ல வாழ், கொடுங்கோளூர், பரணன் கானம், துறவு ஊர், ஏ ஊர், தட்டார் அம்பலம், பறைக் கோடு, வேழம்பர் கோணம், கண்ணன் மூலை, நந்தர் கோடு, கார்த்திகேயன் பள்ளி........

"வெள்ளாயணி," "வேணி ஆரணி" "ஹார்ணி"யின் சிதைவு வேணி—சடை, சடையாக அமைந்த மயிர் முடி (யையுடைய), ஆரணி—மகாகாளி, பார்வதி, சிவசக்தி, தேவி, தெய்வப் பெண். (ஆரணி= ஆறுதாரங்களில் ஒன்றாகிய அநாகதத்துக்குரிய 12 இதழ்களுள் ஓரிதழில் நிற்கும் அதி தேவதை.)

தமிழ் நாட்டுப் பண்டைய வழிபாடு, பேய் வழிபாடு என்று கொள்ளக் கிடக்கின்றது. பேய்களிற், பெரும் பேய், கொற்றவைப் பேய்; இவளே துர்க்கா தேவி. புறப்பொருள் வெண்பா மாலையில், கொற்றவை வழிபாடு சிறக்கக் கூறப்பட்டிருக்கின்றது. வெட்சிப் படலத்திலும், வஞ்சிப் படலத்திலும், "கொற்றவைநிலை" விளக்கம், முறையே, இவ்வாறு காணப்படும். "சிங்கத்தாற் சிறந்த அழகிய கொடியினையும், பசுங்கிளியினையும், பாயுங்கலையினையும், பேய் மிக்க படையினையும், உடைய துர்க்காதேவி ....", "தெய்வத்திற்கு ரித்தான எட்கசிவும், நெற்பொரியும், அவரை, துவரை, நிணமும், குடரும், உதிரமும், நிறைவித்துத் திரட்சி விரும்பக், கையிலே பாத்திரத்தை யிருத்திப் பூத கணங்களையுடைய துர்க்கா தேவி........................."

வேறு உதாரணமாக நூற்களும் கொற்றவை வழிபாட்டைக் குறித்துச் சொல்லுகின்றன. கொற்றவை, வெற்றிக்கு உரியவள்; வெற்றி ஐ; ஐயாள். இவளைக்குறித்துத்தான், பெருங்கதையில், உதையணன்-வாசவதத்தை திருமண நிகழ்ச்சியை, வள்ளுவன், முரசறைந்து தெரிவிப்பதற்கு, அரசனுடைய கொற்ற முரசத்தைப்பூசித்து "முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி" னன் என்று, கொங்கு வேளிர் பாடியிருக்கின்றார்; (பெரு, இலா, 2 கடிக்கம்பலை, வரி 30) "கொத்தி" என்ற பேய்த் தெய்வத்தை மலைநாட்டு மக்கள் இன்றும் வணங்குகின்றார்கள். கொற்றவை சிதைந்து 'கொத்தி' ஆயிற்றோ, அறுத்துக் கூற ஒண்ணாது. பார்வதி, உமை, சாலினி, கௌரி, சக்தி, காளி என்றெல்லாம் பல நாமம் இவளுக்குச் சூட்டி, இவளைக்குறித்து, ஆன்றோர் பொருத்தமில்லா, ஆணும் பெண்ணும் கெட்ட, கதைகளைப் பெருக்கி விட்டார். ஓரோர் கொள்கையைப் புகட்ட, காலத்துக்குக் காலம், பல மாதாக்களும், அம்மைமார்களும், நாச்சியார் மார்களும், கதைகளிலும் பாட்டுக்களிலும் "முளைத்துள்ளார்கள்,"

பல, மாதாக்களும், அம்மைமார்களும், நாச்சியார் மார்களும், கதைகளிலும் பாட்டுகளிலும், முளைத்துள்ளார்கள்.

சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், வேட்டுவ வரியின் கண், வேட்டுவர் கொற்றவையைப் புனைந்து கூறும் செய்யுட்கள், மிகச் சிறப்புவாய்ந்தன. கொற்றவையின் தலைமயிர்க்கற்றை (வேணி, சடை), ஒன்றாகச் சேர்த்து, உச்சி (சென்னி, முடி) யில் நீண்ட சடையாகச் சுற்றிக் கட்டப்பட்டு, மின்னுகின்ற அரவுத் தோலினால், பின்னப்பட்டிருக்கின்றது. இதற்கு மூலம்:—

"சிறுவெள் ளரவின் குருளை நாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்த னெடுமுடி கட்டி"

வேட்டுவவரி—வரிகள் 22—23.

இந்த அவசரம் தான், "வேணி ஆரணி" அவசரம். கொற்றவையின் பாதாதி கேசவர்ணனையில் முதல் படி. வேட்டுவருடைய காவல் சூழ்ந்த தோட்டப் பயிரை அழித்த பன்றியின், வளைந்த வெண்மை பொருந்திய, கொம்பு (தந்தம்) கொற்றவையின் கூந்தலில், (முடியில், சென்னியில்) அழகு பெறச் செருகப் பட்டிருக்கின்றது. அது வெண் திங்கள் (பிறை) என்ன, ஒளி வீசுகின்றது. இந்த அவசரத்தை "முடிப் பிறை" க் கோலம் எனலாம் இளங்கோ வடிகள் இந்தக் கோலத்தை,

'இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் திங்க ளென்னச் சாத்தி"
(ஷை—வரிகள், 24-26)

எனவும்,

"மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி"
(ஷை.-வரி-54)

எனவும், சிறப்பிக்கின்றார்.

ஐயையின் இவ்விருகோலம், தலையாகிய ஒரே உறுப்பை ஒட்டியதால், ஒன்று சேர்ந்த ஒரே கோலமாகக், கருதப்படுதல், ஒக்கும். அங்ஙனமாயின், இவ்விரு அவசரங்களுடைய கருப்பொருள், "முடி" யை முதலிற் கொண்டு, "முடிப்பிறை" என்னும் கூட்டுமொழி வாயிலாய், வெளிப்படும்.

இவ்வாறு பலவிதமான அவசரங்களும் அலங்காரங்களும், கொற்றவைக்கு முறையே பொருத்தப்படுகின்றன.

"கொற்றவை, இறைவனுக்குக் கிரியா சக்தியாகலின் நுதல்விழி, கறை மிடறு, புலியுரி, சூலம் முதலிய கோலங்களும், நஞ்சுண்டல் முதலிய செயல்களும், கூறப்பட்டன. மாயோனுக்குத் தங்கையாகலின், அவன் செய்கையாகிய மருதிடந்ததும், சகட முதைத்ததும், சார்த்தி உரைக்

கப்பட்டன; மாயோனும் இறைவற்கு ஓர் சக்தியாதல் உணரற்பாற்று".

(திரு.ந. மு. வேங்கடசாமி நாட்டார் சில. பக். 294)

வேணி ஆரணி (வெள்ளாயணி) தேவி-முடிப்பிறைப் பகவதி-யுடைய, பவனியும் நாளோலக்கமும், அந்த நாட்டு மக்களைப் பெரிதும் ஈர்க்கின்றன. கடைசி நாளில், தேவிக்கும் அரக்கனுக்கும், பரணில் சொற்போரும், நிலத்தில் விற்போரும், நிகழ்கின்றன. இறுதியில், அரக்கன் தலையைத் தேவி கொய்கின்றாள்.

"வேட்டுவவரி", வேடுவர் கொற்றவை புகழைப் பாடுவது. அப்பாட்டின் கருத்தை ஆராய்வுழி, முடிப் பிறைப் பகவதியின் நைமித்திக விழவில் நடைபெறும் பல அம்சங்களும், சிலப்பதிகாரத் திரையில் தீட்டப்பட்ட "ஓவியங்கள்" எனக், கொள்ளத் தருணம் வாய்க்கும்.

"வெண்மதி சூடிய சென்னி, நெற்றி நடுவேயுள்ள இமையா நாட்டம், பவளவாய், வெண்ணகை, நஞ்சுண்டு கறுத்தகண்டம், மேருவை வில்லாக வளைக்கக் கொண்ட வெஞ்சினப் பாம்பு நாண், நஞ்சொழுகும் துளைப் பல்லுள்ள பாம்புக் கச்சுடையமுலை, சூலமேந்திய வளைக்கரம், யானைத்தோலான உத்தரியம், சிங்கத்தோலாகிய மேகலை சிலம்பும் வீரக்கழலும் புலம்பும் சீறடி, இவற்றுடன், வலிய வெற்றிவாள் வாய்ந்த கொற்றவை, திரண்ட தோளுடைய மகிஷாசுரனைக் கொன்று அவன் தலைமேல் நின்ற தையல், பல வீர பக்தர் தொழும், அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, விஷ்ணுவின் தங்கை, ஐயை, ஜயமகள், திருமகள், அழகிய வளையல்கள் அணிந்த பாவை, போரில் பாயும் வீரக்கலையறிந்த பாவை, புலவர் ஆராயும் அறிவுக் கலைகளையுடைய பாவை, அருங்கலங்கள் சூடிய பாவை, தமது அன்பர் தொழவந்த குமரி மாதேவி, நமக்கு அருளினள்", என்று வேடர் காளியைப் போற்றிப் பாடிக் கூத்தாடினார்கள்".

வேட்டுவ வரியின் ஒரு சிறு துளி, "சிலம்புச் செல்வம்" தந்த ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் வாக்கில், (பக். 163-4) மேற் போந்ததில், தரப் பெற்றிருக்கின்றது.

"முருக"னைக் கொற்றவையின் மகன் என்பாருளர். ஐ—அப்பன். ஐயப்பன், மலை நாட்டின் சிறப்புத் தெய்வம், ஐயையின், வழித் தோன்றலே.

"கிளி யாறு" திருவனந்தபுர நகரத்தின் நடுவே பாய்கின்றது. கரமனை யாற்றின் கிளை நதி இது. தாமிர பருணி, கரமனை யாற்றிற்குப் பெயர். அதன் கிளைநதி, அயிராணி எனப்படும். பச்சையாறு, அயிராணிக்குத் தென்மொழிப் பெயர். கிளியின் நிறம் பச்சை. கிளியாற்றிற்கு "அம்பட்டன்—வாராவதி நியாயம்" பற்றி, "குடமுக்கு—குறும்பர் கோணம் நியாயம்" பற்றி அப் பெயர் வந்தது. என்றால், கிளியாறு ஒழுகும் பகுதிக்கு 'அயிராணி முட்டம்' என்ற பெயர் நிலைத்திருக்கின்றது; "கிளி முட்டம்" என்று அது திரியவில்லை. குழித்துறை யாறும் தாமிரபருணியே. அதன் கரையில்தான் "அயிராணி புரம்" இருக்கின்றது. அயிராணி, அரசாணி என்று வழங்குகிறது.

'பூவாறு' நெய்யாற்றின்கரைத் தாலுகாவில், நெய்யாற்றின்—கரையில் உள்ள ஒரு சிறு ஊர். சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம் புறஞ்சேரியிறுத்த காதை 174-வது வரியில், அடிகள் கூறும் "புனல்யா றன்றிது பூம்புனல் யாறென" என்றுள்ள அடிக்கு, அடியார்க்கு நல்லார், "இது புனல் ஆறல்ல, பூவாறு", எனப் பொருள் கொண்டது, பூவாற்றூர் வழி, ஒழுகும் 'அந்த' நெய்யாற்றின் வெளித் தோற்றத்திற்கு முற்றிலும் பொருத்தம் உள்ளது.

"செவ்வை கரை" (நேர் கரை, நீண்ட கரைக்கு அருகாமையிலுள்ள சிறு ஊர்) "சவறை" என்று மாறி வழக்கில் இருக்கின்றது.

குண்டும் கரையும், (குண்டற்றை), கோட்டாறும் கரையும், (கொட்டாரக்கரை?), புனலும் ஊரும், (புனலூர்), இடை மண்ணும் (எடமண்), தின் மலையும், (தென்மலை), அருங் காவும் (ஆரியங்காவு), கொல்லத்திற்கு, (தலை நகரத்திற்கு—கோன் வாழும் இடத்திற்கு), இயற்கை அரண்களாக அமைந்திருக்கும் வனப்பை வியந்து, மலை நாட்டிற்குள் செல்ல வழிவிடும் முதல் தாவளத்திற்கு, செம்மையான கோட்டை (செங்கோட்டை) எனப் பெயர் வைத்தனர் போலும், அக்காலத்துப் பெரியார்!

படைநாயர்க்குப் பாளையம் "படை நாயர் குளங்கரை" யாயின், "உவர்ச் சிறைக் களி", பண்டைப் போர் முழக்கம் தான்". "ஏறு திமங்கலம்", ஏறுதிப்பட்டத்தை ஒட்டியதே இறை நாயர் குலம், உறைந்த இடம், "இறணு குளமே"

"திருப்பணித் துறை" பெருந்துறைக் கோவிலி"ன் திருப்பணிக்குத் துணை புரிந்த துறைமுகமோ, துறையோ?

குமிளி என்பது, கோட்டயத்திலிருந்து பெரியகுளத்திற்குப் போகும் வழியில் மலை இடுக்கிலுள்ள ஒரு ஊர். குமிளி, "குமிழ்" என்ற சொல்லினின்று மூளைத்தது. குமிழ் மரப்பெயர். நீர்க் குமிழி, பெருங் குமிழி என்பன தேக்குமர இனங்கள். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், 386ஆம் சூத்திரத்தில், முகர ஈற்று மரப்பெயரைச் சிறப்பித்துக் கூறுமிடத்து, தொல்காப்பியனுர், குமிழ் என்ற மரப்பெயரைச் சுட்டுகிருர். "தேக்கடி", குமிளிக்குத் தெற்கிலுள்ளது. குன்றின் சரிவில் வளரும் தேக்கு 'பெருங்குமிழ்' என்று பேருடைத்து. Coombe என்பது இதற்கு ஆங்கிலப் பெயர். குமிழ், ஆங்கிலச் சொல்லிற்கு மூலமோ? இம்மாதிரிச் சிறப்புப் பெயர்கள் மலைநாட்டில் ஏராளம்.

(2) "ஓணம், கோலகத்துப் பண்டாலைக்கும் பாடத்துப் பண்டாரத்துக்கும் ஒன்றுபோலே சந்தோஷத்தைக்

கொடுக்கும். ஆணும் பெண்ணும், கோடி உடுத்து, நாலு கூட்டம் உப்பேறியும் எட்டுக்கூட்டம் உப்பிட்டதும் கூட்டி, சத்தி உண்டு, அடைக்காயுடன் வெற்றிலையும் தின்று, ஆடிப் பாடி, நேரம் கழிப்பர்.

ஆடகமாடம் அ(இ)ரவு(வி)புரத்தின் கண்ணுள்ள, வஞ்சி மூதூர் அத்தாணி மண்டபத்தில், அ(ர)ட்டன் செட்டி குளத்து வாழ்வாடாச்சி கோட்டம் சிறப்பு, திருவோணத்தன்று, சிறப்பாக நடந்தேறியது.

நேரம் புலர்ந்ததும், வேழம்பர் கோணத்து கழைக் கூத்தரும், கூத்தாட்டி குளத்து ஞாண்மேற் சாட்டக் காரரும், நாடகசாலை முகப்பில் பாளையம் உறைத்தார்கள். பறக்கோட்டுப் பறையரும், ஊருகட்டி அம்பலத்துப் புலையரும், குறவன்கோணத்துக் குறவரும், அம்பலத்தின் ஆல் தறையில், கும்பல் கும்பலாக காணிக்கைகளுடன் இருந்தும், கிடந்தும், உரையாடியும், நடந்தும், இரவின் வருகையை எதிர்பார்த்து நின்றனர்.

நேரம் வைகியதும், நாலம்பலத்தில், நங்கையார் முழவு கொட்டுடன் பாடகம் தொடங்கிற்று. திருமுற்றத்தில், வெளிச்செண்ணெய் வெட்டத்தில், ஆட்டக் கதையும், கூத்தம்பலத்தில் ஆட்ட விளக்கின் வெளிச்சத்தில் சாக்கையன் கூத்தும் முறைக்கு ஆரம்பமாயின.

செல்லம் வகை வஞ்சியில், காணிக்கைகள் வந்து விழுந்தவண்ணமா யிருந்தன.

கட்டியும் கவணியும் உடுத்து, உடைவாளும் கேடயமும் கையில் கொண்டு, கண்டமணியும் முத்து வளையும் தரித்து, கோமாக் கோட்டத்து ஐ-அப்பன் நாயர் பெருமானும், வெள்ளைப்பட்டும் மார்க்கச்சையும் கட்டி, தோடு(டை)யும் சரப்பளியும் அணிந்து, விளக்கும் தாலப் பொலியு(வு)ம் கையில் ஏந்தி, மாளிகைப்புறத்து உண்ணி நீலி நாய்த்தியார் அம்மையும், கருவூலப்புரை மாளிகை

யின் தாழ்வாரத்தினின்றும் பள்ளித் தேவாரக் கொட்டாரத்திற்கு, குறிப்பும் பணிக்கரும், வலிய தானக்காரனும், உண்ணித் தானக்காரனும், மன்றாடியும் ஏராடியும், கைமளும் புதுவாளும், பண்டாரத் திருவடியும் வெள்ளோடியும், திருமேனி காப்பாளரும் மெய்க் காப்பாளரும், கட்டியக்காரரும் நாட்டியக்காரரும், மேனவனும் மூத்தானும், புடை சூழ, பிடி மொந்தை, படிக்கம், கலசப்பானை, சங்கலி வட்டம், கத்தி, குந்தம், ஈட்டி, வாள், முதலியவை அகத்து வேலையாட்கள் தாங்கிவர, பவனி வந்தார்கள்.

சாத்தன் மங்கலத்து முடிப்பிறை வாச்சியும், பாணர் கோட்டுப் பாணனும், பரத்தையர் குன்றுப் பாணியும், சேர்ந்து நந்துணி வைத்துப் பாடி வாழ்த்தினார்கள். அம்பலத்து வாச்சி மாராயருடைய வாத்தியமும், பாணியும், செண்டையும், கொட்டும், முழங்கின.

ஆனைக் கொட்டில் களரியில், களமெழுத்தின் திருமுன்பு, வேலன் பறை தட்டி ஓதக், கணியான் குருதி கொடுத்தான்.

தேவிக்குள்ள சகல வழிபாடுகளும் பின்னர் நடைபெற்றன. விழவு காண வந்தவர், மலரும் பொரியும், அடையும் திரளையும், விழுக்குப் புரட்டியும் புழுக்குக் கட்டியும், தேவி சேடம் பெற்று வீடு திரும்பினர்"

இந்தக் கற்பனை—மலையாள-வாசகம் தமிழில் எழுதப் பட்டிருக்கின்றது. சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்கள். நல்ல தமிழ்ச் சொற்கள்.

(3) வாரத்தின் நாட்கள் எல்லாம் பொது. 'கிழமை" எனும் சொல் உரிமை என்னும் பொருள் உடைத்து. "ஆட்சி" என்பதும் அவ்வாறே; ஆள் பகுதி. "ஆட்சி"யை "ஆழ்ச்சை"என்று சிதைத்து வழங்குகின்றனர், மலையாள நாட்டார். "திங்கள்-கிழமை" "திங்கள் ஆழ்ச்ச" என்றாகும்.

மாதங்கள் வடமொழிப் பெயர்களாலே குறிக்கப் படுகின்றன.

காலை—மாலை—நடுப்பகல்—உச்சி—இரவு—நள்ளிரவு— முதலியன பொது.

(4) நான், ஞான்; நாங்கள், ஞெங்ஙள்; நீங்கள், நிங்ஙள்; இவை போன்ற சிதைவுகள் காணப்படும்,

(5) கேள்விக் கச்சேரி=வரி தண்டும் சாலை; கரம்= குடி இறை; மேலெழுத்து=அரசியல் கணக்கு மேலதி காரி, (Accountant General), "மேலெழுத்துக் கணக் குக் கிட்டிணன்"; சீட்டு=வரியோலை; தண்டல்=வரி தண்டும் பணியாளன்– (Tax-Collector); அஞ்சல்=கடிதத் தபால், (Letter-Post); இம்மாதிரிச் சொற்கள் மலை நாட்டின் கண்ணே எஞ்சி நிற்பன.

கேட்டெழுத்து, கண்டெழுத்து, பிறவகை மராமத்து முதலியன, தேய்ந்தும் மாய்ந்தும், உருமாறியும் சிதைவு உற்றும், காணப்பட்டாலும் தத்தம் பிறப்பைத் தாமே கூறுகின்றன.

தமிழ் மக்களிடத்து நிறத்திமிர் கொண்டோ, சமய வேறுபாடு பற்றியோ, இகல் எழுந்திலது. நில வேட் கையால் மாத்திரம், தமிழ் நாட்டு மன்னர், அடிக்கடி தம்மில் வேறுபட்டுப் பொருதனர். நாளடைவில், மாற்று னது மாண்பை மாய்க்கவோ, மாசு ஊர்ந்து மாண்பு மயங்கவோ, வேண்டிப், பலதுறையிலும், பல முறையி லும், ஒவ்வொருவனும், ஆங்காங்கே, பற்பல கலைக் கோயில்களையும் வாயில்களையும், புதுப் பாடிகளையும் பொது மாடங்களையும், ஓட்டியும் வெட்டியும், எழுப்பத் தலைப்பட்டான்.

மலை நாட்டிடை, பலதலங்களும் கீழ் நாட்டுப் பேர் களுடன் காணப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

மதுரை—ஆலவாய்; திருவாரூர்—ஆரூர்; திருப்பெருந்துறை—பெருந்துறை; சிதம்பரம்—மேலைச் சிதம்பரம்; திருக் கண்டியூர்—கண்டியூர்; திருவா வடுதுறை—ஆவாடுதுறை; காரியூர்—திருக்காரியூர்.

இத் தொகுதிகளில், முன்னிற்கும் பெயர்கள் கீழ் நாட்டுப் பதிகள்.

மதுரைக்கு, நான்மாடக்கூடல் என்ற பேர் உளது. நான்கு மாடங்கள் கூடும் இடம் மதுரையம்பதி.

கொச்சி இராஜ்ஜியத்தில் "இரிஞாலக் குடை" என்ற சிதைந்த பெயரையுடைய பதியின் இயற்பெயர் "இரு மாடக் கூடல்".

தில்லைப் பொன்னம்பலம் (சிதம்பரம்)-ஆடகமாடக் கூடல், நெருங்குங் கூடல் (மதுரை)—ஆடகமாடம் (திருவனந்தபுரம்)

நியூ யாரக், நியூ ஆர்லியன்ஸ், போன்ற மேனாட்டுப் பதிகளின் பிறப்பு, நட்பு, நன்றியறிதல், செய்ந் நன்றி முதலிய சீரிய உணர்வுகளில் ஊன்றிக்கிடத்தல் வெளிப் படை. அடை மொழி, மகள் உறவையும், சிறப்புப் பெயர்கள், தாய்ப் பதிகளையும், விளக்குகின்றன.

இரு மொழிக் கண்ணும், இலக்கண ஒற்றுமை மிகவும் அழுத்தமாகக் காணப்படும். வாசகம் உரு வெடுப்பதில், வேற்றுமை முடிவுகளும், எண், பால், விகற்பங்களும், ஒரேமாதிரியில் அமைகின்றன. நேர் கோடுகளால் அமையப் பெறும் கூர் முனைக் கோணங்களிலுள்ள வரிகள், வரி வடிவத்தில், எழுத்துக்களின் போக்கில், மெதுவான போக்கை யொட்டி, வளைந்து வட்டத் தன்மை அடைகின்றன. சொற்களின் கடின பாகங்கள், கனத்த ஒலிப் பாகங்கள், மென்மை அடைகின்றன. 'ஆகின்றது' என்னும் சொல், 'ஆகின்னது' என்று ஆகிப் பின்னர்,

முறையே 'ஆகின்னு' 'ஆனு', 'ஆணு', 'ஆன' என்று ஆகின்றது; 'கோவிந்தன்', 'கோவிந்நன்', 'கோந்தன்', 'கோந்நன்', என்றெல்லாம் மாறுபாடுகள் வழக்கில் இருக்கின்றன. இவை மலையாள மொழிக்கு இயல்பே.

மலையாளத்தில், வினைமுற்று விகுதிகள் முதலியன காணப்படுவதில்லை. உதாரணமாக, அவன், அவள், அது, அவர், அவர்கள், அவை; நான், நாம்; நீ, நீர், நீங்கள்; என்ற ஓரோர் இடத்திற்கும் 'வா' என்ற வினையின் இறந்த கால இடைநிலையைச் சேர்க்கும்போது, தனித்தனி முடிபுகள் தமிழில் வேண்டியிருப்பன போன்று, மலையாள மொழிக்கு வேண்டப்படா. 'வந்நு' என்ற ஒரே சொல்லே எல்லா இடத்திற்கும் பொதுவாகப் போதும். மலையாள 'வந்நு' வந்தான், வந்தாள், வந்தது, வந்தார், வந்தார்கள், வந்தன; வந்தேன், வந்தேம்; வந்தாய், வந்தீர், வந்தீர்கள் முதலியவற்றிற்குப் பொது. தமிழில், இது போன்று வினையெச்ச உருவத்தில், வினை முற்றுப் பொருள், காணப் படவில்லையே என்று ஐயுறலாம். ஆனால், ஐயப்பாடு வெளிப்படையில்தான். உண்மையில், 'வந்நு', 'வந்து' என்றதன் சிதைவு. இதற்குப் பொருள் 'வந்தேன்' என்பதே. 'வந்தான்' ஐப் போல, ஒரு வினை முற்று இது. நன்னூல், பதவியல், 145-ம் சூத்திரத்தில் காணப்படும் காலம் காட்டும் விகுதிகளில், "தவ்வோடு இறப்பும் எதிர் வும்" என்பது இதற்கு மேற்கோள். இந்த வடிவத்தில உதாரணங்கள் தமிழ் இலக்கணத்தில் இல்லாமலில்லை. ஆனால், அவை மிகை இல. இறையனாரகப்பொருளுரையில், 140-ம் 57-ம், பக்கங்களில் முறையே "குழவி அழுகின்று, "பருந்து விழுகின்று", என்பனவும், திருவாய்மொழி-திருமொழி, 10-ம் பக்கத்தில் 'அமரர் கோன் அர்ச்சிக்கின்று' என்பதும் எடுத்துக் காட்டுக்கள். பிறவும் உள.

மூவிடத்தும், முக்காலத்தும், இரு எண்ணிலும், வினையெச்சமாய், ஆனால் இறந்த காலத்தில், தன்மை ஒருமை

யில், வினை முற்றாய், நிற்கும் "வந்து" என்னும் சொல், மலையாளத்தில், ஐம்பால், மூவிடம், இரு எண்ணிற்கும், இறந்த காலத்தில் பொதுச் சொல்லாக நிலை பெறுகின்றது. இதற்குக் காரணம் மலை நாட்டு மக்களின் மெதுவான இயல்பே.

வரிசைக் கிரமத்தில், இறந்த காலத்தில், தன்மை ஒருமை (வடமொழி உத்தம புருடன்) யே, முதலிடம் பெறுகின்றது. இந்த ஒரே ஒரு விகற்பம், மலையாள மகனுக்கு, மூவிடங்கட்கும், ஐம்பால், இரு எண்கட்கும் கழிந்த காலத்திற்கு உற்ற பன்னிரண்டிற்கும்,

[இறந்தகாலம்:-

1	நான் வந்தேன் யான் வந்தேன்	நாம் வந்தோம் யாம் வந்தோம்	2
		நாங்கள் வந்தோம்.	3
4	நீ வந்தாய்	நீர் வந்தீர் நீவிர் வந்தீர்	5
		நீங்கள் வந்தீர்கள்	6
7	அவன் வந்தான்	10	அவர் வந்தார்
8	அவள் வந்தாள்	11	அவர்கள் வந்தார்கள்
9	அது வந்தது	12	அவை வந்தன.]

மேற்பட்ட விகற்பங்களுக்கு பொதுச் சொல்லாக வழங்குகின்றது. இறந்த காலத்தை யொட்டிய மட்டும் இக் குறிப்பு ஒப்பத் தக்கதே.

அவ்வாறே, நிகழ் காலத்தில், 'வரிந்நு' என்னும் ஒரே முடிவு, ஐம்பால்களுக்கும், மூவிடங்களுக்கும், இரு எண்களுக்கும், உற்ற பன்னிரண்டிற் கதிகம் விகற்பங்களுக்கும், பொதுச் சொல்லாக வழங்குகின்றது. நான் வருகிறேன், என்பதன் சிதைவு, நான் 'வரிந்நு'. வரிசைக் கிரமத்தில் நிகழ் கால வினை விகற்பங்களில்

இறந்த கால விகற்பங்களைப் பற்றிக் கூறியது போலவே, தன்மை ஒருமையே முதலிடம் பெறுகின்றது. மக்களின் பொதுவான போக்கே, இதற்கும் அடிப்படை. நிகழ் காலத்தைப் பொறுத்த அளவிலும், இந்த அநுமானம் ஏற்புடைத்தே.

வருங்காலத்திற்கு, மூவிடங்களிலும் ஐம்பால்களிலும், ஈரெண்களிலும், 'வரு'ம் என்னும் சொல் மலையாளத்தில் ஈடுபடுகின்றது.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே"—என்னும்

நன்னூல், 348-ம் சூத்திரத்தில், காணப்படும் "செய்யும்" என்னும் எச்சத்தா லாகும், 'செய்யும்" என்னும் முற்றுத் தான், 'வரும்' எனும் முற்று. அவன் வரும், அவன் வருவான்; அவள் வரும், அவள் வருவாள்; என வரும் ஒரு சார் கூட்டு விகற்பங்களிலும், 'வரும்' என்பதே, எளிமை யுடைத்து. அதிகம் வழக்கில் இருப்பதும் இதுவே. ஆகவே, 'வரும்' என்ற முடிவு, மலையாள மகனுக்கு உகந்த தாயிற்று. அதுவே, பல வொழிந்த படர்க்கை நாற் பாலிலும் செல்லு மென்பது தமிழ் இலக்கண விதி. கேரளபாணினீயம், பக்கம், 193, குறிப்பு 243-ல், காணப்படும் செய்திகள் இக் கூற்றை யொட்டி யனவே. எதிர்கால வழக்கிற்கும், சான்று உண்டென்பது இது வழி உணரப்படுகின்றது.

நிற்க; சில அருந் தமிழ் வழக்காறுகள் கீழே குறிக் கப்பட்டிருக்கின்றன:-

இறக்கு	=	இறப்பேன்
என்றி	=	என்பான்
காண்டி	=	காண்பாய்
செய்கு	=	செய்குவேன்
நின்று	=	நின்றது

நோகு	=	நோகுவேன்
புலம்பின்று	=	புலம்பியது
பேரிதாகின்று	=	பெரிதாக நின்றது
முன்னின்று	=	முன்னின்றது
ஆகின்று	=	ஆகின்றது
வாழி வாழியர் }	=	வாழ்வாயாக

வினையெச்சம் போல் காணப்படுவது தமிழ் வினை முற்றின் உருவமே என்பதும், எச்ச வடிவில் முற்றுப் பொருள் உளதென்பதும், உணர்ந்தால், மலையாள மொழியில், பால் விகற்பங்கள் பெருகுவதற்கு, இடை இல்லை என்பது போதரும்.

என்றால், பால் விகற்பங்கள் மலையாள மொழியில் இடம் பெறவில்லை என்று கூறுவது பொருந்தாது. துஞ்சத்து எழுத்தச்சனும், குஞ்சன் நம்பியாரும், பழங் கால மக்கள் ஆகவே அவர்கள் கையாண்டார்கள் என்று உரைத்தல், ஒவ்வாது. நவீன காலத்து மேதாவிகளாகிய திரு, குஞ்ஞுக்குட்டன் (குஞ்சுக்குட்டன்) தம்பிரான், திரு, கேரளவர்ம வலிய கோயில் தம்பிரான், திரு, இரவி வர்மா, தொடங்கிய கிரந்த கர்த்தாக்களும் தத்தம் நூற்களில் விகற்பங்களைப் பெரிதும் புகுத்தி யிருக்கின்றார்களே.

சில (உதாரணங்கள்) சேர்க்கப் பட்டிருக்கின்றன:-

ഉത്തമപുരുഷൻ

	ഗ്രന്ഥകർത്താവിന്റെപേര്	ഏകവചനം	ബഹുവചനം
1	കണ്ണശ്ശപ്പണിക്കർ	1. നഗര തുരഗാദികളും തരുവൻ (രാമായണംബാലകാണ്ഡം 174.) 2. അലകഴലേശരനെൻവപുകുന്തേൻ (ഭാരതംഉപക്രമപർവ്വം)	1. എല്ലാജാതിയുമിവളെ കൊൾവോം (രാമായണംബാലകാണ്ഡം-171) 2 താമസിയാതെപോവോമെൻറ് (ഭാരതംഉപക്രമപർവ്വം)
2	ചെറുശ്ശേരി നമ്പൂതിരി	1. മെല്ലവേവെച്ചുഞാൻചൊല്ലി-നിന്നീടിനേൻ. (കൃഷ്ണഗാഥാ വത്സസ്തേയം) 2. ശങ്കയും കൈവിട്ടു നൾകുവൻ ഞാൻ. (കൃഷ്ണഗാഥാ വത്സസ്തേയം)	
3	കുഞ്ചൻനമ്പ്യാർ	1. തൽപ്രസാദംകൊണ്ടു ജീവിച്ചീടിനേനേഷഞാൻപാർത്ഥ (ഭാരതംസഭാപ്രവേശംതുള്ളൽ)	1. ഞങ്ങൾ ദേവതാദരമൂലം മാന്യരെന്നുമനതാരിൽനിനച്ചോം. (കുമാരസാഭവം.)

		2. അതുഞാൻസാധിച്ചിങ്ങുവരുന്നോൻ. (കിരാതം)
4	തുഞ്ചത്തെഴുത്തച്ഛൻ	1. ഇന്നുമൽപ്രാണത്യാഗംചെയ്യുൻ ഞാനറിഞ്ഞാലും. (രാമായണം ആരണ്യകാണ്ഡം) 2. ഞാനുമെൻ പ്രാണങ്ങളെ ത്യജിച്ചീടുവൻ. (അദ്ധ്യാത്മരാമായണം)
5	കേരളവമ്മ വലിയകോയിത്തമ്പുരാൻ	1. അറിവേനധിമാഷമാം പ്രതാപം. (അഭിജ്ഞാനശാകുന്തളം)
6	കുഞ്ഞുക്കുട്ടൻതമ്പുരാൻ	1 ഹരിണഗണമിണാങ്ങുംകാട്ടുകേറിതപിപ്പേൻ. (വിക്രമോവ്വശീയം)
7	രവിവമ്മ	1. സാമോദംകുമ്പിട്ടുന്നേൻജനനി. (മൂലരാജസ്തവം)

മദ്ധ്യമപുരുഷൻ

	ഗ്രന്ഥകർത്താവിന്റെപേര്	ഏകവചനം	ബഹുവചനം
1.	കണ്ണശ്ശപ്പണിക്കർ	1. പോരായ്‌നിൻറമൃഗംകൊല്ലാതെ പോവതുനീകണ്ടായോ (കണ്ണശ്ശഭാരതം-14) 2. മായയിനാൽചെയ്യു് കരുണാകരനേ. (കണ്ണശ്ശഭാരതം)	
2.	ചെറുശ്ശേരി	1. മുന്നാംനിഎങ്ങളെക്കൊന്നു- നശിപ്പിച്ചായി. (കൃഷ്ണഗാഥാവത്സസ്തേയം) 2. ഒപ്പില്ലയാതെനിക്കൊപ്പിനെ ച്ചൊന്നായെന്നംപ്പൂവിൽ കോപിക്കുംജാനവപ്പോൾ. (കൃഷ്ണോല്പത്തി)	1. കുറകൾവേണകിൻനീരിൽ നിന്നെല്ലാരും പാരാതെവന്നിങ്ങു വാങ്ങിക്കൊൾവിൻ. (ഹേമന്തലീലാവർണനം) 2. ഒന്നേററം കല്പവിൻധന്യമാരേ. (ഹേമന്തലീലാവർണനം)
3.	ഉണ്ണായിവാര്യർ	അവനെചെന്നായോബാന്ധവനെ ചെന്നായോ (നളചരിതംആട്ടക്കഥ)	

4.	കുഞ്ചൻനമ്പ്യാർ		1. സുപ്രഭാതമചിരേണലഭിപ്പാൻ (പ്രദോഷമാഹാത്മ്യം)
5.	തുഞ്ചത്തെഴുത്തച്ഛൻ		1. വനജേക്ഷണയായനീയെസ്ത്യം- ചെയ്യിൻ. (അദ്ധ്യാത്മരാമായണം)

പ്രഥമപുരുഷൻ

	ഗ്രന്ഥകർത്താവിന്റെപേര്	ഏകവചനം	ബഹുവചനം
1.	കണ്ണശ്ശപ്പണിക്കർ	പുല്ലിംഗം 1. മഹാത്മാചിന്തിച്ചാനിതി (രാമായണം ബാലകാന്ധം-171) 2. മുനിവരനൊടുചൊന്നാൻ (രാമായണം ബാലകാണ്ഡം-173) സ്ത്രീലിംഗം 1. അരികപുകന്തറിച്ചാൾ (ബാലകാണ്ഡം 175)	1. ഓരോഭവനങ്ങൾപുകന്താൻ (രാമായണംബാലകാണ്ഡം 170) 2. ഉമ്പരുമാശ്ചരിയപ്പെട്ടാർ (ബാലകാണ്ഡം 186)

2	ചെറുശ്ശേരി	2. ആഞ്ചെജൻമരുവാനില്ലശപിച്ചാൾ (ഭാരതംഉപക്രമപവ്വം) നപുംസകംവളരെ അപൂവ്വമായി ഉപയോഗിച്ചിട്ടുണ്ട് പുല്ലിംഗം 1. മാമുനിമാരുമായിചെന്നുകണ്ടാൻ (രാസക്രീഡ) 2. തിങ്കളെനിമ്മിച്ചാൻപങ്കജം നിമ്മിച്ചാൻ (രുഗ്മണീസ്വയംവരം) സ്ത്രീലിംഗം 1. കൺമുനകൊണ്ടങ്ങഴിഞ്ഞു- നിന്നീടുനാൾ 2. ചാരത്തുചെന്നുചതിച്ചു പുക്കാൾ (പൂതനാമോക്ഷം)	1. പയ്യവേചേത്തുകളിച്ചുനിന്നാൻ (രാസക്രീഡ) 2. ഓടിത്തുടങ്ങിനാർപാടിത്തുടങ്ങിനാർ (രാസക്രീഡ) 3. അന്തകൻതന്നോടുചേന്നുചൊന്നാർ (കംസസൽഗതി)

3	തുഞ്ചത്തെഴുത്തച്ഛൻ	നപുംസകം 1. മംഗലമാകുന്നതല്ലോവേണ്ടു (പൂതനാമോക്ഷം) 2. കാട്ടുപ്പോത്തെല്ലാമേചാട്ടംതുടങ്ങീതു (ഇന്ദ്രദർപ്പഹരണം)	
		പുല്ലിംഗം 1. ഭക്ത്യാഭഗവൽസ്തുതിതുടങ്ങീടിനാൻ (രാമായണം കിഷ്കിന്ധാകാണ്ഡം) 2. മൊന്നൊഴിയാതെടുക്കിന്നാൻ- രാമനും. (രാമായണംയുദ്ധകാണ്ഡം	1. കേണുതുടങ്ങിനാർ (രാമായണംയുദ്ധകാണ്ഡം) 2. കുണ്ഠിതന്മാരായിപ്പുരിക്കമേവി നാർ. (രാമായണംഅയോദ്ധ്യാകാണ്ഡം)
		സ്ത്രീലിംഗം 1. കേഴുന്നനേരംജനനിയുംചൊല്ലിനാൾ (രാമയണംഅയോദ്ധ്യകാണ്ഡം) 2. ആകുലമാനസയായിചമഞ്ഞാം= ഇവൾ (ഉത്തരരാമായണം) നപുംസകംവള്ളരെഅപൂർവ്വമായ് ഉപയോഗിച്ചിട്ടുണ്ട്	

4	കുഞ്ചൻനമ്പ്യാർ	പുല്ലിംഗം 1. ഇത്ഥംമൊഴികൾവിളിച്ചു പറഞ്ഞാൻ (പ്രദോഷമാഹാത്മ്യം) 2. നീതിമാനായവൻക്രൂപ്പിനിന്നീടിനാൻ (പ്രദോഷമാഹാത്മ്യം) സ്ത്രീലിംഗം 1. ഗന്ധർവ്വകന്യകതത്രവന്നീടിനാൾ (പ്രദോഷമാഹാത്മ്യം) 2. ഭൂമിയിൽവീണുവണങ്ങിച്ചൊന്നാൾ (രുഗ്മിണീസ്വയംവരം) നപുംസകംവളരെഅപൂർവ്വമായി ഉപയോഗിച്ചിട്ടുണ്ട്	1 വിരവിനൊടുരജതഗിരിയുടെ മുകളേറിടിനാർ (കിരാതം) 1 വാശൈപകനാഥനെവാഴ്ത്തി നിന്നീടിനാർ (കിരാതം)
5.	രവിവർമ്മ	1. സാമോദംകുമ്പിട്ടുന്നോൻജനനി. (മൂലരാജസ്തവം)	
6	കേരളവർമ്മ വലിയകോയി തമ്പുരാൻ	പുല്ലിംഗം 1. സീമാതീതകദനജലധൌ കേരളം തള്ളിവിട്ടാൻ	

		(മയൂരസന്ദേശം പൂർവ്വഭാഗം) 2. ഇണ്ടൽക്കേറെറംവശഗനവിടെത്ത- ന്നെ മിണ്ടാതെനിന്നാൻ (do പൂർവ്വഭാഗം)
		സ്ത്രീലിംഗം 1. തറച്ചപോൽനിന്നുകൊണ്ടാൾ (ശാകുന്തളം)
7.	കുഞ്ഞുക്കുട്ടൻതമ്പുരാൻ	പുല്ലിംഗം 1. ആകെചൊന്നാൻകിനാവിൽ (ശുകസന്ദേശം) 2 കേരളമതിൽഭാഷപ്പെടുത്തീടിനാൻ (വിക്രമോർവ്വശീയം)
		സ്ത്രീലിംഗം 1. കൊണ്ടെൻകരളിൽകടന്നുകൂടി കൊണ്ടാൾ (വിക്രമോർവ്വശീയം)

1863-ல் கோட்டயம் ஸி. எம். எஸ். அச்சாலையி லிருந்து வெளிவந்த "மலையாள மொழியிலே மலையாளம்" என்ற நூலில், ரெவரண்டு, ஜியார்ஜ் மாத்தன் மொழி வது இவ்வாறு:-

மலையாள மொழிக்கு, பண்டைய இலக்கண நூல் இல்லை. டாக்டர் குண்டர்ட்டு தான் முதன் முதல் மலையாள வியாகர்ணத்தை உருவாக்கினார். மிஸ்டர் கார்த்து வெயிட் அதைச் செப்பஞ் செய்தார். ஸ்ரீ. அப்பு நெடுங் காடி இந்த இரு அந்நிய நாட்டுத் துரை மகனார்களை மலையாள மொழிக்கு ஆதி வியாகர்ண கர்த்தர்களென்று புகழ்கின்றார்.

இற்றை நாள் வரலாறு இது. கற்ற மலையாளிகள் கூட தம் மொழிக்கு இன்றளவும் இலக்கணம் ஏற்பட வில்லை என்று கூறு கிற்பர். இரண்டாயிரம் வருடங் களுக்கு, மேல், வழக்கிலிருப்பதாகக் கருதப் படும் ஒரு மொழிக்கு இலக்கணம் இல்லை என்று இயம்புவது, இயையாது. அண்டைத் தமிழ் நாட்டுத் தமிழ் மொழிக்கு' இருபதும் முப்பதும் நூற்றாண்டுகட்கு முன்னரே, இலக்கணம் அமைந்த துண்டே. தமிழ் மொழி இலக்ணம் வட மொழித் தாயிடம் பிறந்ததே அன்று; தன்னந் தனியாகத் தழைத்தது; தனிச் சிறப்பு வாய்ந்தது; இணை யற்ற பொருளிலக்கணத்திற்குத் தனியிடம் தந்தது.

தென் மொழிக்கும் வட மொழிக்கும் உள்ள வேறு பாடுகளை, இந்தப் பாடல் சுருங்கக் கூறி, விளங்க வைக்கின்றது.

"சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறின் திணைபால் உணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை பேர்க்கெழு வாயுருபும்
தோற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செந்தமிழ்க்கே"

பிரயோகவிவேகம்; திரு சுப்பிரமணிய திட்சிதர் அவர்கள்.

முக்கியமான மாறுபாடுகள் மாதவச் சிவஞான முனிவருடைய இந்த வாக்கில் அமைந்து கிடக்கின்றன.-

"தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி, முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா."

தமிழ் மொழிக்கு வாய்ந்துள்ள இலக்கணமே மலை நாட்டிற்கும் உரித்து. தொல்காப்பியம் - நன்னூல் - இலக்கண விளக்கம்- வீரசோழியம்- இன்னோரன்ன பலபட விரிந்த தமிழ் இலக்கணம் எதுவும் மலை நாட்டிற்கும் ஏற்புடைத்தே. மொழியின், அடிவானக் கல்லும், அடிவானத்திற்குரிய சேர்ப்பும், அடிவானத்திற்குற்ற இடமும், எல்லாம் தூய தமிழ் மயமே ஆயின், இலக்கணமும், தமிழ் இலக்கணமே என்று கூறுவதில், தடையொன்று மிலது. மலையாள மொழியை, முன்னர் மொழிந்தவாறு பொருள்படக், கொடு மலையாள மொழியாக்க முயல்வோன், வட மொழிக் கலப்பையும், வடமொழியின் ஈர்க்கும் இயல்பையும், எதிர்த்து, வட மொழி இலக்கண மாதிரிகளுக்குப் போகாமல், செந்தமிழையே உற்ற பற்றுக் கோடாகக் கொள்ளக் கடவன். மொழியிடத்துப் புதைந்து கிடக்கும் சொற்களையோ, மக்கள் மனத்திடை மறந்து கிடக்கும் சொற்களையோ, மொழி வழக்கற்று மறைந்து கிடக்கும் சொற்களையோ, துருவித் துருவி, தேடித் தேடி, எடுத்து எடுத்து, முன்னணிக்குக் கொண்டு வர வேண்டிய கடமை, கற்றவனைப் பொறுத்தது.

"படிஞாயிறு (പടിഞ്ഞാറ്), "இன்னலே" (ഇന്നലെ,) "நம்பூரி"(നമ്പൂരി),"மினைஞான்று"(മിനഞ്ഞാന്ന്), உள்ளிட்ட சில சொற்கள் வரலாற்றை அறியப் புகும் வழி, அரிய உண்மைகள் பல வெளிப்படும்.

"ஞாயிறு படி போலியாய் "படிஞாயிறு" என்று மாறி மேற்குத் திசையை உணர்த்துகின்றது.

"பகல் செல்வாயில்"—ஞாயிறு தோன்றும் குணக்கு": (சிலப், வஞ்சிக் காண்டம், வரந் தரு காதை, வரி 179).

இழக்கிற்கு உரிய தொடர் "தோன்று ஞாயிறு"

"நெருநல்" மொழி, நெடு வழியில் பல மரூஉக்களாக, திரிந்து திரிந்து, ஈற்றில், 'இன்னலே' என்ற உருவத்தில் மலையாள மொழியில் நிலைத்து நிற்கின்றது. சில முக்கிய தூவலங்கள் எடுத்தாளப்படுகின்றன :—

குறள், நிலையாமை: 336-ல்,

> "நெருந லுளவனொருவ னின்றில்லை யென்னும்
> பெருமை யுடைத்திவ் வுலகு"

என்பதில், அது இயற்கை உருவத்தில் அமைந்திருக்கின்றது.

"நெருநல்" என்பது, 'நெருநற்று" என்ற சொல் வடிவின், 1278-ம் குறளில்,

> "நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
> மெழுநாளே மேனி பசந்து"—

காணப்படுகின்றது.

"நெருநற்று"—"நேற்று" என்று ஆகின்றது. நேற்று என்பதன் பொருள் நிகழும் நாளிற்கு முன்னாள்.

"நெருநல்" இறையனாரகப் பொருளுரை, 50-ம் பக்கத்தில் "நெருநலை" என்று மாறுகின்றது.

"நென்னல் நோக்கி நின்று ரொருவர்
நென்னல் நோக்கி நின்று ரவர்"

என்ற சிலப், கானல் வரி; 45-ம் பாட்டு வரிகளில் "நெரு நல்", "நென்ன" லாக உருவெடுக்கின்றது.

ஆண்டாள் திருமொழியில், "நென்ன" லாகவே, நேற்று என்ற பொருளில், அது உறைகின்றது.

திருமங்கை யாழ்வார் காலத்தில், அது, "நென்னலை" என்று ஆகின்றது.

"மானே நீ நென்னலை நாளை வந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும்"

என்ற வரிகள், மாணிக்க வாசகப் பெருமான், திருவாசகம், திருவெம்பாவையில், காணப்படுகின்றது.

"நென்னலை", "நென்'னலே" என்று மாறி, முடிவில் "இன்னலே" என்று, இன்று காணப்படுகின்றது. நாளை எங்ஙனமாகுமோ இது, கண்டு தான் தெரிய வேண்டும்.

நம்பூரி–ஊர் நம்பியின் போலி. நம்பி = ஆணிற் சிறந்தோன்–பூரணன்–எல்லாம் நிறைந்தவன். அறிவிலும் செல்வத்திலும், ஊரில் பெரியவன், ஊர் நம்பி. நம்பி, பரம் பொருளுக்கும் பெயர்.

கொடு மலையாளமே செந்தமிழ் என்பது, தமிழ் கற்றுனுக்குக் களிப்பைக் கொடுப்பதுபோல், மலையாளம் கற்றுனுக்குக் களிப் பூட்டுவ தாகாது. சிலஉதாரணங்கள் வழி இது புலரும். தமிழ் நாட்டிற்கு மறந்தனவாகக் கருதப் படும், (உண்ணுன் = (தமிழ்) உண்பான்; வராறு = வருமாறு; வருவின் = வருமின்; வருமின் = வருமின்; வரு = வருக; வாரீர், கிட்டாமோ, ஆடாமோ; கொள்ளாமோ, கொள்ளாம்; என்ற இன்னோரன்ன) வழக்குக்கள் பல மலையாள மொழியில் இன்றும் காணக் கிடப்பன. பத்தாம்

நூற்றுண்டில் வாழ்ந்து, இறந்து பட்ட ஒரு தமிழ் மகன், இன்று உயிர் பெற்று வந்து, இப்போழ்தைய தென் ஆற்காடு திருச்சிருப்பள்ளி, மதுரை; திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து, பிறகு, மலையாளம் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பில் தேச சஞ்சாரம் நடத்துவானாயின், தனக்கு இசைந்த நாடு மலையாளம் தான் என்று, மொழிவான். அவன் காலத்துத் தமிழ் நாடு, இக்காலத்து மலையாள நாடே என்பான்.

மலையாளத்தில் சொற்கள் புணர்வது ஏற்ற விதிகளையொட்டி யல்ல. 'அல்புதம்'. 'உள்சவம்', 'பல்பனுபன்', 'பாலுகாரி', 'பொல்தாமரை', 'தாக்கோல்', 'வராது இரிக்குந்நு' என்பன சில உதாரணங்களாகும். சொற் கூட்டங்களில், சீரிய தமிழ்ச் சொற்களுடன் நாடோடிச் சொற்கள் இணைக்கப் பட்டுக் காணப் பெறும்.

தமிழ் இலக்கண மரபு அல்லது சொல் வழக்கு, (நன்னூல் சூத்திரம் 388,

> "எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
> செப்பின ரப்படிச் செப்புதன் மரபே",)

என்பது, மலையாளத்திற்கு மிகப் புதுமை "கேரள பாணிணீய" இலக்கண நூலுடையார், இதனை "சைலி,, என்று பெயரிட் டழைப்பர். தமிழ் இலக்கணம், பறவைக் குஞ்சு, குதிரைக் குட்டி, யானைக் கன்று, ஆட்டுப் புழுக்கை, என்று கூறும். விலங்குகளைக் குறிக்கும் காலை, அஃறிணை, மலையாளிக்கு இன்றியமையாத தன்று. மலையாளிக்கு பசு அவள், புலி அவன், ஆகும்.

இளங்கோ வடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம் காட்சிக் காதையில், சேரன் செங்குட்டுவனுக்கு மலைவாணர், காணிக்கையாகக் கொண்டு வந்த திறைப் பொருட்களை வகைப்படுத்து மிடத்து, அணங்கு, குருளை, களபம், பறழ் குட்டி, உளியம், மறி, கரு, பிள்ளை எனப்பலவகை,

இளமை மரபுப் பெயர்களை அமைத் திருப்பது நோக்கற் பாற்று:-

"ஆளியி னணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி உளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவின் பிள்ளையும்"

வரி-48-53.

பழைய மலையாள நாட்டு யாப்பில், பண்டைத் தமிழ் யாப்பு உறுப்புக்களே காணப்படுகின்றன. எழுத்தச்சன், கண்ணச்சப் பணிக்கர், ஐயம்பள்ளி ஆசான், குஞ்சன் நம்பியார் முதலான முந்திய ஆசிரியப் பெருமக்கள் தமிழ்ச் செய்யு ளியலை யொட்டியே பாடி யிருக்கிறார்கள். கண்ணச்சப் பணிக்கர் பாரதம், உபக்கிரம பருவம், 11-ஆம் செய்யுள் கீழ் வருமாறு இது ஓர் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்:-

"விடுமா றடிமை நினக்கமு தினுநான் விடைகொள்
வான் அசநந்தரு கென்றான்
உடனே கருடனு மதுகேட் டவனினி யுபயோ
கிக்க நிஷாதரை யென்றாள்
தடமோ றெய்திய வேடரை விநதா தநயனு
மடியந் தந்தன் னூடே
சுடுமா றுயிது கண்டம் அவன்றொரு குண்டல்
கணக்கே விப்ரனை யுண்ணான்"

செய்யுள் இயற்றுவதிலும், மெதுவான போக்கே, காணப் படுகின்றது. நீண்ட வளைவுகளே மலையாள மகனுக்குப் பொருத்த முடையன. குறுகிய, கூர்மையான வளைவுகளை அவன் விரும்பான். வடமொழிச் சொற்களும், கிரந்த அகர வரிசையும், வட மொழி மாதிரிகளும் புகவே, தமிழ்ச் செய்யுளிலக்கணத்திற்கு, அதில், இடம் குறைந்து வடமொழிச் செய்யுளியற்றலுக்கு இடம் வலுத்தது. தமிழ்

நாட்டுச் செய்யுளியல், பண்டைய இயல்பில், மலையாள நாட்டில் தான் நிலைத்து நிற்கின்றது. இசை இயலினும், இப் பொருத்தம் தலைசிறந்து விளங்குகின்றது. இன்னிசை, இந்தளம், புறநீர்மை, கானக் குறிஞ்சி முதலிய தமிழ்ப் பண்களுக்கும், இந்திசை, இந்தளம், புறநிரை, கானக் குறிஞ்சி முதலிய மலையாளப் பண்களுக்கும் இடையில், பேர் ஒற்றுமை மாத்திர மல்லாது, தோற்றுவாய் ஒற்று மையும், காணப்படும். திராவிட இசையும், திருவாங்கூர் சோபானம் இசையும், தம்மில் ஒன்று பட்டனவே. உதா ரணமாக, திருவாங்கூரில் இன்று காறும் பாடப் படும் இந்திசை, தென்பாங்கு என்று உலவும் ராகத்தை யொட் டியதே. தென்பாங்கு, மாறு உருக் கொண்ட திராவிட இசையே.

மலையாள மொழி தமிழ் மொழியே யாக, மலையாள இலக்கியம் தமிழ் இலக்கியமே என்பது, கூறுது தெளி வாகும்.

"செங்குட் டுவன்றன் செல்லல் நீங்க ...."
"அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமி லின்பத் தரசாள் வேந்த"......னுக எண்ணி
"குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ",

'தேனிலேஊறிய செந்தமிழின் சுவைதேரும் சிலப்பதிகார' மெனும், "மணியாரத்" தை 'உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்"டார்,

மலையாள நாட்டிடத்து, நாட்டுமொழியும், வீட்டுமொ ழியும் தனித் தமிழ் என்றே அறைகூவி வெளியுலகிற்கு உணர்த்துவதாய், "குட்டுவன்" என்னும் பெயர், 'குட்ட'னுகி, அங்கிலேயிலேயே குடி கொண்டு, இன்றும், பொதுவுடை மைப் பொருள் போன்று, பண்டைய மன்னர்களுக்கும்,

{ (உ-ம்) எழுவுறழ்திணி தோளிய தேர்க் குட்டுவன்,

சோழன் வேளுதி திருக்குட்டுவன், சேரமான் குட்டுவன் கோதை, இமைய வரம்பன் தம்பி பல்யானைச் செல் கெழு குட்டுவன், கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய குட்டுவன், மறத்துறை முடித்த குட்டுவன், கடல் பிறக்கோட்டிய குட்டுவன், சேரன் செங்குட்டுவன் } இன்றைய மக்கட்கும், { (உ-ம்) குஞ்சுக் குட்டன், அப்புக் குட்டன், நாணுக்குட்டன், குட்டன் } ,தனிச்சிறப்புப் பெயராய் வழக்கில் இருந்து வருகின்றது. குட்டன் திரிந்ததே குட்டி. (உ-ம்) வேலுக்குட்டி-மாதுக்குட்டி-பப்புக்குட்டி.

கடைச் சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவரும், சேரர் அவைக் களத்து, சேரர் குல நண்பராக உறைந்தவரும் ஆகிய, வளங்கெழு கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர், சிலப்பதிகாரத்தின் "மேல் உரைப்பொருள் முற்றிய", சிலப்பதிகாரத்தின் துணை நூலும் தொடர் நூலும் ஆன, மணிமேகலையை, மலை நாட்டு நடு விடமான திருவஞ்சைக் களத்து, "இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப" இயற்றி யருளினுர்.

பதிற்றுப்பத்து, "கேரள"மென இந்நாட் பெயர் கொண்ட பண்டைத் தமிழ் நாட்டு, மன்னர்களின் "ஷா நாமா" வே. இந் நூல், மலையாள நாட்டின் கண்ணே கேட்ப", உயிர் பெற்றது.

"ஓங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் மருமா
னைய னரிதன்........",

'புறப் பொருள் வெண்பா மாலை" யெனப் பெயர் நிறீஇ' புறப் பொருளைப் பண்புற, மொழிந்தனன். ஐயனரிதன், சேரமான் கள் விழித் தோன்றல். சேரநாட்டில் வதிந்தவன்,

பொன் வண்ணத் தந்தாதி, ஆதியுலா, மும்மணிக் கோவை தொடங்கிய நூற்களை, நறுந் தமிழில், மணம் கமழ, மனம் கரையப், பாடியவர், சேரமான் பெருமாள் நாயனாரென்ற சேர நாட்டு மன்னன். அறுபத்து மூவருள் ஒருவரும், சுந்தரமூர்த்தி நாயனாரைத் தம் நகரில் வரவேற்றவரும் ஆவர், இவர். திருவஞ்சைக்களத்தில், இவ்விரு நாயன்மார்களுக்கும் படிவம் சமைத்து மக்கள் வழிபடுகின்றனர். சேரமான் என்ற பட்டத்துடன், நால் வராவது நாடாண்டார், என்று, சில அறிவாளிகள் எண்ணுவதுண்டு. தகுந்த முறையிற் பரிசீலனை செய்து, உண்மை கண்டு, சேரமான் பெருமாளுயனார் செங்கோலோச்சிய பண்டை நிலப் பகுதிக்கு அரண் வகுத்து, அதற்குச் "சேரமான் பறம்பு" எனப் பெயர் சூட்டி, கொச்சி அரசாங்கத்தார், அதனைப் பாதுகாத்து வருகின்றனர். சேரமான் பறம்பு, திருவஞ்சைக் களத்திற்கும் கொடுங்கோளூருக்கும், இடைப்பட்டது.

கருவூருக்கும், "பெரிப்ளஸ் மாரிஸ் எரித்ரேசி" சுட்டும் "அற்காரிதி" என்னும் உறையூருக்கும், இடையிட்ட வழி, நாற்பத்தைந்து மையிலுக்குக் குறைந் திருக்கவே, பகை மிக்க சேர சோழ நாடுகளுக்கு, இவை, முறையே தலை யிடங்களாக, (ராயல் ஏஷியாடிக் ஸொஸைட்டி 1913-ஜனவரி மாதத்து சஞ்சிகையின் கூற்றை யொட்டி,) அமைந் திருக்க மாட்டா. முசிறி, தொண்டி, மாந்தை முதலிய இடங்களை யொத்து, வஞ்சிக் கருவூரும், கடல் வாரத்திலேயே, நிலைத்திருந்ததாகக் கொள்ளுதல், தலையாகும்.

கொடுங்கோளூர், பாண்டிய குலத்திற்குக் கோள் (தீங்கு) விளைத்த கண்ணகி, கொடுங்காளி, "உறை-ஊர்" எனினும், வியாபாரத்திற்குக், கடல் வழி வந்த சோனகர், தென் மேற்குப் பருவக் காற்றின் கொடுமை தணியும் வரை தங்கிக் கிடந்த இடம் எனினும், "உலாந்தா" நாட்டு

"வரி-ஏடு" களில் காணப்படுவது போன்று, காற்றின் கொடுமை பற்றி, "கொடுங்காலூர்" எனப் பெயர் தாங்கியது எனினும், ஒக்கும்.

கொடுங்கோளூர்-முசிறி; நெல்சிண்டா—நீண்டகரை; ஆபிர்-பூவாறு; அள்ளியூர்-வள்ளியூர்; டாலமியின் பார்காரியும், மற்றவரின் பேகரியும்,-புறக்காடு; பலிடா—வர்க்கலை: இம் முடிவுகளை உற்ற சர்ச்சைகளின் விளைவாய், அறிவாளிகள் நம்புகிறார்கள்.

வஞ்சி நகரம் மலைக்கு மேற்கில் இருந்ததாகவே, பண்டை நூற்கள் செப்புகின்றன. அனபாய குலோத்துங்கன் காலத்தில், சேர நாட்டு வஞ்சித் தலை நகர்க்கு "மகோதை" என்ற நாமம் உண்டென்பது, பெரிய புராணச் சான்று.

முசிறித் துறைக்கு அண்டையில், கடலோடு கலந்த ஆற்றின் கரைப் பட்டினமாகிய, "டாலமி"யின் "கருராரீஜியோ செரிபோத்ரி"யே, வஞ்சி யாகும் என்று, "இந்தியன் ஆண்டிக்குவேரி", தொகுதி XVIII, பக்கம் 259-ல், காணக்கிடக்கின்றது.

வஞ்சிக்கு மறுபெயர் கரூர். இது திவாகரக் கூற்று. கற்றோர் குழம்புவது இக் கூற்றின் காரணங் கொண்டே.

திருவஞ்சைக்களத்தை "மேலைச் சிதம்பரம்" என்று கூறுவதுண்டு. மலை நாட்டுக் கோவில்களில், சாதாரணமாகக் காணக்கிடையாத, சிதம்பரம்-நடராஜர் திரு வடிவம், இங்குக் காணப்படும். இக் கோவிலில் மாத்திரமே, பள்ளி யறையும், பள்ளி யறை நாளோலக்கமும், உள. இம் மருங்கில், தனித் தமிழ்ச் சுவை, இன்றும் நின்று நிலவுகின்றது, கண்டோர் அறிவர்.

ஸ்ரீ வைஷ்ணவ "அசோக-அரசத் துறவி", குலசேகரப் பெருமாள், "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்-பெருமாள்

திருமொழியை," தமிழிலேயே தந்துள்ளார். வடமொழியில் "முகுந்தமாலை" என்ற ஒரு நூலும் இவரால் இயற்றப்பட்டுள்ளது. குலசேகரப்பெருமாள் திருவஞ்சைக்களத்தை ஆண்ட சேர மன்னரே; அன்றி, பாண்டி நாட்டினின்று வந்த, "ஒரு" பெருமா என்று. இவர் ஆணைக் குட்பட்டுக் கிடந்தன, சோழ நாடும் பாண்டிய நாடும், என்பது, பெறும். மணக்கால் நம்பி, இவரை, "கொல்லி காவலன், வில்லவர் கோன், சேரன் குலசேகரன், முடி வேந்தர் சிகாமணியே" யென்று சிறப்பித்துக் (4000 பெருமாள் திருமொழி பக். 101-ல்), கூறியிருத்தலினின்றும், இவர் "கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக் கோன், குலசேகரன்", என்றும், "கொங்கர் கோன், குலசேகரன்" என்றும், முறையே (ஷை-பக்: 90. 10-ம் பாட்டு 3-வது வரியிலும், ஷை பக்: 91. 5-ம் பாட்டு 3-வது வரியிலும்) கூறப் பட்டிருத்தலினின்றும், குலசேகரப்பெருமாள், சேரர் கோன் மாத்திர மன்று, அவருடைய ஆணை, சோழ நாடு பாண்டி நாடு மேற்றும், செல்லா நின்றது, எனவும் போதரும்.

சிலப்பதிகாரம் குன்றக் குரவையில் சேரன் செங்குட்டுவன் "கொல்லி யாண்டவர் குடவர் கோ" வென்று கூறப்படுகின்றான். குலசேகரப் பெருமாளோ கொல்லி காவலன். ஆகவே, இவ் விரு மன்னர்களும், ஒரே தமிழ் மரபினர் என்பதும், அவர் ஆண்ட நாடு தமிழ் நாடு என்பதும், புலனாகின்றன.

முத்தொள்ளாயிரச் செய்யுள் 34-ல், "கொல்லியர் கோன் சேரன் கோதையென் பான்" என்னும் இணைப்புத் தளை காணப்படுகின்றது.

குலசேகரப் பெருமாள், பன்னிரு ஆழ்வார்களிலொருவர்; மன்னர் கோவிலில், மண்ணக வாழ்வினை நீத்தார். இவர் பாக்களில், அன்பு வெள்ளம் கரை புரண்டோடும்; பக்திப் பெருக்கு ததும்பி நிற்கும்.

புறநானூற்றிலும் அகநானூற்றிலும் பற்பல செய்யுட்கள், தமிழை ஆதரித்த மலைநாட்டு மன்னர்களின் பெயர்களையும், அவரவர் ஆண்ட பெரும் பதிகளின் பெயர்களையும், அவரவர் வள்ளன்மையையும் விளங்க வைக்கின்றன. பாடியோர், பாடப்பட்டோர் நிரலில் வேறு கூறு,ஒரு சிறிதும், காணப் படமாட்டாது.

புறநானூற்றில் முப்பத்தைந்து செய்யுட்கள் வரையும் சேர மன்னர்களை முன்னிறுத்திப் பாடியனவாகும்.

இடைப் பள்ளி சிற்றரசர் "சேந்தனார்" ஒரு தமிழ் ஆசிரியர்.

அறுபத்து மூவரில் ஒருவரான விறன் மிண்ட நாயனார் மலை நாட்டுச் "சேரர் திரு நாட்டூர்களின் முன் சிறந்த மூதூர் செங்குன்றூர்," (சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம்—விறன் மிண்ட நாயனார் புராணம்-பா.-2-வரி.-4) வாசி.

மலை நாட்டில் பாடல் பெற்ற பதிகள் பல வுள. மாணிக்க வாசகரும், சுந்தரரும், திருவாசகத்திலும், தேவாரத்திலும், மலை நாட்டிலுள்ள பதின் மூன்றிற் கதிகம் தலங்களை, மாண்பு பெறச் செய்திருக்கின்றனர். வைக்கமே, திருப்பெருந்துறை; பெருந்திருக் கோவிலப்பனே, திருப்பெருந்துறைக் கோவிலப்பன். ஆழ்வார்களிற் பலரும் மலை நாட்டுப் பதிகளுக்கு வந்து"திருவாய் மொழி"கள் இயற்றித் தமிழ்க்குத் தொண்டாற்றி யிருக்கின்றனர். நம்மாழ்வாரின் தாயாருடைய பிறப்பிடம், "திருவெண்பதிசாரம்". இது, தென் திருவாங்கூரிலுள்ளது. வந்த நாடு வேறென்றோ, வழங்கு மொழி அயல் மொழி யென்றோ, ஆழ்வார்-நாயன்மார், ஒரு சிறிதும் கருதிலர்.

சேரநாட்டுப் பழங்காலப் புலவர்களைப் போல், பிற்காலப் புலவர்களும், தமிழிலே தான் நூற்கள் இயற்றி

யுள்ளார்கள். கண்ணச்சப்பணிக்கர், இராமாயணத்தையும், மகாபாரதத்தையும், தமிழில்தான் பாடியுள்ளார். திருவனந்தபுரத்திற்கு அருகாமையிலுள்ள ஆவாடுதுறையின் வாழ்ந்து வந்த ஐயம் பள்ளி ஆசான், இராமாயணத்தைத் தமிழிலேயே பாடி வைத்திருக்கிறார். மிகப் பழைய நூலாகக் கருதப்படும் "இராமானுசரிதம்" ஒரு தமிழ் நூல்தான். "உண்ணுநீலி சந்தேசமும்" அங்ஙனமே. செறுசேரி நம்பூரியும், துஞ்சத்து ராமானுஜன் எழுத்தச்சனும், தமிழ்ச் செய்யுளியலை யொட்டியே, நூற்கள் இயற்றி யுள்ளார்கள். வடமொழிக் கலப்பால் மலையாள மொழியைப் பாழாக்கின கௌரவம், எழுத்தச்சனையே சாரும். மலையாள நூற்களாக எண்ணப்படும் இந்நூற்கள் எல்லாம், ஏற இறங்கத் தமிழ் நூற்களே. நூல் தந்தோர்களும் தமிழர்களே. மணிமேகலை, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, முதலிய அருமை பெருமை வாய்ந்த நூற்களிடத்துள்ள உரிமையை, மலையாள மக்கள் இழந்து விட்டார்கள். அவ்வுரிமை முழுமையும் தமிழ் மக்கட்குச் சொந்தமாகி நிலைத்து விட்டது. இச் செய்தி வருந்தத் தக்கதன்றி, பெருமிதம் தருவதன்று. நிற்க, பணிக்கர், எழுத்தச்சன், தொடங்கிய நூலாசிரிய மேன் மக்களிடத்துள்ள பாத்தியதை முழுதும், மலையாளிகளுடையது ஆகாது. தமிழனும் 'அவகாசியே'. இப் பெரியார்களுடைய உரிமைப்பாட்டை, தமிழனும் மலையாளியும் சேர்ந்து சரியான கூட்டுறவு முறையில், பகிர்ந்து கொள்வார்களாக.

தமிழர், மலையாள நாட்டைக் கைக்கொண்டு, தமிழை அங்குப் புகுத்தி, மலையாள மொழிக்கு இன்னல் விளைக்கும் வழியில், தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தார் என்னும் கொள்கைக்குத் தக்க சான்றுகள் இல. சிலப்பதிகார காலத்திலோ, அதற்கு வெகு காலத்திற்குப் பின்னாலோ, பிறந்ததாகக் கருதப்படும் ஒரு மலையாள நூலும் இலது. இளங்கோ, குலசேகரர், சேரமான் பெ பெருமாள், சேரன் செங்குட்டுவன், சேரமான் கணைக்காலிரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, உள்ளிட்ட பழைய மன்னர்கள் தம் தாய்

மொழியை மறந்து, அந்நிய மொழியாகிய தமிழ் மொழியைக் கையாண்டு, அதை வளர்த்தார்கள் எனின், அதனை யாருமே ஒப்பார். அஃதபோல், இராமானுசரிதம், உண்ணுநீலி சந்தேசம் தந்தாரும், கண்ணச்சப் பணிக்கரும், எழுத்தச்சனும், ஐயம்பள்ளி ஆசானும், பிற பிற்காலத்தவரும், தம் தாய்மொழியை மறந்து, வேற்று மொழியாகிய தமிழில் தேர்வுற்று, அம் மொழியில் நூற்கள் கண்டார் என்பதும், நேருரை யாகாது. மலையாள மொழிக்கு, ஏறக்குறைய ஆறு ஏழு நூற்றாண்டுகளுக்கு அதிகம் முன் வாழ்வு ஏற்பட்டதில்லை என்று, அம் மொழி வல்லுநர்களே கருதுகின்றார்கள். தமிழ்மொழியே யாகிய அம்மொழி மலையாள மொழி யாகுமோ என்பது "இலக்கிய பெடரல் கோர்ட்டு அதிகாரிகள்" தீர்மானிக்க வேண்டிய விடயம். ....அது வரையும், "தமிழ்" மொழி தான் அம் மொழி ஆகும். "மலையாளம்" அதற்கு மறு பெயர் ஆகும்.

'கண்ணச்ச இராமாயணம்' மலையாளத்தில் முதன் மொழி பெயர்ப்பு ஆகும்; கி. பி. 1350-ஆம் ஆண்டிலிடை வாழ்ந்தவர் இந் நூலாசிரியர். "செறுசேரி" நம்பூரியின் "கிருஷ்ண காதா" அடுத்த மொழிபெயர்ப்பு நூல்; கி. பி, 1550-ஆம் ஆண்டை ஒட்டி இந்நூல் எழுந்தது. கி. பி. 1650-ஆம் ஆண்டிலிடை வாழ்ந்தவர் எழுத்தச்சன், இதற்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்பு வாழ்ந்தவர் குஞ்ஞன் நம்பியார். எண்ணத்தில், நம்பியாரின் நூற்கள் மிகை. எழுத்தச்சனுடைய நூற்கள், ஆழத்திலும் உட்கருத்திலும் சிறந்தன.

பணிக்கர், ஆசான் முதல்வர் இயற்றிய நூற்களில், தமிழ்ச் சொற்களும் சொற்கூட்டங்களும், தமிழ் மரபுகளும் சொல் வழக்குக்களும், மலிந்து கிடக்கின்றன. 53-57ம் பக்கங்களில் சில மேற்கோள்கள் காணப்படும். பால் முடிபுகளும் வினைமுற்றுக்களும், இக்காலத்து நூற்களில் அரியன வாயினும், முன்னுள் நூற்களில், ஏராளமாக உள,

என்னும் உண்மை, 76-83 ம் பக்கங்களில் குறிக்கப் பெற்றிருக்கும் சில சான்றுகள் வழி, நிறுவப்படும். திரு. குஞ்ஞுக்குட்டன் தம்பிரான் அவர்கள், திரு. எ. ஆர். ராஜ ராஜ வர்மா கோயில் தம்பிரான் அவர்கள், போன்ற இற்றையப் புலவர்களுடைய மலையாள நடை, உண்மையில், தூய தமிழ்த் தொடர்களும், தனித் தமிழ் மரபுகளும், விரவி வந்த தமிழ் நடைதான்.

தற்கால மலையாள நடை "மணிப்பிரவாளம்" எனப்படுவது. வட மொழியும் தென் மொழியும் போன்ற இரு மொழிச் சொற்கள் விரவி வரும் நடைக்கு, மணிப்பிரவாளம் என்ற பேர் அமைந்துளது. ஆரிய மொழியாகிய "மணி," எளிய மொழியாகிய "பிரவாளத்தை" (மலையாளத்தை, மலையாளத்திலுள்ள தமிழ் உறுப்பை) த் தலை எடுக்க ஒட்டாது, அமலில் வைத்துத், தானே தலைநிமிர்ந்து இயங்குவது, இந்நடைக்கு இயல்பு. வீறு பிடித்த வட மொழிச் சொற்களே நிலை பெற்று மிருந்து, மருந்திற்கு ஒன்றோ இரண்டோ மலையாளச் சொற்களோ, ஈறுகளோ மாத்திரம் ஒதுங்கிப் பதுங்கி நிற்க, உருவெடுக்கும் நடை, மக்கட்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது. தற்காலப் பிறப்பும், எடுப்பார்-எடுத்த-பிள்ளை-வளர்ப்பும், மலையாளத்திற்குத் தனிச் சிறப்புக்களாகி விட்டன.

கற் பொறிப்புக்களும் தாமிர சாசனங்களும் ஏராளமாகக் காணப்படுகின்ற மலையாள நடு நாட்டில், அதாவது, தமிழ், கன்னடம், துளு நாடுகளின் வாடை ஒரு சிறிதும் எட்ட முடியாத தூரத்து உட் பிரதேசங்களில், சர்ச்சை செய்யப்பட்டுள்ள தஸ்தாவேஜுகள் எல்லாம், தமிழிலேயே கொத்தப்பட்டிருக்கின்றன.

மலைநாட்டு மன்னர்கள் பேரால் விளங்கும் கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், எல்லாம், தமிழிலேயே காணக்கிடக்கின்றன. உதாரணமாக:- கோட்டையம் சிரியன் கிறித்தவர் உடைமையில் இருந்துவரும், வீரரா

கவனுடையவும், ஸ்தாணு ரவிவர்மனுடையவும் பேரா லுள்ள செப்புப் பட்டையங்கள், (Epigraphia Indica Volume IV, page 292), கொச்சி யூதர்களிடம் உள்ள பாஸ்கர ரவிவர்மனால் நல்கப்பட்ட "கொச்சி செப்பு-ஏடு கள்", (Epigraphia Indica, Volume III page 66: Indian Antiquary Vol I, page 229; Vol III, pages 310& 333; Vol VI, Page 366; South Indian Palaeo graphy, page 140), அதே அரசனால் வழங்கப் பட்டிருக்கும் திரு நெல்லிப் பட்டையம், (Indian Antiquary, Vol xx, Page 290), ஸ்ரீ வல்லவன் கோதையின் மாம்பள்ளிப் பட்டையம், (Indian Antiquary, Page 234), இரவி கேரள வர்மனுடையவும்,, (Travancore Archaelogical Series, No xvi, Page 289 Ko. 393), மற்றொரு அரசனுடை யவும், (ஷை-ஷை-Page 292. A. D 946), கண்டியூர் கோ யில் கல் வெட்டுக்கள், வற்கலைக்கு அணித்தாயுள்ள நாவாய்க்குளம் கோயிலில் உள்ள வீர மார்த்தாண்டனு டைய கல் வெட்டு, (ஷை-ஷை-Page 299) போன்ற சாச னங்கள் அனைத்தும், தமிழிலே வரையப் பெற்றிருக்கின் றன.

மாத்திரமன்று. நாட்டிடைப் பொது மக்கள் பேரில் கல்லிற் செதுக்கப்பட்டிருக்கும் சாசனங்கள் போலும் தமிழிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சேர்ந்த மங்க லம், திருச்சிவ பேரூர், உளியன்னூர், திருக்காரியூர், திரு வல்லம், கவியூர், முதலிய கோயில் களிற் பொறிக்கப் பட்டிருக்கும் கல்வெட்டுக்களும், திருவாங்கூர் அரசாங் கத்துப் புதைபொருள் புலர்த்துத் தொகுதி XIII, பக்கம் 199-ல் குறிக்கப்பட்டிருக்கும் செப்புப்பட்டையங்களும் மற்றும், சில எடுத்துக்காட்டுக்களாகும்.

இவ்வகை மொழி-சரித்திரக் களஞ்சியங்களை அறி வுடை உலகத்திற்கு உதவிய அறிஞர்கள், ஆங்காங்கே

தந்திருக்கும் விளக்கக் குறிப்புக்களுக்கிடையே, தமிழ்ச் சொற்கள், காலத்திற்குக் காலம், சிறுகச் சிறுக, மாறுபாடு அடைந்து வந்திருக்கும் வரலாற்றையும், சுட்டியுள்ளார்கள். உற்று நோக்குழி, அவ் வரலாற்றுவழி தனித் தமிழ்ச் சொற்கள், எவ்வாறு திரிந்தும், கெட்டும், ஈற்றில், வெச்சு, முருங்ஙையூர், பிச்சன், பன்னி, போன்ற மலையாளச் சொற்களாக நிலைத்திருக்கின்றன வென்பது போதரும். "வீர சோழியம்" நூலுடையார், கிரியாபதப் படலம் 12-ம் செய்யுளின் விரிவுரையில், இவ்வாறு காணப்படும் சிதைவுகளையும் மரூஉக்களையும் தமிழ் இலக்கண வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளார்.

மிகுந்த விவாதத்திற்கு இடம் தந்துள்ள கோட்டையம் கிறித்தவ பட்டையத்தையும், கொச்சி யூதர்களுடைய பட்டையத்தையும் பற்றிச் சில அறிஞர்களுடைய அப்பிராயங்கள், "தமிழ்ச் சொல்-விகாரம்-மலையாளச் சொல்" அடிப்படையில், தரப்படுகின்றன.

கோட்டையம் பட்டையத்தில் உள்ள,

"மகோதயர்பட்டணத்து இரவிக் கொற்றனுய சேரமான் லோக பெரும் செட்டிக்கு மணிக்கிராமப்பட்டம் கொடுத்தோம்"

என்ற வாசகத்திற்கு டாக்டர் குண்டர்ட்டின் ஆங்கிலமொழி பெயர்ப்பு இது.

"We have given to Eravi Corran of Mahadevarpatanam (henceforward to be called Grand merchant of Cheraman World) the Lovdship of Manigramom".

திருவாங்கூர் சரித்திர நூலாசிரியர், திரு. சங்குண்ணி மேனவன் அவர்கள், மணியை, "மாணிக்கம்" எனப் பொருள் கொண்டு, சிரியன் கிறித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் அதுவாகும் என்று கருதுகின்றார்கள்.

கொச்சி யூதர் பட்டையம், கருதப்பட்டு வருவது போல், அத்துணைக் காலப் பழக்கம் உடையது அன்று, என்பது, பேராசிரியர்கள், திரு வெங்கய்யா, திரு கில்ஹாரன் முதலியவர்களின் கொள்கை. வடமொழிப் பெயர்ப்பு நகல் அசலுக்கு ஒத்திருக்கவில்லை என்றும், போர்த்துக்கல் நாட்டில் இருந்து வரும் இந்தப்பட்டையம் பல வேறுபாடுகளுடன் காணப்படுகின்றதென்றும், அக்காரணங்கள் பற்றி, பட்டையமே உண்மையான தஸ்தவேசு அன்று என்பதும், அவர்கள் நோக்கம். அதில்,"அஞ்சு வர்ணம்" என்று குறித்திருப்பது, நான்கு வர்ணத்தாருக்குப் புறமே, யூதர்கள், ஐந்தாவது வர்ணத்தார்களாகக் கருதப்படுவதற்காம் போலும்! இப்பட்டையத்தின் வாசகநடை, சீரிய தமிழில் அல்லாது, நாடோடித் தமிழில், தஞ்சாவூர் பொறிப்புகளைப் போன்று, ஐந்திற்குப் பதில் அஞ்சு என்றமாதிரியில், இருக்கின்றது என்று, டாக்டர் ஹூல்ட்ஷ் அவர்கள் கூறுகின்றார்கள்.

கொச்சி பட்டயத்தில் (I–26 வது வரி) இடம் பெற்றிருக்கும்,

"செய்யின்ற" என்ற பெயரெச்சம், தமிழ் "செய்கின்ற" என்ற சொல்லையும், மலையாளம் "செய்யுன்ன" என்ற சொல்லையும் பாலம் போட்டு இணைக்கின்றது என்றும், தமிழ்—மலையாள உருமாற்றத்தின் முதல் படி இதனின்று அறியக் கிடக்கின்றது என்றும், எபிகிராபியா இந்திகா, (Epigraphia Indica, Volume III–Page 66. No. II) கூறுகின்றது.

வீரராகவனுடைய மலையாளப் பட்டையத்தில் 13-வது வரியில் வரும் "என்லின்ற" என்ற சொல்லும், மேற்கூறிய "செய்யின்ற" என்றம் சொல் சொல்லும் கதையையே, விளக்குகின்றது.

Epigraphia Indica, Vol IX, பக்கம் 234-ல், ஸ்ரீ வல்லவன் கோதையின் மாம்பள்ளிப் பட்டையங்களைப் பற்றி, ஓட்டிய குறிப்புக்கள் காணப்படுகின்றன; பொதுவாக, தமிழ்ச் சொற்கள், நாளடைவில், விகாரப்பட்டு வரும் முறையை அறிந்து கொள்ள அக்குறிப்புக்கள் உதவுகின்றன. சில உதாரணங்கள் இவை:—

இருந்நருளி	—	எடத்து வச்சு
பட்டார்கார்க்குள்ள	—	பட்டாகார்க்குள்ள
அரிசி	—	அரி
முருங்கையூர்	—	முருன்னையூர்
சங்கரன்	—	சன்னரன்
ரெக்ஷித்து	—	ரக்ஷிச்சு

மலையாளக்கரைக் கொச்சைச் சொற்கள் விரவிய தமிழ் நடையில், இப்பட்டையங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாக, திரு து. அ. கோபிநாத ராவ் எம். ஏ. அவர்கள் கூறுகின்றார்கள்.

திருவாங்கூர் ஸ்டேட் மானுவல், வால்யூம் I—பக்கம் 177-ல், திரு. வி. நாகமய்யா, பி. ஏ: எப் ஆர்-எச்-எஸ். அவர்கள், மலையாள நாட்டில், அது வரை, கண்டெடுக்கப்பட்ட 450 சிலா லேகங்களில், 425 தமிழில் செதுக்கப்பட்டிருக்கின்றன வென்று கணக்கிட்டிருக்கின்றார்கள். இவற்றில், 252 சாசனங்கள் தற்காலத் தமிழ் அகர வரியில் எழுதப்பட்டிருக்கின்றன வென்றும், 84 வட்டெழுத்திலும், 12 கோலெழுத்திலும், 77 பழந் தமிழிலும், வரையப்பட்டிருக்கின்றன வென்றும், குறித்துள்ளார்கள்.

980-ம் கொல்ல வருடம் வரையும், சட்ட பூர்வமாக பத்திரங்களில், தமிழ் மொழியே, பயன் படுத்தப்பட்டிருக்கின்றது. இன்று காறும், பொது மக்களிடை, பண இடைபாட்டு ஆதாரங்களில், தமிழ்ச் சொற்களே இடம் பெற்று வருகின்றன.

இனி, கலாசாரம், பழக்கவழக்கங்கள், ஸ்தல ஸ்தா பனங்கள், சமயக் கோட்பாடுகள், முதலிய வற்றின் ஒருமைப் பாட்டை உணர்ந்து கொள்வது மாத்திரமே, வேண்டப்படுவது.

வெளித் தோற்றத்தில், சற்று முரண் பாடு உடைய தாகக் காணப்படுவது, மலை நாட்டு மக்களிடை இன்று காறும் நின்றுஉலவும் காந்தர்வ மணமுறையே. காதல் மணமென இதனைக் கொள்வார் சிலர்.

''அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்பனுர் புலவர்''

என்பது, இறையனுர் அகப்பொருள் சூத்திரம்.

'அன்பிறுடைய ஐந்திணையிற் களவெனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மக்கட்கோடலாறென்னும் எட்டினுட் கந்தருவர் ஒழுகலாரெுப்பது. அதனைக் கள வென்று சொல்லுவர் கற்று வல்லோர்'', என்பது இச் சூத்திரத்திற்குப் பொழிப்புத் திரட்டல்.

"காந்தர்வம் என்பது, இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம். அதனை, யாழோர் கூட்டம் என்ப".

"கந்தருவரென்பார் ஈண்டுச் செய்த நல்வினைப்பயத் தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது; கந்தருவ வழக்கம். அது கந்தர்வமணம். அதனை ஒப்பதனைக் களவென்று வேண்டும்"

பண்டைத் தமிழ் நூற்களிற் சிறப்பித்துக் கூறப் படும் மணமுறை இதுவே. வள்ளுவர் முப்பாலில் ஒரு பால் காமத்துப்பால். குறுந்தொகை, நற்றிணை, கலித் தொகை, முதலியன இம்மண முறை ஒழுக்கத்தினைச் சிறப்

பித்தற்கெனவே, எழுந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனூர் அகப்பொருள், அகநானூறு, பத்துப்பாட்டில் சில-இவை போன்ற நூற்களின் களவியல் கற்பியல் பாகுபாடுகளில், பாங்கன், தோழி, தலைவன், தலைவி, பரத்தை, செவிலி என்றவர் பெரும் பங்கு பெறுகின்றனர். சிலப்பதிகாரம் கானல்வரி, களவின் பகுதிகளைக் கூறுவது. மணமுறை இவ்வாருக, பெண்கள் தாயமே, ஒழுங்கு முறையாகும். பொருள், பெண் உடைமை ஆகும், ஆண் உடைமை ஆகாது, மக்கட்கும் மன்னர்கட்கும் இதுவே பொது நியமம். பண்டைத் தமிழ்உலகில், இதுவே சட்டமென்று அறுத்துக் கூற ஒண்ணுது. கற்ருேரிடைத் தர்க்கங்கள் நிகழ்ந்த வண்ணமாயிருக்கின்றன. கொள்கைகள், நிலைபெறவும் நிலை குலையவும், செய்கின்றன.

நிற்க. தமிழ் மக்களிடை வழக்கிலிருக்கும் சிற்சில பழமொழிகளும் சொற்களும், அவற்றின் வரலாறுகளும், தமிழ் நாட்டின் கண், இங்கும் அங்கும் சிதறுண்டு வாழும் சிற்சில குடிமக்களிடை, நிலைத்து நிற்கும் பழக்க வழக்கங்களும், நீண்டு கிடக்கும் வழியில் இடர்ப்படும் இருட்டைப் போக்குகின்றன. "மாமன் சொத்துக்கு மருமகன் உடையாளி", "மாமனைப் போல் மருமகன்"; பெண் கொடுத்த மாமன்; பெண் கொண்ட மருமகன்; மாமன்; மருமகன்; இவை போல்வன சிறந்த வழிகாட்டிகள்; ஆய்வுகூட, ஆய்வுகள,க் கருப்பொருட்கள்.

மணமுறை வரலாற்று நிரலில், ஒரு கட்டத்தில், பரத்தையர் கொடுமையும் கண்டிக்கப்படுகின்றது. அகநானூறு, ஐங்குறு நூறு, நற்றிணை, முதலியன, தக்க சான்று பகர்கின்றன. வேறு ஒரு நிலையிலிருந்து காண்பார்க்குக், கீழ் வரும் சித்திரம் தென்படும். பெண்ணின் மனதைப் பொறுத்தது மணம். மணத்திற்குக் கால வரம்பு கிடையாது. மணத்தலை, மனம் போல் அறுபடலாம். குடும்ப நிலையை ஒட்டிக் கணவன் ஒருவனே

ஆவன்; அதிகம் கூடாதென்று விதி விலக்கு இல்லை. கைம்பெண் நோன்பு மதிப்பிற்கு உரியதாகும். (உ-ம். இறையனார் அகப்பொருள் உரை. பக்கம் 14); உடன் கட்டை ஏறுதல் பெரிதும் போற்றப்பட்டது: (புறப் பொருள் வெண்பா மாலை, காஞ்சிப்படலம், ஆஞ்சிக் காஞ்சி; தொல்காப்பியம், பொருள் அதிகாரம் 79-ம் சூத்திரம்; செந்தமிழ், தொகுதி III, பக், 88; புறநானூறு, செய்யுட்கள் 241-242, ஆய் அண்டிரன் உரிமை மகளிர் உடன் கட்டை ஏறின செய்தி; சோழவம்சச் சுருக்கம், பக். 12. இரண்டாவது பராந்தக மனைவி வானவர் மாதேவி உடன் கட்டை ஏறி மாண்டது.......................... திருநெல்வேலி ஜில்லா வின் கீழ்நாட்டில் வாழும் செவளைப் பிள்ளைமார், கோட்டைவளைப் பிள்ளைமார், தஞ்சாவூர் ஜில்லாவில் ஆளுடையார் கோவில் சமீபம் வாழும் அரும் பூத்தி வெள்ளாளர் இவர்களிடைப் பெண்தாயமும் பெண் உரிமையும் அதிகமாகக் காணப்படுகின்றன. நீலகிரியில் வாழும் மலைச் சாதியாரி (உள்ளாடர், வேடர், பளிஞர்)டம், பெண் வழிக் காணி தான் முறை.

இங்ஙனம், இன்னோரன்ன பலப்பல மனச்சித்திரங் கள் முறையே வரைதல் கூடும். காரிய காரணங்களை யும் வகுத்துக் கூறுதலும் இயலும்..... ....

ஆரியர் தமிழர் கூட்டுறவின் பயனாய், மானிட வாழ்க்கை உறுப்புக்கள் ஒவ்வொன்றும் பாதிக்கப்பட்டு, அவ்வழி இருபான்மையர்க்கும் நன்மையும் தீமையும் எய்தியுள்ளன. மணமுறை வழக்கு மாற்றங்களின் தன்மை யையும் அளவையும், ஒருவாறு மதிப்பிடுதற்குப் போதிய அடிப்படைகள், தமிழில் மிகப்பழைய நூலாகிய தொல் காப்பியத்தினின்று, ஒரு சிறிது பெறப்படுகின்றன.

"மேலோர் மூவர்க்கும்
புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய
காலமு முண்டே

(தொல். பொ-கற். சூ. 144.)

இது முதனூழியில் வேளாளர்க்குரியதோர் இலக்கணம் கூறுகிறது.

பொய்யும் வழுவும்
    தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர்
    கரண மென்ப.

(தொல். பொ. கற். சூ. 145)

இது வேதத்திற் கரணமொழிய ஆரிடமாகிய கரணம் பிறந்த வாறும் அதற்குக் காரணமும் கூறுகிறது".

மேற் போந்த சான்று வெளிப்படையாய்க் கூறுவது இது. வழக்கிலிருந்த மணமுறை, இன்னல் விளைத்தது. இதனை ஐயர், தடுத்து, ருஷி சம்பந்தமான தம்முடைய மண முறையைப் புகுத்தினார்.

காந்தர்வ மணத்தின், பின்னர்க் கொடுமையும் வகையும், வந்துற்ற வாறும் காலமும், இன்னல் நீங்க ஐயர் செய்த முறையும் திருத்தமும், விரிவுபட இந்நூல் கூறுவிடத்து, அவற்றை ஊகித்தறிதலே கடனாகின்றது.

இன்றையத் தமிழகத்து மணமுறை நாடக மேடைத் திரையில், காந்தர்வ மணமுறை இறந்துபட்டு, அந்த இடத்தில், ஆரியருடைய பிராஹ்ம மணமுறை வேரூன்றி நிற்பது, கண் கூடாக் காட்சி.

இது கிடக்க. தமிழ் நாட்டில் வழக்கிலிருக்கும் இத் தொடர் மொழியின் உட்கிடக்கை இத்தருணத்தில் உணரற் பாற்று.

"தாலிகட்டுக் கலியாணம்"- உண்மையிற் கணவனுகாது பேர்மாத்திரையில் ஒருத்திக்கு ஒருவன் தாலி கட்டும் ஒருவகைச் சடங்கு. Loe-Tamil Lexicon பக். 1848.

"கட்டுக்கலியாணம்"- தாலிகட்டும் கலியாணம்-ஷை.- பக் 651.

"பொட்டுக் கட்டுதல்"- கோயிற்கு ரிமையாகித் தாசிக்குத் தாலி கட்டும் சடங்கு.

ஷை-பக். 2914 விரிவு வேண்டப்படுவதன்று.

என்றால், மலைநாட்டிடை, பெண்கள் தாயமான "மருமக்கள்தாயம்", அரசனுக்கும் ஆண்டிக்கும் பொதுச் சட்டமாக, இன்றும் இருந்து வருகிறது. தமிழ் மாந்தரிடை அறவே மறைந்த காந்தர்வ வழக்கு, மலையாள மக்களிடை "(செ)கட்டுக்கலியாணம்" என்ற ஒரு சடங்கால் பிணைக்கப்பட்டு இன்றும் நிலைபெற்று நிற்கின்றது. தர்ம சாஸ்திரத்தில், தகப்பன் வழியிலும் தாய்வழியிலும் எழுமையும் கழிந்த பின்னரே, மணம் நிகழக்கூடு மென்று வரையறுத்துள்ளார் ஆன்றோர். ஆனால், திராவிடர்க்குள், உடன் பிறந்தான் உடன் பிறந்தாள் மக்களிடையே மணம் ஏற்பட வேண்டு மென்று சோதிடசாத்திர கிரந்தகர்த்தா விதித்துள்ளார். ஜாதகப்பொருத்தம் வேண்டாம். வேறு மாதிரியான கலியாணம் கூடாது. இக்கொள்கை, மருமக்கட்டாயத்தையும் மக்கட்டாயத்தையும் ஒருமைப் படுத்த எழுந்த முயற்சிகளின் பாற் படும். ஆரியர்களுடைய தெய்வ வழிபாட்டில், "யாகம்" மேலான நிலை அடைகின்றது. பதினெட்டு வகைப்பட்ட வேள்வியில் ஒன்றாகிய 'சோமயாக' த்தின் ஒரு பிரிவு, 'பவுண்டிரிகம்' என்ற பேர் உடையது; கைம்பெண் மணத்தைத் தடை செய்யாது இவ்வேள்வி. வேள்வித் தீயில் "அவி" சொரியப் படும் தருவாயில் ,மணம் நிகழ வேண்டுவது நியமம். என்றால், இம்மணத்தின் வழித்தோன்றல் சங்கல சாதியாகும்.

பொதுவாக, ஆரியரிடை "விதவை விவாகம்" நிலைத்திருந்த காலமுண்டு. மிகப் பழையது எனக் கருதப்படும் ருக் வேதத்திலே-10-ம் மண்டலம், 18-ம் சூக்தத்தில், தகுந்த மேற்கோள் உளது. "பரபூர்வை" என்னும் வட சொல்லிற்கு "புனர்விவாகம் செய்தவள்" என்று பொருள். (Lis of Revenue Terms in use in South India—Robert Fisher) "பௌனர்ப்பவன" என்ற வடசொல்லிற்கு, தமிழ் வெக்ஸிகனில், தர்ம சாத்திரத்திற் கூறப்படும் புத்திரர் பன்னிரு வகையினருள் ஒருத்தியிடம் முதல் கண

வனுக்குப் பிறந்தவனும் விதவையான பின் அவனை மணந்த இரண்டாம் கணவனால் மகனாகக் கருதப்படுவனுமான புத்திரன்'' எனப் பொருள் காணப்படுகிறது. "திதிஷு"வுக்கு ஒருத்தியின் இரண்டாம் கணவன் என்று பொருள். மனுதர்ம சாத்திரத்திலும் கைம்பெண் மணம் கையாளப் பட்டிருக்கின்றது. சந்ததிகளுக்கும் பழிப்பில்லை.

வெண்ணிற உடை, கழுத்தில் தாலி அணியாமை, மஞ்சள் பூசாமை, கூந்தலில் பூச்சூடாமை, நெற்றியில் குங்குமம் தரியாமை—இவை போன்ற கைம்பெண் ஒழுங்குகள் மலையாளப் பெண்களிடமே நிலைபெறுகின்றன பழையன புதியன இறந்தன இருக்கின்றன இவைகளைப் பொருத்தி, ஊகம் விட்ட வழி, காரிய காரணங்களை ஆய்ந்து அறிதலே, சாலும். சில வெளித் தடங்கள் மேற் கூறிய குறிப்பில் தரப்பெற்றிருக்கின்றன. அறிவின் மிக்கார், இச் செய்திகளை பயன்படுத்தவோ, புறக்கணிக்கவோ, செய்வது நெறியாகும். களவு-கற்பு-ஒழிபு—வல்லான் - வகுத்தவழி-இடர்-(நெ)கட்டுக்கலியாணம்-ஆரியர்யாகம்—கைம்பெண் கோலம்—கரணச்சீர்முறை—வாழ்வுத்திட்டம்: இவை மலைநாட்டு மணமுறை வரலாற்றுத் தடங்களாவன. எனவே, மணமுறையிலும், மலைநாட்டில் பண்டைத் தமிழ் மணம் தனித்து கமழ்கின்றது.

ஆணும் பெண்ணும், தலையை உச்சியிலேயே முடிந்தார்கள். மலையாளத்தில், ஆண்களின் முன்குடுமியும் பெண்களின் உச்சிக் கொண்டையும் இன்றளவும் காணக் கூடியனவே. தமிழ் நாட்டுத் திருக் கோவில்களில் காணப்படும் கற்சிலைகள், ஆரிய இருடிகளின் படிவங்கள், பண்டைக் காலத்து மக்கள் கூந்தலைக் கட்டும் முறையை, விளக்கும்.

பெண்களுக்கு மேலாடை காணப்பட்டிலது. இவ்வுண்மை மலைநாட்டிற்குப் பொருந்தும். கம்பராமாயணம், கிளியாட்டுப் படலம், 136-ம், செய்யுள் இவ் வழக்கத்

தை விளக்குகின்றது. செம்பஞ்சுக் குழம்பாலும், வாசனைக் கலவையாலும் மங்கையர் மார்பை; மறைத்தனர். நகைகளால், மறைத்தனர், மேன்மக்கள்.

வடிந்த காது ஆணிற்கும் பெண்ணிற்கும் பொது. நடுத் திருவாங்கூரில் காணப்படும் புத்தர் கற்சிலைகளிடத்தும், கோவிந்தாசாரியரது புத்தகத்தில், காணப்படும் ஸ்ரீ ராமானுஜாசாரியருடைய படத்திலும், ஆறு கட்டி சுந்தர வேடம் பூண்ட காவிஉடை தரித்த சடைத் தம்பிரான் மார்களிடத்தும், வடிந்த காது காணப்படும். "குழைக்காதர்" என்ற ஒரு வகுப்பாரும் உளர்.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்", என்பது இன்றும் மலை நாட்டிற்கு ஏற்புடைத்து.

ஆருடுதல், கடலாடுதல், பழந்தமிழ் வழக்கங்கள்; (மதுரைக்காஞ்சி. வரி 427), சிலப்பதிகாரம், புகார்காண்டம், இந்திரவிழவூரெடுத்த காதை, கடலாடு காதை, உட்கருத்து, திருவனந்தபுரத்து ஆருட்டுக் காண்பவர்க்கு நன்கு புலப்படும். "ஆருட்டுப்புழை" ஆருட்டும், "திருச்சிவபேரூர்" பூரத்திருவிழாவும், பண்டைத்தமிழ் வேரில் நிலை கொண்டவையே.

வெண்மணல் விரித்தல், பண்டைத் தமிழ் வழக்கம். (திருவாய்மொழி, நாச்சியார் திருமொழி, பக்கம் 69-71, "தையொடு திங்கள்...........விதிக்கிற்றியே". "வெள்ளை நுண்மணல்..............கள்ள மாதவா கேசவா உன் முகத்தனக ண்க னல்லவே".)

குரைவைக் கூத்து-திருமாலைக் குறித்து ஆடும் கூத்து, (ராஸக் கிரீடை-என்பது)-மலையாளத்தில் இன்றும் நடைபெறுகின்றது. "காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் வட்டமாக நின்று கைபிணைந்து ஆடும் கூத்து" குரவைக் கூத்து (மணிமேகலை-பக்கம் 382.)

தமிழ்நாட்டுப் பண்டைத் "திருவெம்பாவையும்", "திருப்பள்ளி யெழுச்சியும்" மலையாள நாட்டுத் "திருவாதிரைக்களி" யாக ஒட்டியும் வெட்டியும் எஞ்சிநிற்கின்றன. "திருவாதிரைப் பாட்டும்," "ஓணப்பாட்டும்", பண்டைத் தமிழ்ப் பாட்டுக்களின் மூடுகளே.

மலைநாட்டுத் "துடித்தல்" பண்டைத் தமிழ் மக்களது காலைக் குளியின் முளையோ?

"ஆர்ப்புவிளி," பழந்தமிழ்ப் போர்ப் பேரோசையே.

"பறை," "இடங்கழி," "நாழி," என்னும் முகத்தளவைகளைத் தலைவெட்டி அளத்தல் மலையாள நாட்டின் இன்றைய வழக்கம்: (சிலப்பதிகாரம்-மதுரைக்காண்டம், ஊர் காண் காதை-வரி 208.)

"சாக்கையன் கூத்து" மலை நாட்டில் இன்றும் நடைபெறுகின்றது. "பறையூர்க் கூத்தச் சாக்கையன்' சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுநற்கதை, வரி 76-77.

"ஓட்டம் துள்ளல்" "கதைகளி", இன்றளவும் மலைநாட்டில் கூத்தம்பலத்தில் நிகழ்பெறுவன.

"குருதி கொடுத்தல்", பண்டைய வழக்கம்.

சேரசோழ பாண்டியரிடையில் கொள்வனை கொடுப்பனை ஒரே தரத்தில் நிகழ்ந்தேறிற்று. மக்கள் எல்லோரும், ஒரே வகுப்பினர், ஒரே சாதியினர், ஒரே சமயத்தினர், ஒரே வம்சத்தினர், ஒரே கூட்டத்தினர்

திரு, கனகசபைப் பிள்ளை அவர்களுடைய "1800 வருடங்களுக்கு முன்புள்ள தமிழர்கள்", என்னும் நூலின் 113-ம் பக்கத்தில், தமிழ் மூவேந்தரும் "வெள்ளாளர்" என்று கூறப்பட்டிருக்கின்றது. கொச்சி நாட்டுச்சரித்திர ஆசிரியரும், தமது நூல் 146-147-ம் பக்கங்களில் இந்த உண்மையைப் பின் தாங்கு கின்றார்.

நாயர் மரபில் உயர்ந்த வர்க்கம் "வெள்ளாய்மை" எனப்படுவது. பண்டைச் சேரநாட்டு வெள்ளாளரே இவ் வர்க்கத்தினர்.

"வேலன் வெறியாட்டும்," (இறையனுர் அகப்பொருள் உரை 14-ம் சூத்திரத்திற்கு விருத்தியுரை), "துடிநிலை வெறியாட்டும்", (புறப்பொருள் வெண்பாமாலை-வெட்சிப்படலம், 21-ம் செய்யுள்), "வெறிக்கூத்தும்" "வள்ளிக்கூத்தும்", (புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், 41-ம் செய்யுள், பெருந்திணைப்படலம், 10-ம் செய்யுள்), மலைநாட்டில் இது காறும் எஞ்சி நிற்கின்றன. வட மலையாள நாட்டில், "வேலன் இல்லா, தேசம் இல்லா" என்பது ஒரு பழமொழி. அங்கு, "வேலன்" மார்க்கு உரிமையும் உடைமையும் ஏராளமாயுள்ளன. "வேலன் (முருகன்) வழிபாடும்" மலைநாட்டில் அதிகம். எல்லாத் தெய்வங்கட்கும் எல்லா நாட்களிலும் "காவடி-கட்டும்" "காவடி-எடுப்பும்" வழிபாடுகளாகின்றன.

"பகவதி சேவை" என்னும் பெயர் பூண்ட கடவுள்-சேவை சமணக்-கண்ணகி வழிபாட்டின் விளைவே.

வைணவச்-சைவ-சம்மந்தங்கள், முறையே பகவதி அம்மனுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. பகவதி மலைநாட்டுச் சிறப்புத் தெய்வம். "களம் எழுதுதலும்", "அறம் பாடுதலும்", "தூக்கமும்", "துள்ளலும்", "குதிரைக்காட்சியும்", "அன்னக் காட்சியும்," பகவதி வழிபாட்டுப் பண்டைய உறுப்புக்கள். "சாத்தனும்", மலைநாட்டுச் சிறப்புத் தெய்வம்; சமண-புத்த தெய்வம். தமிழ் நாட்டின் பெரும்பாகத்திலும், ஒரு காலத்தில் மல்கிக் கிடந்த வழிபாடு இன்று மலைநாட்டில் மாத்திரம், மும்மரமாய் நின்று வருகின்றது. வருடந்தோறும், தை மாதப்பிறப்பு 'விளக்கு' க் காண, 'சவரி' மலைக்குப் போகும் திரள், அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

"துலியம் சார்த்தலும்", "நீட்டுக்கொடுத்தலும்", "துலாபாரமும்", மன்னர் பிறந்த நாட் பெருவிழாக் கொண்டாட்டமும், பழந்தமிழ்ச் சின்னங்களே.

தகப்பன் பெயரைச் சேர்த்துச் சொல்லுதல் பண்டைத் தமிழ்மரபு. "வீரசோழியம்" சங்கரன்—சாத்தன், "நற்றிணை", சேந்தன்-குமரனார், சேந்தன்-கூந்தனார், கூற்றங்குமரனார், பூதம்புல்லனார்- சில எடுத்துக்காட்டுக்களாவன. மலைநாட்டில் "இரட்டைப் பெயர்" என்று இதை வழங்குகிறார்கள்.

'நாயர்', என்னும் சொல்லைப்பற்றியுள்ள சில குறிப்புக்கள் மாத்திரமே எஞ்சி நிற்பன. 'நாகர்' என்னும் வடமொழிச் சொல்லடியாகப் பிறந்த சொல்லன்று நாயர். "அஸ்ஸாம்" அல்லது "பெலுசிஸ்தான்" முதலிய நாடுகளினின்றும் வந்து, நாயர், மலை நாட்டில் வேரூன்றியவராகக் கொள்ளுதலும், துரானிய—இந்தோ-சீதிய வம்சக்காரர்களின் வார்சுகள், நாயர், என்று கொள்ளுதலும், சரித்திரச்சான்றுகள் அற்றன. நேபாளம் 'மேவார்' மலைநாட்டு நாயர்களாக மாட்டார்கள்.

நாயாட்டுக்காரரை—நாயர்-என்று, குஞ்சன் நம்பியார் சொல்வது, பொருத்தமற்றது. பொதுவாக, வேடர்க்கு நாய்ர் துணை. வேடர்க்கு, நாயர் என்ற சொல், முன் காலத்திலும் பின் காலத்திலும், சரி-சொல்லாகக் கையாளப்பட்டதில்லை. "நாயாட்" க்கு வேட்டையாடுவோன் என்று பொருள் உண்டு. திருவாங்கூரிலுள்ள காட்டுச் சாதியார்க்கு நாயாடி என்ற பேர் உண்டு. மேலும், தமிழ் மக்கள், பண்டு பண்டைய அநாகரிக—வேட—வாழ்விலிருந்து விடுபடாத நிலையை ஒட்டிய காலத்து, வழங்கிய சொற்களில் ஒன்ருக, இதனைக் கருதின், அச்சொல், மலை நாட்டில் மாத்திரமே, வழக்கில் நிலைத்து நிற்கத், தக்க காரணம் காணப்படவில்லை.

"நாயக்" என்பது மகாராட்டிரம். "நாயகன்"-இருபது யானைகட்கும், இருபது குதிரைகட்கும், தலைவன். ஒரு சேனு நாயகனது பட்டம் முற்கூறிய நாயக் ஸ்தானம்.

போர்த்துறை அலுவலாளன் (ர்)நாயகன்,(நாயகர்). கோட்டைமதில் நாயகன்" என்பவன் கோட்டை மதிலைக்காக்கும் தலைவன்.

முல்லைத் திணை ஆயரே மலை நாட்டு நாயர் எனக் கோடல் சாலாது. 'ந' என்ற இடைச்சொல்லிற்குக் காரணமும் பொருளும் உற்றவாறு காண்டல் அருமையாகும்.

'நாயடு' என்னும் ஆந்திரச் சொல் 'நாயக்' அடியாகப் பிறந்தது. நாயகன்(நாயகர்) குறுகியது நாயர்; நாய்த்தி, நாயித்தி-நாயன் என்பதன் பெண்பால். 'கோமாக்கோட்டு நாய"ரும் 'கோயிற் புறத்து நாய்த்தியா' ரும், என்று திருவாங்கூர் ஹஜூர் பட்டயத்தில் குறிக்கப்பட்டிருப்பினும், நாய்த்தி என்ற வழக்கு, மிகவும் அரிதிலேயே காணப்படுகின்றது.

நாயர் என்ற சொல்லிற்கு போர்த்துறைப் பொருத்தம் கண்டு, பொருள் கொள்ளின் மலைநாட்டு மக்களது போர் வாழ்க்கையை ஒட்டி, இதுகாறும் வெளிவராத பல வரலாற்றுக் குறிப்புக்களும், இனியாவது, வெளிவர வேண்டியதுண்டு. மலைநாட்டார் ஒவ்வொருவர்க்கும், ஒருங்கே ஒவ்வுமாறு, "போரே வாழ்க்கையின் உயிர் நாடி" என்பது, முதன் முதலாக அமைந்தாலன்றி, இத்தோற்றுவாய் நிலையுறாது.

திருவாங்கூரின் வடபாகத்து ஆலங்காட்டு ராஜாக்களிடம் சேனைத் தலைவர்களாக வாழ்ந்து, தற்பொழுது, கள்ளிக்கோட்டை வட்டாரத்தில் உறையும் ஒருசாரார்க்கு, நாயர் என்ற பட்டத்திற்குப் பதிலாக, "நாயகர்" பட்டம் உளது.

"நாயன்" என்பவன் தலைவன்; மக்களிற் சீரியன் எனினும் அமையும். வடமொழியில், "புருஷசிரேஷ்டன்" என்ற சொல்லால் இவனைக் குறிக்கலாம். தமிழ் அறுபத்து மூவரும் சிறந்தவர்களே, உத்தமர்களே, நாயன்மார்களே. என்றால், அவர் அனைவரும் ஒரேஜாதியினர் அன்று;

ஒரே குலத்தினர் அன்று, ஒரே இனத்தினர் அன்று; எனின் ஒரு கலப்புக் கூட்டத்தினர். ஆயினும், ஒரே கோட்பாட்டினர், அனைவரும்; ஒரே வழியில் சென்று உண்மை கண்டவர். நாயர் என்ற சொல், (இப்பொருளைத் தன்னகத்தே கொண்டது என, உன்னுதல் நன்றாகும்). நாயர் வகுப்பினர் ஒரு நாட்டு மக்கள். எனின், பல பிரிவினர். பல தொழிலினர், பல்வேறு வாழ்க்கைத் துறைகளின்பாற் பட்டவர். இறை நாயர், படை நாயர், கிரியத்து நாயர், பள்ளிச்சான் நாயர், விளக்கித்தலை நாயர், வெளுத்தேடன் நாயர், முதலாயினர் எல்லோரும் நாயன்மார்களே. பாலக்காட்டில் உள்ள 'வேங்கையில்' என்ற ஒரு புராதன வீட்டார்க்கு, 'நாயனார்' என்ற பட்டம் இன்றும் இருந்து வருகின்றது. நாயனை, மேன் மகன் என்றாலும், ஒக்கும். மேன் மகன், மேனவனுவன், மேனோனுவான், மேனனுவான்.

ஒரு வகுப்பாரைக் குறிக்க, ''நாயர்'', என்னும் சொல் தமிழ் இலக்கிய வானில், இடம் பெறவுமில்லை; பழைய கல்வெட்டுக்களில், காணப்படவுமில்லை. ஆகவே, ஆரிய மொழியிடத்து அளவு கடந்த பற்று, மலையாள மக்கட்கு உண்டான காலத்து இடைச்செருகல் ஆக வேண்டும், இப்பதம். 'பிள்ளை' என்ற பட்டத்தைத் துறந்து, ''நாயர்'' என்ற பட்டத்தை ஏற்ற பலரும், இந்நாளினரே. ஆனால், பெண்பாலார் சிலர்க்கு பிள்ளை என்ற பட்டம் இன்றும் நிலைத்து வருகிறது. நாயர் அல்லாதார் பலரும் மலைநாட்டிடை வாழ்கின்றனர். இவரில் பழங்குடிகளும் உண்டு.

''வேணாடு'',என்பது கொடுந்தமிழ் நாடுகளிலொன்று. இதை 'வேள்-நாடு' எனக்கொண்டு துவார சமுத்திரத்திலிருந்து வந்த 'வேளிர்' ஆண்ட நாடாகக் கொள்வார் உளர். "வேல்நாடு = தலைவர் நாடு" என்பதும், பொருந்தும். வேளாளர் என்ற சொல் வேலின் அடியாகப் பிறந்ததாயின், அவ்வகுப்பார் நாயகர் ஆவார். இக்கூற்று

நிலைக்குமாயின், வேளாளரே நாயர் என்பது, பொருந்தும், வேளாளருக்கு, ஆரியப் பரியாய நாமம், நாயர்.

நாயர் என்ற சொல்லிற்குத் தோற்றுவாய் எது விதத்திலிருந்தாலும், அப்பெயருக்கு உரிமை கொண்ட மக்களும், தமிழ் நாட்டில், பல பெயர்களுடன் வாழ்ந்துவரும் பல பிரிவு மக்களும், அவர் அவர் மூதாதையர்கள் வழி. ஒரே வகுப்பினர் என்பது பெற்றும். தமிழ் நாட்டு மக்களும், மலையாள நாட்டு மக்களும், மொழி, இலக்கியம், பழக்க வழக்கம், நடை, உடை, பாவனை, நாகரிகம், கலாச்சாரம், பொருளாதாரம், ஆத்மீகம், அரசியல், முதலிய எல்லாத் துறைகளிலும் பிரிக்கமுடியாதவாறு, ஒருமித்துப் பிணைக்கப்பட்ட, ஒரு மரபினரே.

இறங்கு வரிசையிலாயினும் சரி, ஏறு வரிசையிலாயினும் சரி, நூற்றிற்கு அதிகம் உளதாகக் கருதப்படும் உட்பிரிவுகளடங்கிய ஒரு இனத்தாரிடத்து, மானிட—உடல்-அளவுச்-சர்ச்சை, பிழையற்ற புள்ளி விவரங்களைத் தரும் என்பது, நேராகாது.

தமிழ் மூவேந்தர்கள் வரிசையில், சேரன், முதலிடம் பெறுகின்றான். புறநானூற்று முதற்செய்யுள் சேரமானைப் பற்றியது. நட்புத் தளை மூவேந்தரிடமும் குடிகொண்டிருந்தது. எழுச்சியும் வீழ்ச்சியும் ஒருங்கே எல்லோரையும் பிணைத்தது, அவர்களிடை கடும்போரும் நிகழாதிருந்ததில்லை. என்றாலும், நாகரிகமும் ஒன்றே. வாழ்வும் ஒன்றே. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" 'விசுவம் பவதி ஏகநிடம்; என்ற உணர்வே நிலைத்திருந்தது. தனித்தமிழ் நாகரிகம் நிலைத்திருப்பதும் மலையாள நாட்டிடத்தே தான். பண்டைத்தமிழ் மன்னரின் மரபு நிலைத்திருப்பதும் மலையாள நாட்டிடத்தேதான். அம்மரபின் வழித்தோன்றலே, சித்திரை மன்னன். அம்மன்னன் ஒருவனே, தனித்தமிழ் மன்னனுவான். அம்மன்னன் ஆளும் நாடு, உயர் தனித் தமிழ்நாடு. அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தூய தனித்தமிழ் மக்களே.

விஜயலக்ஷ்மி பிரஸ்,

நாகர்கோவில்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	1	நாவலூர் பதியில்	நாவலூர்ப் பதியில்
5	25	செய்கி	செய்தி
37	28	மொழியலாத	மொழியல்லாத
40	6	தெய்வக்கொள்கை	தெய்வங்கொள்கை
	27	வெண்பாவில் விடப்பட்டிருக்கும் முதல் வரி இது:– "தென்பாண்டி குட்டங்குடங் கற்கா வேண்பூழி	
,,	31	வெண்பாவாலறிக.	வெண்பாவாலறிக"
41	24	தாழிவையே	தாமிவையே.
42	7	தகுமோ ....?	தகுமோ, தகாதோ...........?
43	27	இயல்பு	இயல்புகள்
52	5	எறன்	என்ற
53	11	காட்டக் தமிழ்	காட்டத்தமிழ்
59	28	தொங்கி	தொக்கி
60	30	மெதுவானப்போக் காலும்	மெதுவான போக்காலும்
61	9	படி ஞாயிறு	படுஞாயிறு
63	1	வேறு, உதாரண மாக, நூற்களும்	வேறு, உதாரணமாக
,,	19–21	பல...................... .... மூளைத்துள்ளார்கள்	இவ்வரிகளை விட்டுவிடவும்
64	30	மருதிடந்தும்	மருதினடந்தும்.
74	7	"வரு" ம்	"வரும்"

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்
86	5	ஞாயிறு படி	ஞாயிறு படு
88	28	பொருட், களை	பொருட்களை
91	22	கேட்ப் உயிர் பெற்றது	உயிர் பெற்றது.
105	10	பராந்தக மனைவி	பராந்தகன் மனைவி
106	27	Loe-Tamil	Loc-Tamil
	30	கோயிற்குரிமை யாகித் தாசி	கோயிற்குரிமை யாக்கித்தாசி
	31	டை., பக். 2914.	(டை பக்கம் 2914)
107	29	Lis of Revenue	List of Revenue
	31	தமிழ் வெக்ஸி	தமிழ் லெக்ஸி
112	18	நாய்ர்த்துணை	நாய் துணை
	20	"நாயாட்" க்கு	"நாயாடி" க்கு
114	4	(இப்பொருளைத்.... ....நன்றாகும்)	இப்பொருளைத்...... ....நன்றாகும்
108	12	பழையான புதியன இறந்தன. இருக்கி றன இவைகளைப்	பழையன, புதியன, இறந்தன, இருக்கின்றன— இவைகளைப்
	22	தனித்து கமழ்கின் றது.	தனித்துக் கமழ்கின் றது